
www.facebook.com/ebooksintamil




https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil

# ஜோதிட சாஸ்திரம்

எம்.வி. பாஸ்கர்

10 கண்ணதாசன் சாலை
தியாகராய நகர்
சென்னை – 600 017

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil

Price : **Rs. 32.00**

**JOTHIDA SASTRAM**

by
**M.V. Baskar**

First Edition : 1984
Second Edition : 1998

Published by
**ANURAGAM**
10, Kannadhasan Salai
T.Nagar, Chennai - 600 017

Laser Typeset
**Kaviraj Computer Graphics**
Chennai - 600 024

Printed at:
Mani Offset, 112, Bells Road, Chennai - 5.
Phone: 8588166 / 8555249.

## பொருளடக்கம்

1. கிரகங்களின் ஈர்ப்பு சக்தி 5
2. ஜாதகக் கணிப்பு - 1 16
3. ஜாதகக் கணிப்பு - 2 30
4. கிரகங்களின் சஞ்சாரம் 41
5. கிரகங்களின் பலன்கள் 52
6. கால பலன்கள் 63
7. பிறந்த மாதப் பலன்கள் 73
8. ஜோதிடத்தின் மேன்மை 82
9. லக்கன பலன்கள் 92
10. பிறந்த நட்சத்திர பலன்கள் - 1 101
11. பிறந்த நட்சத்திர பலன்கள் - 2 111
12. மனத்தின் நிலையைக் கூட அறியலாம் 122
13. பிறந்த ராசியின் பலன்கள் 133
14. தசா பலன்கள் 143
15. பிறந்த வருஷ பலன்கள் 155
16. திருமணப் பொருத்தங்கள் பத்து 168

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil


அநுராகம் வெளியீடுகள்

- கைரேகை சாஸ்திரம் 60.00
- அதிர்ஷ்ட ஜோதிட சாஸ்திரம் 75.00
- அதிர்ஷ்ட ஜோதிடக் களஞ்சியம் 45.00
- பாவங்களும் யோகப் பலன்களும் 65.00
- தசாபுத்தி கோட்சாரமும் அஷ்டவர்க்கப் பலன்களும் 60.00
- கிரகங்களும் யோகப் பலன்களும் 60.00
- ஜோதிட சாஸ்திரம் 1000 கேள்வி - பதில்கள் 50.00
- எளிய முறையில் ஜாதக கணிதம் 75.00
- வெற்றிக்கு வழிகாட்டும் அதிர்ஷ்ட எண் சாஸ்திரம் 50.00
- எண்களிலே உங்கள் எதிர்காலம் 20.00
- எதிர்கால வெற்றிக்கு எண் ஜோதிடம் 18.00
- வாழ்வில் வெற்றி பெற அதிர்ஷ்ட எண்கள் 15.00
- வாஸ்து சாஸ்திரம் 18.00
- தந்திர யோகம் 42.00
- நட்சத்திரங்களும் பல்வேறு யோகங்களும் 20.00
- சாமுத்திரிகா லட்சணமும் அதிர்ஷ்டமும் 14.00
- திருமணப் பொருத்தம் எப்படிப் பார்ப்பது? 15.00
- அங்க மச்ச சாஸ்திரம் 24.00
- கிரகங்களும் தசாபுத்திகளும் 24.00


# ஜோதிட சாஸ்திரம்

## 1. கிரகங்களின் ஈர்ப்பு சக்தி

இவ்வுலகில் ஓர் உயிர் ஜனனமான உடனே இப்பிரபஞ்சத்திலுள்ள மற்ற கிரகங்களின் ஈர்ப்பு சக்தி அதைக் கட்டுப்படுத்தத் தொடங்கி விடுகின்றது.

அதற்குப் பிறகு அக்கிரகங்களின் அசைவுக்கேற்பவே, அந்த உயிரின் நடமாட்டம் ஏற்படுகிறது. இப்படி ஏன் ஏற்பட வேண்டும் என்றால், அதை இயற்கையின் நியதி என்றுதான் சொல்ல வேண்டும்.

அதனால் அந்த உயிர் ஜனித்த நேரத்தைக் கொண்டு, எந்தெந்த கிரகங்கள் எங்கெங்கு உள்ளன என்று கணிக்க முடிகிறது.

அதைக் கொண்டு அந்த உயிரின் எதிர்காலத்தை நிர்ணயித்துக் கொள்ளலாம். அதனால் நம்முடைய எதிர்காலத்தைப் பற்றி ஒன்றுமே தெரிந்து கொள்ள முடியவில்லையே என்று வருத்தப்பட வேண்டாம்.

கோள்கள், விண்மீன்கள் முதலியன ஒவ்வொருவருடைய எதிர்காலத்தைக் காட்டும் அடையாளங்களாக விளங்குகின்றன என்பது உண்மையெனில், இதுபோல் இவ்வண்டத்திலுள்ள மற்ற பொருள்களின் எதிர்காலத்தைக் காட்டும் அடையாளங்களும் இருக்க வேண்டுமல்லவா? அப்படியெனில் இந்த அண்டத்திலுள்ள பொருள்களின்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



வாழ்க்கை வரலாறு முன் கூட்டியே நிர்ணயிக்கப் படுகிறது என்பது உண்மையாகிறதல்லவா?

நம்பினோர் கெடுவதில்லை என்பது உங்களுக்குத் தெரியும். எதை நம்பினோர் கெடுவதில்லை என்ற கேள்வி எழும். நம்பக் கூடாததை நம்பினால் கெடாமல் என்ன செய்வார்கள்? நம்பக் கூடியதை நம்பினால்தான் நலம் பிறக்கும். நம்பக் கூடாததை நம்பாமலும், நம்பக் கூடியதை நம்பத் தவறாமலும் இருக்க வேண்டும்.

இறைவன் - நம்பிக்கைக்குரிய மூலப் பொருள். தாய், தந்தை, குரு - நம்பிக்கைக்குரிய கண்கண்ட தெய்வங்கள். சத்தியம் - நம்ப வேண்டிய அடிப்படைப் பொருள். தரும பலம் புண்ணியம் தரும் என்று இதை நம்ப வேண்டும். இவற்றின் மீது நம்பிக்கை இருந்தால் ஏனைய நல்ல அம்சங்களின் மீதும் தானாகவே நம்பிக்கை ஏற்பட்டு விடும்.

நம்பிக்கையில் முழுமையான ஈடுபாடு வேண்டும். அவ்வண்ணம் முழுமை இருந்தால்தான் முழுமையான பலன் கிடைக்கும்.

கிரகங்கள் நம் நம்பிக்கைக்கு உரியவை. எந்தக் கிரகத்தையும் நம்பிக்கையோடு ஆராதிக்க வேண்டும். விதிப்படிதானே எல்லாம் நடக்கும்; கிரகங்களை நம்பி என்ன ஆகிவிடப் போகிறது என்று சிலர் கேட்கலாம். இங்கேதான் ஆழ்ந்த சிந்தனை வேண்டும். விதிப்படிதான் நடக்கும் என்று சாப்பிடாமல் இருக்கிறோமா? பசிக்கு உணவு தேவை என்று உண்ணுகிறோமே! அதே போன்று இறப்பு தடுக்க முடியாதது என்று அறிந்தும், அதற்காக வாழ்க்கையை வெறுத்து ஒதுக்குகிறோமா என்ன...?



நடக்கப் போவதை எதிர்பார்த்துக் கொண்டே நிகழ்காலத்தை இயக்கிக் கொண்டு போகிற ஆற்றலைப் பெற வேண்டும். அதற்கு வழிகாட்டுவது உண்மை உணர்வுதான். 'உண்மை'யில் நம்பிக்கைக் கொண்டால் செயலில் செழிப்பு ஏற்படும்.

நம்மை ஆள்வது நவ நாயகர்கள். ஒவ்வொரு கிரகமும் தெய்வ தூதர். நாம் நல்வழிப்பட்டு, நம்பிக்கைக் கொண்டு, நேர்மையுடன் நடந்தால் நம்மை ஆளும் அந்த நாயகர்கள் நம் வினைதனைப் பார்த்து, விளைவுகளில் நன்மையைச் செய்ய முன் வருவார்கள்.

முறையீடு என்பது பயன் தரும் ஒன்று. முறையீட்டால் பலன் கிடைக்கும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை வேண்டும். முறையிடுவது என்பது சுலபம் என்றாலும், அந்த முறையீட்டில் நியாயம் வேண்டும். முறையிடுவோரிடம் நேர்மை வேண்டும்.

நம்முடைய செயல்களில் கிரக வழிபாடு அவசியமே! இறைவனைப் பூசிக்க கோயிலுக்குச் செல்கிறோம். இடையில் குருக்களோ, பூசாரியோ ஒருவர் இருக்கிறாரே! அவர்கள் மூலம்தானே காரியங்கள் நிறைவேறுகின்றன. அதே போன்று அதிக ஆற்றல் உள்ள இக்கிரகங்கள் நமக்குத் துணை புரிகின்றன. நம் விதியின் தாக்குதலைத் தணித்துக் கொள்ள கிரக வழிபாடு உதவுகிறது.

நம்பிக்கையோடு சூரியனை வழிபட்டால் ஆன்மிக பலம் உண்டாகும்.

சந்திரனை வழிபட்டால் புத்திபலம் ஏற்படும்.

குருவை வழிபட்டால் தார்மீக பலம் உண்டாகும்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



சுக்கிரனை வழிபட்டால் சுபயோக பலம் உண்டாகும்.

சனீசுவரனை வழிபட்டால் வினைகளை வெல்லும் பலம் ஏற்படும்.

ராகு-கேது கிரகங்களை வழிபட்டால் யோகமும்–ஞானமும் விருத்தியாகும்.

வழிபாடு என்பதை வழிப்படுதல் என்று கொள்ள வேண்டும். நல்வழிப் படுகிறோம் என்று அவர்களிடம் உத்தரவாதம் அளிக்க வேண்டும்.

இதனால் ஒன்று நமக்கு ஏற்படும் தீமைகள் அழிய வேண்டும். அல்லது அத்தீமைகளைத் தாங்கிக் கொள்ளும் மனோபலம் ஏற்பட வேண்டும். நன்மையும் – தீமையும், மகிழ்ச்சியும் – துன்பமும் மனதின் செயல்தானே!

உங்களின் சொந்த ஜாதகச் சக்கரத்தை, உங்கள் வாழ்க்கைச் சக்கரத்தின் அஸ்திவாரமாகக் கருதுங்கள். நவ நாயகர்களால் சுழற்றப்படும் அந்தச் சக்கரத்தின் சுழற்சியிலேயே நீங்களும் சுழல்கிறீர்கள். உங்களைச் சார்ந்தவர்களையும் சுழற்றுவிக்கிறீர்கள். இந்த நவ நாயகர்களில் யார் முதல்வரோ, அவருடைய சட்டளைப்படிதான் நீங்கள் மட்டுமல்ல – மற்ற கிரகங்களும் இயங்கியாக வேண்டும்.

உங்கள் ஜாதகத்தில் எந்தக் கிரகத்தின் நாயகர் எல்லா நிலைகளிலும் பலம் பெற்றிருக்கின்றாரோ, அவர் தான் உங்களுக்கு நவ நாயகர்களின் தலைநாயகர் ஆவார்.

நீங்கள் பிறந்த லக்னத்திற்கு யார் அதிபதியோ, அவரே லக்னாதிபதியாவார். ஜன்ம லக்னம், சந்திர லக்னம் என்று இரண்டு லக்னங்களையும் சோதித்து,



எந்த லக்னமும் – லக்னாதிபதியும் அதிகப் பலம் பெற்றிருக்கிறதோ, அந்தச் சேர்க்கைக்கே முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

இந்த லக்னாதிபதி மிகவும் பலம் பெற்றிருந்தால் இவரே நவ நாயகர்களின் தலைவராகி விடுவார். இவர் பலவீனம் பெற்றிருந்தால், வேறு தலை நாயகர் உங்களுக்கு உதவி செய்யும் பொறுப்பினை ஏற்பார்.

உயிர் தோற்றம், ஆற்றல், பண்பு முதலான எல்லா அம்சங்களுக்கும் சின்னமாக உள்ள சிறந்த இடம் ஜாதகத்தின் லக்னமாகும். இந்த லக்னம் பெற்றிருக்கும் பலமே உங்களுக்கு வாழ்க்கையின் கவசம் ஆகமுடியும்.

இந்த லக்னத்தின் அதிபதி பெற்றுள்ள பலமே உங்களை உயர்ந்த நிலைக்குக் கொண்டு போய்ச் சேர்க்கும் தகுதியைப் பெறும்.

லக்னாதிபதிக்குப் பலம் குறைந்திருந்தாலும், உங்களுக்கு உதவி செய்யும் கடமைப் பொறுப்பு அவருக்கு உண்டு. தாய் நலிவுற்றிருந்தாலும், தன் செல்வக் குழந்தையைக் காக்கும் பொறுப்பைக் கைவிட மாட்டாள் அல்லவா!

இவ்வுலகில் பிறந்த அனைவருமே முன் வினைப் பயனை அனுபவித்தாக வேண்டும் என்பதில் சந்தேகமில்லை. அது நல்லதாகவும் இருக்கலாம்; கெட்டதாகவும் இருக்கலாம். நாம் சுகப்பட்டாலும் சரி, துன்பப் பட்டாலும் சரி, வெற்றியடைந்தாலும் சரி, தோல்வியடைந்தாலும் சரி, அவற்றைப் பற்றிச் சிறிதும் கருத்தில் கொள்ளாமல் நம்மைப் பாதித்துக் கொள்ளாமல், நம் செயல் முறையைச் செம்மைப் படுத்திக் கொண்டு, அதன் வழியில் போய்க் கொண்டிருப்பதே முக்கியமாகும்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



முன்வினைப் பயனால் ஏற்படும் துன்பங்களைக் குறைக்க வழி முறைகளைத் தேடுவதைத்தான் பரிகாரம் என்கிறோம். பரிகாரம் என்று சொல்லப்படுபவை விதியை மாற்ற முடியாதவை என்றாலும், அந்த விதியின் விளைவுகளால் நாம் பாதிக்கப்படாமல் பக்குவம் அருள்வது. பரிகாரம் மழைக் கோட்டு போல - கோட்டு, பெய்யும் மழையைத் தடுப்பதில்லை. ஆனால் அது நாம் அந்த மழையில் நனையாமல் பாதுகாக்கிறது. அதுபோல் மனப் பக்குவத்தை நமக்குத் தருவதுதான் பரிகாரமாகும்.

துன்பத்திற்குப் பரிகாரம் வேண்டுகிற நமக்குத் திருவள்ளுவர் உரைப்பது இதுதான். நாம் தொடர்ந்து நன்மைகளையே செய்து கொண்டிருந்தால் நம்மை எவராலும் அழிக்க முடியாது.

அழிவிற்கு அடிப்படையான தீமைகள் நம்மை விட்டு அகன்று விடுமானால், அழிவு எப்படித் தலைகாட்ட முடியும்?

நீங்கள் கோடீஸ்வரராய் இருக்கலாம். ஆனால் உங்களுக்கு, கொடுமை செய்யாத உள்ளம் வேண்டுமே!

மற்றவரைத் துன்புறுத்தித் திரட்டும் செல்வம் அருட் செல்வமாகுமா! அது அவரவர் வாழ்க்கையை இருளாக்கி அழிக்கவே செய்யும்.

மற்றவர்கள் வயிற்றில் அடித்து மாளிகை கட்டியவன் அதில் வாழ முடிவதில்லையே!

அறிவுச் செல்வம் பெற்ற மகா அறிவாளி என்றால், அவர், மற்றவருக்குத் துன்பம் ஏற்படும் பொழுது, தனக்கு ஏற்பட்டதாகக் கருதி, அவருக்கு ஆதரவு அளிக்க முன் நிற்க வேண்டும்.



தோஷம் என்றால் குற்றம் என்பது பொருளாகும். கிரக தோஷம் என்றால் கிரகங்களின் தோஷம் என்றாகாது. நம் குற்றங்களின் விளைவைச் சுட்டிக் காட்டும் தோஷம்தான் கிரக தோஷம்.

எந்தச் செயலைச் செய்ய எண்ணினாலும், அதன் விளைவுகளை முன் கூட்டியே தீவிரமாகச் சிந்தித்தே முடிவு செய்யவேண்டும். செய்த பின் வரும் அழிவுக்குப் பரிகாரம் தேடுவதைவிட, செய்வதற்கு முன் தீவிரமாகச் சிந்தித்தால் நலமுண்டாகும். அதுவே பரிகாரமாகவும் அமையும்.

ஏதாவது ஒரு நல்வழியைப் பின்பற்றி ஒரு கிரகத்தின் மனதைக் குளிர வைத்து, அதனால் துன்பம் உண்டாகாதவாறு தடுத்துக் கொள்ளச் செய்யும் முயற்சியே கிரக தோஷ பரிகாரம் ஆகும்.

நாம் சொல்லும் மந்திரத்தாலும், செய்யும் புனித கருமங்களாலும் நம்மைக் கருணையோடு பார்க்கும் குளிர்ந்த தன்மையைப் பெறுகின்ற கிரகம் தொடர்ந்து நமக்கு அருள் பாலிக்கும்.

விருப்பு இருக்கும்வரை வேகம் இருக்கும். அந்த வேகம் விவேகத்தை மீறிச் செயல்பட்டு விடக்கூடும். அப்போது வெறுப்பு உண்டாகும். அதன் விளைவு ஆத்திரம். அந்த ஆத்திரம் அறிவைச் சிதைத்து அறியாமை என்ற நிலைக்குத் தள்ளிவிடும்.

அதனால், பதற்றமில்லாமல், எதையும் நிதானமாகவும் அடக்கத்தோடும், தெளிவோடும் அணுகுகின்ற பண்பும் பழக்கமும் நம் உள்ளத்தில் ஊன்றிவிட்டால், விதியால் என்ன செய்துவிட முடியும்?

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



நிச்சயமாக விதியை வென்று விடலாம்.

கர்மேந்திரியங்கள் ஐந்து, ஞானேந்திரியங்கள் ஐந்து. இவற்றால் பாதிக்கப் பெறும் மனம் இவை எல்லாவற்றுக்கும் ஆதாரமாக - ஆனால், இவற்றால் பாதிக்கப்படாத வகையில் பின்னணியில் நின்று, இவற்றை இயக்கும் ஆன்மா முதலிய பன்னிரண்டையும் குறிக்கும் விதமாகப் பன்னிரண்டு ராசிகள் ஏற்பட்டுள்ளன.

உலக மாந்தர் ஆண் - பெண் என இரு வகைகளாகப் பிரிக்கப்பட்டிருப்பது போலவே, ராசிகளும் ஆண் ராசி, பெண் ராசி என இருவகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

மூவகை குணங்களான ரஜோ, தமஸ், சத்வ குணங்களைக் குறிக்கும் வகையில் சர, ஸ்திர, உபயமென மூன்று பிரிவுகளாக அவை பிரிக்கப்பட்டுள்ளன.

நால்வகை வருணங்களைக் குறிக்கும் விதமாக, நிலம், நீர், வாயு, அக்னி ஆகிய தத்துவங்களை உடையனவாக அவை பிரிக்கப்பட்டுள்ளன.

நம்பிக்கையுள்ள மனம் எதிலும் வெற்றி பெறும் வலுவையும் பெறும். அந்த நம்பிக்கைக்குச் சகுனங்கள் உதவுகின்றன.

அவரவர் தமது கர்மங்களையே படகாகக் கொண்டு பிறவிக்கடலைத் தாண்டி முக்தியடைய வேண்டுமென்று உணர்த்துவது வேதம். அந்தப் பயணத்தில் நமக்கு வரக் கூடிய இன்ப-துன்பங்களை முன்னதாகவே உணர்த்தும் விளக்குதான் ஜோதிடம்.

விளக்கு இல்லாமலும் இருளில் பயணம் செய்ய முடியும். ஆனால் தடுமாற வேண்டியிருக்கும். ஆனால்



கையில் விளக்கு உள்ளவருக்கோ பயணம் சுலபமாக அமையும்.

ஜோதிடம் என்பது ஒரு மாபெரும் கடல். அதில் மூழ்க மூழ்க சிறந்த முத்துக்கள் கிடைத்துக் கொண்டேயிருக்கும்.

ஜோதிட சாஸ்திரத்தின் சிறப்பை எடுத்துக் காட்டும் விஞ்ஞான ரீதியான சான்றுகள் பல உண்டு.

ஒருவர் பிறந்த மாதம் தெரிந்தால் அவர் எந்த விதமான நோய்களுக்கு ஆளாகக்கூடும் என்பதைக் கூற முடியும் என்று அண்மையில் ஹாலந்து நாட்டின் டாக்டர் ஒருவர் கூறியிருக்கின்றார்.

அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் நடந்த ஆய்வின் மூலம், ஒருவருடைய பிறந்த நாளுக்கும் - அந்தக் காலத் தட்ப வெப்ப நிலை, அவருக்கு வரும் நோய் ஆகியவற்றுக்கும் நிறையத் தொடர்பு இருக்கிறது, என்று 'பயோமீட்டியோராலஜி' ஆராய்ச்சிக் கேந்திரத்தின் இயக்குநர் டாக்டர் லோல்கோ நிரூபித்திருக்கிறார். இவர் நெதர்லாண்ட்ஸ் நாட்டில் நடத்திய ஆராய்ச்சியின் மூலம், 'ஹிஸோஃப்ரெனிக்ஸ்' என்ற ஒரு வகை மன மயக்கப் பைத்திய நோய் ஜனவரி, பிப்ரவரி, மார்ச் மாதங்களில் பிறந்தவர்களில் பலருக்கு ஏற்படுகிறது எனக் கண்டறிந்துள்ளார்.

பூமியின் வட கோளார்த்தத்தில் டிசம்பர் முதல் மார்ச் வரையில் பிறப்பவர்களில் பலரைப் புற்றுநோய் பிடித்து விடுகிறது. ஜூன் ஜூலையில் பிறப்பவர்களில் மிகச் சிலரையே இந்நோய் தாக்குகிறது என்பது டச்சு விஞ்ஞானிகள் நடத்திய ஆராய்ச்சியிலிருந்து தெரிய வந்துள்ளது.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



'எண்ணிற்கு அடங்காமல் எங்கும் பரந்தனவாய் விண்ணிற் சுடர்கின்ற மீனையெல்லாம் பண்ணிய ஓர் சக்தியே நம்மைப் படைத்தது' என்றார் மகாகவி பாரதியார்.

அந்தச் சக்தி அகண்ட வானத்தில் உள்ள கோள்களைக் கொண்டு, நமது பூமியில் உள்ள மக்களின் மீது ஆதிக்கம் செலுத்தி வருவது பேருண்மை. இந்த உண்மைதான் ஜோதிட சாத்திரத்தின் விக்தாகும்.

கணிதத்தின் அடிப்படையில் தோன்றியது ஜோதிடக் கலையாகும். இதனால் நமது பூர்விக அறிஞர்களின் கணிதப் புலமையும் - அதனுடன் இணைந்த ஜோதிடமும் பன்னெடுங்காலமாக இங்கு இருந்து கொண்டிருக்கின்றன.

வானத்தை அண்ணாந்து பார்த்து, அந்தக் காலத்திலேயே கிரகங்கள் - நட்சத்திரங்களைப் பற்றிய அறிவை முன்னேற்றப்படுத்தி, ஜோதிடக் கலையை வரையறுத்தவர்கள் நம் முன்னோர்கள். இன்று விண்வெளி ஆராய்ச்சிக்குப் பல அரிய பெரிய விஞ்ஞானக் கருவிகள் உதவுகின்றன.

ஆனால், இவை எதுவுமில்லாத காலத்திலேயே 'பாரதப் புழா' என்ற நதிக் கரையில், சுமார் முப்பது ஆண்டுகள் படுத்திருந்து வானில் நட்சத்திரங்களை ஆராய்ந்து, திருக்கணித பஞ்சாங்கத்தை முதன் முதலில் உருவாக்கித் தந்தவர், ஆலத்தூர் வடசேரி இல்லத்தில் பிறந்த திருநம்பூதிரி என்பவர். இவருடைய 'சித்தாந்த திபிகா', 'லீலாவதி வியாக்யா', 'ஜாதகபத்ததி' போன்ற ஜோதிட நூல்கள் பிரசித்திப் பெற்றவை.



கணிதமும் - ஜோதிடமும் நகமும்-சதையும் போல. கற்பனை என்பதற்கே ஜோதிடக் கலையில் இடமில்லை. 'நடக்குமா' என்றால், நடந்தே தீர்ந்த சரித்திரப் பிரசித்திப் பெற்ற சம்பவங்கள் உண்டு.

பகவத் கீதையில் பரமாத்மா வீதிச் சக்கரத்தைப் பற்றி வர்ணனை சொல்லும் இடங்கள் எல்லாம் கணித ரீதியில் உள்ள ஜோதிட சாத்திரம்தான். கணக்கு என்றைக்கும் தப்பாது. கணக்கோடு இழைந்த ஜோதிடமும் என்றைக்கும் தப்பான தகவல்களைத் தருவதில்லை.

இந்தியாவைப் போலவே மேல் நாடுகளிலும் ஜோதிடத்தை ஒரு கலையாகப் பயிலுவதிலிருந்து தீவிரமாக அதிலேயே மூழ்கிக் கிடப்பது வரையில், பலரும் அதைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். கிரகங்களின் நிலையையும் பலனையும் ஆராய்ந்து, அன்றாட அட்டவணை போட்டுக் கொண்டுதான், அவர்கள் வாழ்க்கையை நடத்துகிறார்கள்.

அமெரிக்காவில் பல தொழில் நிபுணர்கள், படத் தயாரிப்பாளர்கள் முகூர்த்தம் வைக்காமல் முயற்சிகளைத் தொடங்குவதே இல்லை.

எவ்வளவு தூரம் வாழ்வில் துன்பப்பட்டாலும் அல்லது சுகப்பட்டாலும், இவ்வித நிலைகளைக் கொடுப்பது கிரகப் பலன்தான் என்று எண்ணுவோர் உண்டு. சுகப்படும் பொழுது மட்டும் தெய்வத்தின் அனுக்கிரகம்தான் என்று எண்ணிக் கொள்வோரும் உண்டு. ஆனால் துன்பமும் இன்பமும் தெய்வ பலமும் - கிரக பலமும் ஆகிய இரண்டும் சேர்ந்தவைதான் என்பதை அனுபவ பூர்வமாக அறிவது கடினம். விஷயமறிந்த ஞானிகளும் யோகிகளுமே அறியக் கூடிய இந்த விஷயத்தைச் சற்று ஆராய்ந்தால்



https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



சாதாரண மனிதனும் உண்மைகளை அறிந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்படும்.

மற்றும், எண்ணமே வினைக்கு அடிபபடையாகும். இந்தப் பிறவியில் ஒருவன் துன்பப்பட்டால், அவன் தன்னைத்தான் நொந்து கொள்ள வேண்டுமே தவிர, பிறரை நோவது சரியில்லை. அவன் முற்பிறப்பில் செய்த வினையின் பலன்தான் அது.

அந்த வினையின் பலனிலிருந்து அவனால் மீள முடியுமா என்றால அது சாத்தியமே! மிகவும் சக்தி வாய்ந்த பெருமுயற்சி எடுத்தால் பிராப்தம் என்கிற முன்வினையின் ஆதிக்கத்திலிருந்து அவன் தன்னைக் காத்துக் கொள்ள முடியும்.

அதாவது, அடியோடு முன் வினைகளின் பலன்களை முறியடித்துத் தான் நினைபபதை யெல்லாம் பெறறுவிட முடியும் என்று அதற்குப் பொருளாகாது. என்றாலும், அதன் பலாபலன் பலமாகத் தாக்காது விடுபட முடியும்.

முற்பிறவியில் செய்த வினைகளுக்கும், எண்ணங்கள் தாமே தூண்டுகோல்! அந்த எண்ணங்களை இப்பிறவியில் செவ்விய முறையில் சுடுபடுத்தினால் சீரிய பணிகளைச் செய்ய முடியும். இப்போது நல்லெண்ணத்துடன் செய்கிற நல்வினை, முன்பு தீய எண்ணத்துடன் செய்த தீவினையை அகற்றுவதற்குப் பெரிதும் பயன்படுமல்லவா!

## 2. ஜாதகக் கணிப்பு - 1

வேதம் பிரம்மத்தை அறிய முயல்கிறது. சிருஷ்டியின் அமைப்பை விளங்கிக் கொள்ள வான சாஸ்திரம் மட்டும் போதுமானதாக இல்லை.



வான சாஸ்திரத்தின் பெருமையையும், நம்மையும், உலகத்தையும் இயக்குகின்ற நவக் கிரகங்களின் செயல்களையும், பல இடங்களில் பல மனிதர்களாலும் அவர்களுக்கு உண்டாகும் பலன்களின் குறிப்பினாலும், அவர்கள் பிறந்த கால ஜாதகத்தினாலும், நவக் கிரகங்கள் ஓயாத சரகதியில் வெவ்வேறு நிலைமையினால் அவை மனிதர்களுக்கு உண்டாக்கும் பலன்களையும் யூகித்து நவக்கிரக தத்துவத்தை அறிய வழி உண்டு.

'பருவத்தே பயிர் செய்' என்றபடி உலகில் சகலமும் தம் ஜாதக யோக பலா பலன்களையும் காலம் வேளை இவற்றின் வலிமையையும் தங்கள் ஜாதக மூலமாகத் தெரிந்து, அதற்கேற்ப எதையும் முயற்சித்துச் செய்தால் தான் சகல விஷயங்களிலும் நற்பலனை எளிதில் அடைய முடியும்.

இல்லையேல், சக்கரமில்லாத வண்டியைக் கன முடித்தனமாக இழுப்பது போல், முயற்சி பயனற்றதாகி விடும்.

இது போல் விஷயங்களைத் தெளிவாகச் சரிவரத் தெரிந்து நடந்து கொள்ள ஜோதிட சாஸ்திரத்தைத் தவிர, வேறு சாஸ்திரம் எதுவும் உலகில் கிடையாது.

இதனால்தான் 'பஞ்ச சம்ஸ்காரம்' என்பதில்கூட, ஜாதக கருமம். நாம கரணம், அன்னப்ராசனம், சௌளம், உபநயனம் இவற்றில் ஜாதககருமம் என்பது முக்கிய ஸ்தானமாக முதலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிசு ஜனித்தவுடனேயே முதன் முதலில் செய்ய வேண்டியது ஜாதக கருமம். அதாவது ஜாதக பலன்களைக் கவனித்தல். அதை அறிந்த பிறகுதான், அந்தக் குழந்தையின் அமர வாழ்வைப் பற்றி மாதா-

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



பிதாக்கள் தம் கடமைகள் சகலத்தையும் செய்யவேண்டும்.

இப்படிச் செய்பவர்கள்தாம் குல ஓர்த்திகளாக, வம்ச விருத்திகளுடன் சகல காலங்களிலும் எல்லா விதமான சுப பலன்களையும் அடைய முடியும், அடைகிறார்கள்.

ஒவ்வொருவரின் பிறப்பைப்பதிவு செய்யும் பொழுது, சரியான நேரத்தை - மணி, நிமிஷம் ஆகியவற்றைப் பதிவு செய்ய வேண்டும். மற்றும் ஜாதகம் குறித்து வைக்க இயலுமானால், நவக் கிரகங்களின் செயல்களை அறிந்து கொள்வதற்கு அது பேருதவியாகும்.

நீங்கள் உங்கள் பிறப்பின் குண விசேடங்களைத் தெரிந்து கொள்ள வேண்டுமா? முதலில் நீங்கள் பிறந்த நட்சத்திரங்களைத் தெரிந்து கொள்ளுங்கள். நட்சத்திரத்தை, பிறந்த நேரத்தைக் கொண்டு பஞ்சாங்கத்தின் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

நட்சத்திரங்கள் இருபத்தேழு. அவை உங்களுக்குத் தெரிந்திருக்கட்டும். பஞ்சாங்கத்தில் அவை கொடுக்கப்பட்டுள்ளன.

பிறந்த நட்சத்திரத்தைத் தெரிந்து கொண்டபின், அந்த நட்சத்திரம் எந்த ராசிக்குடையது என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

ராசிகள் பன்னிரண்டு - மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம். இவை பஞ்சாங்கத்தில் உள்ளன.

எந்த ராசிக்கு எந்த நட்சத்திரங்கள் என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும்.



மற்றும் நீங்கள் பிறந்த நாளில் என்ன நட்சத்திரமோ, அந்த நட்சத்திரத்தின் மொத்த நாழிகையை நான்கு பாகமாகப் பிரித்துக் கொண்டு நீங்கள் பிறந்த நேரத்திற்கு எந்தப் பாகம் வருகிறதோ அதுதான் உங்கள் நட்சத்திரப் பாகமாகும்.

இந்த பாகத்தைத்தான் - பாதம் என்பார்கள். முதல், இரண்டாவது, மூன்றாவது, நான்காவது என்று நான்கு பாதங்கள் உண்டு. ஒவ்வொரு நட்சத்திரத்திற்கும் நான்கு பாகங்கள் அமையும். ஒவ்வொரு ராசிக்கும் இரண்டே கால் நட்சத்திரங்கள்.

| | |
|---|---|
| மேஷம் | - அசுவனி, பரணி, கார்த்திகை/கால் |
| ரிஷபம் | - கார்த்திகை/ முக்கால், ரோகிணி மிருக சீரிஷம்/அரை |
| மிதுனம் | - மிருக சீரிஷம்/அரை, திருவாதிரை, புனர்பூசம்/ முக்கால் |
| கடகம் | - புனர்பூசம்/ கால், பூசம், ஆயில்யம் |
| சிம்மம் | - மகம், பூரம், உத்திரம்/கால் |
| கன்னி | - உத்திரம்/முக்கால், ஹஸ்தம், சித்திரை/அரை |
| துலாம் | - சித்திரை/அரை, சுவாதி, விசாகம்/ முக்கால் |
| விருச்சிகம் | - விசாகம்/கால், அனுஷம், கேட்டை |
| தனுசு | - மூலம், பூராடம், உத்திராடம்/கால் |
| மகரம் | - உத்திராடம்/முக்கால், திருவோணம், அவிட்டம்/ அரை |
| கும்பம் | - அவிட்டம்/அரை, சதயம், பூரட்டாதி முக்கால் |
| மீனம் | - பூரட்டாதி/கால், உத்திரட்டாதி, ரேவதி |

நன்கு கவனிக்கவும். கார்த்திகை 1-ஆம் பாதம் மேஷராசி ஆகும்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



அதே கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள் ரிஷப ராசியாகும்.

இவ்வண்ணம் எந்தெந்த நட்சத்திர பாதங்கள் ராசிக்கு ராசி மாறுகின்றன என்பதைக் கவனித்துப் பார்த்துத் தெரிந்து கொள்ளவும்.

உங்கள் பிறந்த நட்சத்திரத்தின் பாதம் தெரிந்தால் தான், உங்கள் ஜன்ம ராசியைக் கண்டுபிடிக்க முடியும். அதனால் இந்த விஷயத்தில் கவனமாக இருக்கவும்.

ராசிகளில் ஆண், பெண் உண்டு என்று முன்பே கூறியுள்ளேன். அவை வருமாறு:

| | | |
|---|---|---|
| மேஷ ராசி | – | ஆண் |
| ரிஷப ராசி | – | பெண் |
| மிதுன ராசி | – | ஆண் |
| கடக ராசி | – | பெண் |
| சிம்ம ராசி | – | ஆண் |
| கன்னி ராசி | – | பெண் |
| துலா ராசி | – | ஆண் |
| விருச்சிக ராசி | – | பெண் |
| தனுசு ராசி | – | ஆண் |
| மகர ராசி | – | பெண் |
| கும்ப ராசி | – | ஆண் |
| மீன ராசி | – | பெண் |

தம்முடைய இந்து வழக்கப்படி, அறுபது ஆண்டுகளுக்கு ஒரு முறை காலச் சக்கரத்தின் சுழற்சியில் ஒரு சுற்று முடிந்ததாகக் கொள்வது மரபு.



அந்த அறுபது ஆண்டுகளும் பஞ்சாங்கத்தில் கூறப்பட்டுள்ளன, தெரிந்து கொள்ளவும்.

ஓராண்டுக்குப் பன்னிரண்டு மாதங்கள். உங்களுக்குத் தெரிந்திருக்கும். இந்தப் பன்னிரண்டு தமிழ் மாதங்களுக்கும் சரியாகப் பன்னிரண்டு ஆங்கில மாதங்களையும் இணைத்துத் தெரிந்து வைத்துக் கொள்வது நல்லது. ஒரு தமிழ் மாதத்தில், இரண்டு ஆங்கில மாதத்தின் – உத்தேசமாக – சரிபாதி அமையும்.

சூரியனின் சஞ்சாரத்தை ஒட்டித்தான் தமிழ் மாதங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சித்திரை | – | மேஷராசி | ஐப்பசி | – | துலாராசி |
| வைகாசி | – | ரிஷபராசி | கார்த்திகை | – | விருச்சிகராசி |
| ஆனி | – | மிதுனராசி | மார்கழி | – | தனுசுராசி |
| ஆடி | – | கடகராசி | தை | – | மகரராசி |
| ஆவணி | – | சிம்மராசி | மாசி | – | கும்பராசி |
| புரட்டாசி | – | கன்னிராசி | பங்குனி | – | மீனராசி |

தமிழ் மாதங்களில் சிலவற்றுக்கு 29,30,31,32 தேதிகள் வரக்கூடும். அவ்வண்ணமே ஆங்கில மாதங்களின் தேதியும் மாறுபடலாம். பஞ்சாங்கத்தைப் பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள்.

திதி என்றால் என்ன?

சூரியனிடமிருந்து சந்திரன் விலகிச் செல்லும் தொலைவு நிலையே திதி என்று ஜோதிட சாஸ்திரம் கூறுகிறது. அதாவது அமாவாசையிலிருந்து பௌர்ணமி வரை சுக்லபட்சம் – வளர்பிறை என்றும், பௌர்ணமியிலிருந்து அடுத்த அமாவாசை வரை கிருஷ்ணபட்சம் – தேய்பிறை என்றும் வகுத்துள்ளார்கள். அதனால் அத்திதிகள் 15 ஆகின்றன.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



அவை பிரதமை, துவிதியை, திருதியை, சதுர்த்தி, பஞ்சமி, சஷ்டி, சப்தமி, அஷ்டமி, நவமி, தசமி, ஏகாதசி, துவாதசி, திரயோதசி, சதுர்த்தசி, பௌர்ணமி ஆகியவை ஆகும். இத் திதிகள் சுக்ல பட்சம், கிருஷ்ணபட்சம் இரண்டிற்குமே பொதுவாகும்.

ஆனால் பௌர்ணமி, அமாவாசை என்ற திதிகள் மட்டும் மாறி வரும்.

அமாவாசையிலிருந்து 14 திதிகள் முடிந்ததும் பௌர்ணமி. பௌர்ணமியிலிருந்து 14 திதிகள் முடிவுற்றதும் அமாவாசை.

நீங்கள் பிறந்த நாளில் - நட்சத்திரத்தில் - சந்திரன் சஞ்சாரம் செய்வதை ஜன்மராசி என்பார்கள்.

ஜாதகக் கட்டத்தில் சந்திரன் இருக்கும் ராசியே ஜன்மராசியாகும்.

பிறந்த நேரத்தைப் பொறுத்து அமைவதே லக்னம் எனப்படும். சூரிய உதயத்திலிருந்து ஆரம்பித்து மறுநாள் சூரிய உதயம் வரை - பன்னிரண்டு லக்னங்களும் - அந்த நாளில் பங்கிடு செய்யப்படுகின்றது. இதில் எந்தப் பகுதியில் நீங்கள் பிறந்தீர்களோ அதுவே லக்னமாகும்.

உங்கள் ஜன்ம லக்னத்தை ஒன்பது பாதமாக -அம்சமாகப் பிரித்தால் நவாம்ச லக்னம் எது என்பதைக் கண்டு பிடிக்கலாம். இதை அம்சச் சக்கரத்தில் காணலாம்.

இதனால் ஜன்ம ராசி வேறு, ஜன்ம லக்னம் வேறு என்றாகிறதல்லவா? அதனால் ஒருவருக்கு ஜன்மராசி ஒன்றாகவும், ஜன்ம லக்னம் வேறாகவும்



இருக்கும். அபூர்வமாக இரண்டும் ஒன்றாக அமைவதுண்டு.

இப்பொழுது நீங்கள் ஜன்ம நட்சத்திரம், அதன் பாதம், ஜன்மராசி, ஜன்ம லக்னம், நவாம்ச லக்னம் ஆகியவற்றைத் தெரிந்து கொண்டு விட்டீர்கள்.

அடுத்தாற் போல் உங்கள் ராசி, அம்ச சக்கரங்கள் கட்டங்கள் பற்றி தெரிந்து கொள்ளுங்கள்.

கோள்கள் ராசி வட்டத்திலிருந்து பிறழாமல் சுற்றுகின்றன. ஒன்று மெதுவாகச் சுற்றுகிறது. இன்னொன்று வேகமாகச் சுற்றுகின்றது. சூரியன் ராசி வட்டத்தில் வேகமாகச் சுற்றுகின்றது. சந்திரன் அதைவிட வேகமாகச் சுற்றுகின்றது. சூரியனும் சந்திரனும் இராசி வட்டத்தில் ஒரு குறிப்பிட்ட விதத்தில் இருக்கும்போது கிரகணங்கள் ஏற்படுகின்றன.

ஒரு மனிதன் பிறக்கும் நேரத்தில் அடி வானத்தில் இருக்கும் ராசி முதல் இடம் என்றும், மற்ற ராசிகள் முறையே இரண்டாமிடம், மூன்றாமிடம் என்றும் 12-ஆம் இடம் வரையில் கணக்கிடப்பட்டன. ஜாதகக் கணிப்பின் போது ஒவ்வொரு இடத்திற்கும் ஒரு காரகத்துவம் கொடுக்கப்பட்டது. எடுத்துக்காட்டாக முதலாமிடம் ஆயுள் பாவத்தைக் குறிக்கும்.

ஜன்ம லக்னத்தை ஒட்டி அமைக்கப்படுவது ராசிக் கட்டம். அம்ச லக்னத்தை வைத்து அமைக்கப்படுவது அம்சக் கட்டம்.

இந்த இரண்டு கட்டங்களிலும் லக்னமாக உள்ள ராசிதான் முதலாம் இடம் ஆகும். அதற்கு அடுத்தது 2-ஆம் இடம். அதற்கடுத்தது 3-ஆம் இடம். இப்படியாகப் பன்னிரண்டு இடங்களும் வீடுகள் என்று அழைக்கப்படும்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



முதல் வீடுதான் உங்கள் லக்னம். மொத்தம் 12 வீடுகள். அதாவது பன்னிரண்டு கட்டங்கள் ஒரு சக்கரத்தில் இருக்கும். இந்த சிறு சிறு கட்டங்களும் நீங்கள் பிறந்த நேரத்தில் கிரகங்கள் எந்தெந்த ராசிகளில் சஞ்சரித்தனவோ அங்கங்கே அவை பொருத்தப்படும்.

பஞ்சாங்கத்தில் ஒவ்வொரு மாதத்திற்கும் கிரக அமைப்புகள் கட்டம் கட்டமாகப் போடப்பட்டிருக்கும். நீங்கள் ராசியைக் கண்டுபிடித்து அதில் சந்திரனைப் போட்டுக் கொண்டு, மிகுதி கிரகங்களின் அமைப்பையும் அதைப் பார்த்துப் போட்டுக் கொள்ளலாம்.

கிரகங்கள் ஒன்பது. சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி, ராகு, கேது என்பன நவ கிரகங்கள் ஆகும்.

இந்த ஒன்பது கிரகங்களில் ராகு, கேது நீங்கலாக மற்ற ஏழு கிரகங்களும் விசேடமான தனித்தன்மை பெற்றவை.

ராகு, கேது ஆகிய இரண்டு கிரகங்களும் சாயாக் கிரகங்கள் என்று சொல்லப்படும் நிழற் கிரகங்களாகும்.

இக்கிரகங்கள் அந்த ராசிச் சக்கரத்தின் 12 வீடுகளையும் பங்கு பிரித்துக் கொண்டன - சொந்தம் கொண்டாடின. கீழ்க்கண்ட சக்கரத்தில ராசியையும், அந்த ராசிக்குண்டான கிரகத்தையும் தெரிந்து கொள்ளவும்.



| | | | |
|---|---|---|---|
| மீனம்<br>குரு | மேஷம்<br>செவ்வாய் | ரிஷபம்<br>சுக்கிரன் | மிதுனம்<br>புதன் |
| கும்பம்<br>சனி | | | கடகம்<br>சந்திரன் |
| மகரம்<br>சனி | | | சிம்மம்<br>சூரியன் |
| தனுசு<br>குரு | விருச்சிகம்<br>செவ்வாய் | துலாம்<br>சுக்கிரன் | கன்னி<br>புதன் |

மேற்கண்ட கட்டத்தில் உள்ளபடி - ஒவ்வொரு கிரகத்தின் சொந்த வீடு என்ன என்பதையறியலாம்.

இவற்றுள் சில வீடுகள் கிரகங்களுக்கு நீச வீடுகளாகும்.

சனி கிரகம் மேஷம் நீசவீடு
செவ்வாய் " கடகம் "
சுக்கிரன் " கன்னி "
சூரியன் " துலாம் "
சந்திரன் " விருச்சிகம் "
குரு " மகரம் "
புதன் " மீனம் "

இவற்றை ராசிச் சக்கரத்தில் பொருத்திப் பார்த்துக் கொள்ளுங்கள்.

இதே போன்று சில வீடுகள் கிரகங்களின் உச்ச வீடுகளாகும்.

சூரியன் கிரகம் மேஷம் உச்ச வீடு
சந்திரன் " ரிஷபம் "
குரு " கடகம் "

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



| | | | |
|---|---|---|---|
| புதன் | இரகம் | கன்னி | உச்ச வீடு |
| சனி | " | துலாம் | " |
| செவ்வாய் | " | மகரம் | " |
| சுக்கிரன் | " | மீனம் | " |

இவற்றையும் ராசிச் சக்கரத்தில் பொருத்திப் பார்த்துக் கொள்ளவும்.

இரகங்கள் ஏழும் எந்த வீட்டுக்கு அதிபர்கள் என்பதையும், எந்த வீடுகள் அவற்றிற்கு உச்ச, நீச வீடுகள் என்பதையும் தெரிந்து கொண்டீர்கள்.

இந்தக் இரகங்கள் அனைத்துமே ஒற்றுமையாக இருந்து விடுவதில்லை. சில ஒன்றுக்கொன்று நேச பாவம் காட்டும். வேறு சில ஒன்றுக்கொன்று பகை கொண்டிருக்கும்.

| | | |
|---|---|---|
| சூரியனுக்கு | நட்பு | - சந்திரன், செவ்வாய், குரு |
| | பகை | - சனி, சுக்கிரன், ராகு, கேது |
| சந்திரனுக்கு | நட்பு | - சூரியன், புதன் |
| | பகை | - ராகு, கேது |
| செவ்வாய்க்கு | நட்பு | - குரு, சந்திரன், சூரியன் |
| | பகை | - புதன் |
| புதனுக்கு | நட்பு | - சூரியன், சுக்கிரன், ராகு, கேது |
| | பகை | - சந்திரன் |
| குருவுக்கு | நட்பு | - செவ்வாய், சூரியன், சந்திரன் |
| | பகை | - புதன், சுக்கிரன், ராகு-கேது |
| சுக்கிரனுக்கு | நட்பு | - புதன், சனி, ராகு-கேது |
| | பகை | - சூரியன், சந்திரன் |
| சனிக்கு | நட்பு | - புதன், சுக்கிரன், ராகு-கேது |
| | பகை | - செவ்வாய், சூரியன், சந்திரன் |



| | | |
|---|---|---|
| ராகு-கேது | நட்பு | - புதன், சுக்கிரன், சனி |
| | பகை | - குரு, சூரியன், சந்திரன் |

மற்றும்,தாம் இருக்கும் இடத்திலிருந்து எந்தெந்த இடத்தை இரகங்கள் பார்க்கும் - தன் செல்வாக்கைப் பிரயோகிக்கும் என்பதையும் தெரிந்து கொள்ளுங்கள்.

| | | |
|---|---|---|
| சூரியன் | பார்க்கும் வீடு | 7 |
| சந்திரன் | " | 7 |
| செவ்வாய் | " | 4,7,8 |
| புதன் | " | 7 |
| குரு | " | 5,7,9 |
| சுக்கிரன் | " | 7 |
| சனி | " | 3,7,10 |
| ராகு-கேது | " | 3,6,11 |

சூரியன் பார்வை 7-ஆம் வீட்டில்தான் விழும். அதே போன்று சந்திரன் பார்வை 7-ஆம் வீட்டில்தான் விழும். மற்ற இரகங்களின் பார்வை மேலே குறிப்பிட்டுள்ள இடங்களில்தான் விழும்.

இந்தக் இரகங்களுக்கு எது நட்பு வீடு, எது பகை, எது சமம் என்பதும் உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

நீசம், சொந்தம் என்ற தொடர்பு இல்லாத இரகங்களுக்கு எந்தெந்த வீடு, நட்பு, பகை, சமம் என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

| | | |
|---|---|---|
| மேஷம் - | நட்பு | - குரு |
| | சமம் | - சந்திரன், புதன், சுக்கிரன் |
| | பகை | - ராகு, கேது |

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



ரிஷபம் - நட்பு - புதன், சனி
சமம் - செவ்வாய், ராகு, கேது
பகை - சூரியன், குரு

மிதுனம் - நட்பு - சந்திரன், சுக்கிரன், சனி
சமம் - சூரியன்
பகை - செவ்வாய், குரு

கடகம் - நட்பு - சூரியன்
பகை - செவ்வாய், சுக்கிரன், சனி
ராகு - கேது

சிம்மம் - நட்பு - சந்திரன், செவ்வாய், புதன், குரு
பகை - சுக்கிரன், சனி, ராகு, கேது

கன்னி - நட்பு - சந்திரன், சனி, ராகு, கேது
சமம் - சூரியன்
பகை - செவ்வாய்

துலாம் - நட்பு - புதன், ராகு, கேது
சமம் - சந்திரன், செவ்வாய்
பகை - குரு

விருச்சிகம் - நட்பு - சூரியன், குரு, ராகு, கேது
சமம் - சுக்கிரன்
பகை - சனி

தனுசு - நட்பு - சூரியன், செவ்வாய்
சமம் - சந்திரன், புதன், சுக்கிரன், சனி

மகரம் - நட்பு - சுக்கிரன்
சமம் - சந்திரன், புதன்
பகை - சூரியன், ராகு, கேது



கும்பம் - நட்பு - சுக்கிரன்
சமம் - சந்திரன், புதன், குரு
பகை - சூரியன், ராகு, கேது

மீனம் - நட்பு - சூரியன், செவ்வாய், ராகு, கேது
சமம் - சனி, சந்திரன்

இவற்றுள், சொந்த வீடு, உச்ச வீடு, நட்பு வீடு ஆகியவற்றில் உள்ள கிரகங்கள் பலம் உள்ளவை. சம வீட்டில் உள்ள கிரகங்கள் சமமான பலம் உள்ளவை. பகை, நீச வீடுகளில் உள்ள கிரகங்கள் பலம் குன்றியவை.

ஜாதகத்தில் 1,5,9-ஆம் வீடுகளை திரிகோணம் என்பார்கள். இந்த வீடுகளுக்கு அதிபதி, பொதுவாக நல்ல பலன்களையே கொடுக்க வல்லவை. சுபக் கிரகங்கள் இருந்தால் பலமுள்ளவையாக இருக்கும். பாபக் கிரகங்கள் இருந்தால் பலம் குறைந்தவையாயிருக்கும்.

ஜாதகத்தில் 1,4,7,10-ஆம் வீடுகள் கேந்திரமாகும். இந்த இடங்களுக்கு பாபக் கிரகங்கள் அதிபதியாக இருந்தால் மிகவும் பலம் பொருந்தியவையாயிருக்கும். சுபக் கிரகங்கள் இருந்தால் பலம் குன்றிக் காட்டும். இதே சுபக் கிரகங்கள் அதிபதிகளாக இல்லாமல் தங்கியிருந்தால் மிகவும் பலமானவை.

மற்றும் ஜாதகத்தில் பணபர வீடுகள், ஆபோக்லாம வீடுகள், உபசய வீடுகள், பாதக வீடுகள் என்றெல்லாம் உண்டு.

இவற்றுள் உபசய வீடுகள் 3,6,10,11 ஆகிய இடங்களாகும். பாபக் கிரகங்கள் இங்கே பலமுள்ளவை. அதாவது அவை இங்கே தங்குவது நல்லது. சொந்தமாக இருப்பது அவ்வளவு நல்லதில்லை.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



ஜாதகக் கணிப்பு முறை கிரேக்க நாட்டிலிருந்து இந்தியாவிற்கு வந்ததாகவே வரலாறு கூறுகிறது. எனவே, கிரேக்க சாதகக் கணிப்பு முறைக்கும் இந்திய சாதகக் கணிப்பு முறைக்கும் சில அடிப்படை ஒற்றுமைகள் காணப்படுகின்றன. ஆனால் இந்திய ஜோதிடம் இந்தியாவின் சமூக அமைப்பிற்கும் சமய நம்பிக்கைகளுக்கும் ஏற்றபடி மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

## 3. ஜாதகக் கணிப்பு -2

ராசிகளைச் சர ராசி, ஸ்திர ராசி, உபயராசி என்று மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

மேஷம், கடகம், துலாம், மகரம் - சர ராசிகள்.

ரிஷபம், சிம்மம், விருச்சிகம், கும்பம் - ஸ்திர ராசிகள்.

மிதுனம், கன்னி, தனுசு, மீனம் - உபய ராசிகள்.

சர ராசிகளுக்கு எப்பொழுதும் 11-ஆம் இடம் பாதக ஸ்தானமாகும்.

உபய ராசிகளுக்கு 7-ஆம் இடம் பாதக ஸ்தானம். பாதக வீடுகளுக்கு உரிய கிரகங்கள் சாதகமாக இருப்பது இல்லை.

ஸ்திர ராசிகளுக்கு 9-ஆம் இடம் பாதக ஸ்தானம்.

நாசஸ்தானம் 6,8,12-ஆம் வீடுகள்.

ராசிகளில் ஆண், பெண் உண்டு என்பதை முன்பே விளக்கியுள்ளோம்.

அதுபோன்று ராசிகளில் ஒற்றைப்படை, இரட்டைப் படை என்று உண்டு.



மேஷம், மிதுனம், சிம்மம், துலாம், தனுசு, கும்பம் ஆகிய ஆறும் ஒற்றைப் படை ராசிகள் ஆகும்.

ரிஷபம், கடகம், கன்னி, விருச்சிகம், மகரம், மீனம் ஆகிய ஆறு ராசிகளும் இரட்டைப் படை ராசிகள்.

ஒற்றைப் படை ராசிகளில் ஒன்றை லக்னமாகக் கொண்டு பிறந்தவர்கள் மிகுந்த தைரியசாலிகளாகவும், எப்பொழுதும் எதிலும் முந்தியடித்துக் கொண்டு முன்னேறுபவர்களாகவும் இருப்பார்கள்.

ஆனால் இரட்டைப் படை ராசிகளில் பிறந்தவர்களோ இதற்கு மாறுபாடான போக்குடையவர்களாக இருப்பார்கள்.

மற்றும் ராசிகளுக்கு நிற வேறுபாடுகளும் உண்டு.

அதேபோல் ராசிகளில் குருடு - செவிடு என்றும் உண்டு.

மேஷம், ரிஷபம், சிம்மம் இம்மூன்று ராசிகளும் நள்ளிரவில் குருடாகும்.

மிதுனம், கடகம், கன்னி இம்மூன்று ராசிகளும் நடுப்பகலில் குருடாகும்.

மற்ற ராசிகளுக்கு இக்குருட்டு நிலை கிடையாது.

துலாம், விருச்சிகம் இவை இரண்டும் முற்பகலில் செவிடாகும்.

தனுசு, மகரம் இவை இரண்டும் பிற்பகலில் செவிடாகும்.

இதனால் நமக்கென்ன பலன் என்று கேட்கலாம். பலன் உண்டு. அவசியமின்றி குறிப்பேது?

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



ஜாதகத்தில் 2,12 ஆகிய இடங்கள் நயனங்களைக் குறிக்கும். அந்த ஜாதகர் நள்ளிரவில பிறந்து, அவரின் ஜாதகத்தில் 2 அல்லது 12-ஆம் வீடு, நள்ளிரவில் குருடான ராசிகளில் எந்த ஒன்றாக அமைந்தாலும், அந்த இடத்தில் பாபக் கிரகங்கள் குடியேறியிருந்தாலும், ஜாதகர் குருடாகக் கூடிய நிலையுண்டு.

இதற்குப் பதிலாக 6 அல்லது 8-ஆம் வீடாக மேற் சொன்ன மூன்று ராசிகளில் ஒன்று அமைந்திருந்தாலும் இந்தப் பலனைச் சொல்ல முடியும்.

3-ஆம் இடமும், 11-ஆம் இடமும் காதுகளைக் குறிப்பிடுபவை.

நண்பகலில் ஜனித்து 3,11-ஆம் வீடுகளில் ஒன்று மிதுனம், கடகம், கன்னி ஆகியவற்றில் ஒன்றாகி, அதில் பாபக் கிரகங்கள் இருந்தால் ஜாதகர் செவிடாகக் கூடிய நிலைமை ஏற்படலாம்.

ராசிகளுக்குத் திசைகளும் உண்டு.

| | | | | |
|---|---|---|---|---|
| மேஷம், | சிம்மம், | தனுசு | - | கிழக்கு |
| ரிஷபம், | கன்னி, | மகரம் | - | தெற்கு |
| மிதுனம், | துலாம், | கும்பம் | - | மேற்கு |
| கடகம், | விருச்சிகம், | மீனம் | - | வடக்கு |

ஜாதகத்தில் 9 அல்லது 11-ஆம் பாவம் மேஷம் என்று வைத்துக் கொள்வோம். இந்த 9,11-ஆம் வீடுகள் பலம் பெற்றிருந்தால், ஜாதகத்தில் மேஷத்திற்குரிய திசையான கிழக்குத் திசையிலிருந்து அதிர்ஷ்டம் விளையும்.

அதே போன்று குறிப்பிட்ட ஒரு ராசி பலவீனப் பட்டிருந்தால், அந்த ராசிக்குரிய திக்கிலிருந்து தொல்லை விளையக் கூடும்.



கிரகங்களில் ஆண், பெண்ணோடு, அலியும் உண்டு.

| | | |
|---|---|---|
| சூரியன், செவ்வாய், குரு | - | ஆண் கிரகங்கள் |
| சந்திரன், சுக்கிரன் | - | பெண் கிரகங்கள் |
| சனி | - | ஆண் அலிக் கிரகம் |
| புதன் | - | பெண் அலிக் கிரகம் |

ராகு-கேது இருவரும் அலிக் கிரகங்களின் வரிசையில் இடம் பெறுவார்கள்.

புத்திர ஸ்தானாதிபதி யார் என்பதைப் பார்த்து, புத்திர பாவத்தோடு தொடர்புடைய கிரகம் யார் என்பதையும் கண்டறிந்து, எந்தக் கிரகத்திற்கு அதிகப் பலம் இருக்குமோ, அந்தக் கிரகத்தின் அடிப்படையில் சந்ததி ஏற்படும் என்று கொள்ள வேண்டும்.

பெரும்பாலும் புதனும் சனியும் - அலிக் கிரகம் என்றாலும், பெண் சந்ததியையே அளிப்பார்கள். மிகவும் அபூர்வமாகவே அலிக் குழந்தைகளைப் பிறக்கச் செய்வார்கள்.

கிரகங்களுக்கும் திசைகள் உண்டு.

சூரியன் - கிழக்கு, சுக்கிரன் - தென்கிழக்கு, செவ்வாய் - தெற்கு, ராகு - தென்மேற்கு, சனி - மேற்கு, சந்திரன் வடமேற்கு, புதன் - வடக்கு, குரு - வடகிழக்கு. கேதுவுக்குத் திக்கு குறிப்பிடப் படவில்லை.

எந்தக் கிரகம் வலுவடைந்திருக்குமோ, அந்தக் கிரகத் திசையிலிருந்து லாபம் கிடைக்கும்.

எந்தக் கிரகம் வலுவிழந்திருக்குமோ அந்தக் கிரகத்திலிருந்து நஷ்டம் உண்டாகும்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



இந்தப் பலன்கள் குறிப்பாக அந்தந்தக் கிரக தசாபுத்திகளின்போது இடம் பெறும்.

ராசிகளுக்கு நான்கு வகுப்புகளும் சொல்லப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட எந்தக் கிரகம் வலுவிழந்தாலும் அந்தக் கிரகத்தினுடைய வகுப்பைச் சேர்ந்தவரால் அந்த ஜாதகருக்கு வளமும் நலமும் ஏற்படும்.

கிரகங்களில் சுப-அசுப கிரகங்கள் உண்டு.

குருவும், சுக்கிரனும் - சுபர்கள்.

புதன்-பாபக் கிரகத்தோடு சேர்ந்திருந்தால் பாபி. சுபக் கிரகத்தோடு சேர்ந்திருந்தால் சுபன். இரு வகைக் கிரகங்களோடு சேர்ந்திருந்தால் சுபம்-பாபம் ஆகிய இரண்டும் கலந்தவனாவான். எந்தக் கிரகத்தோடும் சேராமல் தனித்திருந்தால் சுபன்.

செவ்வாய், சனி, ராகு, கேது ஆகிய நால்வரும் பாபிக் கிரகங்கள். சூரியனும் பாபிக் கிரகந்தான். ஆனால் உச்சம் பெற்றிருந்தால், பாபக் கிரகம் என்று கூற முடியாது. குரூரக் கிரகம் என்றே சொல்லலாம். பொதுவாகச் சூரியனுக்கு அதிகமான பாபத் தன்மை இடையாது.

சந்திரன் இயற்கையாகச் சுபக்கிரகம் ஆவான். தேய் பிறையில் 14.15-ஆம் நாள்களில் க்ஷீண சந்திரனாக இருக்கும்போது மாத்திரம் பாபத் தன்மை உண்டாகும்.

சுபக் கிரகங்களில் சுக்கிரன், அவருக்கும் மேலாகச் சுபருடன் சேர்ந்த புதன், அவருக்கும் மேலாகக் குரு என்கிற வரிசையில் சுபபலம் கூடும்.



பாபக் கிரகங்களில் தேய்பிறைச் சந்திரன் ஆரம்ப நிலை. அவருக்கும் அதிகமான பாப பலம் கொண்டவர் சூரியன். சூரியனைக் காட்டிலும் அதிகப் பாபத் தன்மையுடையவர் செவ்வாய். செவ்வாய்க்கும் கூடுதலானவர் சனி.

கேதுவைச் செவ்வாயோடு சேர்த்துக் கொள்வதும், சனியோடு ராகுவைச் சேர்த்துக் கொள்வதும் வழக்கம்.

ஜன்ம ராசியிலிருந்து எத்தனையாவது ராசியில எந்தக் கிரகம் - குறிப்பிட்ட நாளிலோ மாதத்திலோ சஞ்சாரம் செய்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். இதற்குத்தான் கோசாரம் என்று பெயர்.

கோசாரப் பலன்களை முடிவு செய்வதற்குப் பல விதிமுறைகள் உண்டு என்றாலும், முதலில் பொதுப் பலன்களைத் தெரிந்து கொள்வது நல்லதே!

### சூரியன்

இடம் 1. ஜன்ம ராசிக்கு வந்தால் இழப்பு, வசதிக் குறைவு. குறிக்கோள் அற்ற பயணம் ஆகியவை ஏற்படும்.

2. அதிகச் செலவு, மகிழ்ச்சிக் குறைவு, கண்ணோய் உண்டாகும்.

3. பகைவரை முறியடித்தல், நோய் நிவாரணம்.

4. மனைவியுடன் தகராறு. சுக பங்கம்.

5. பகை வளர்ச்சி, சரீர பிணி

6. பகைவரை வெல்லுதல், மகிழ்வு அடைதல், சுகம் காணல்

7. வயிற்று வலி, மார்புவலி, அலைச்சல்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



8. மனைவியுடன் கருத்து வேறுபாடு - பிரிவு

9. விபத்து, வயிற்று உபாதை, எதிர்ப்பு

10. முயற்சி வெற்றி, ஆசையில் பூர்த்தி

11. பெரும் வெற்றி, மதிப்பு உயர்தல், சுபிட்சம்

12. பொருள் விரயம் ஏற்படுதல்

இந்த சஞ்சாரத்தைக் கவனித்தால், சூரியன் 3, 6, 10, 11 ஆகிய இடங்களில் அவ்வப்போது மட்டுமே நல்ல பலன்களைத் தர வல்லவர் என்று அறிய முடியும். அதாவது ஒரு வருஷத்தில் நான்கே மாதங்கள் தாம் நற்பலன்கள்.

இவை பொதுப் பலன்கள் என்பது நினைவிருக்கட்டும். இதற்கு விதி விலக்கு உண்டு.

**சந்திரன்**

1. 1-ஆம் இடம் அதாவது ஜனன ராசியில் உலவினால் நல்லுணவு கிடைக்கும், வசதிகளும் ஏற்படும்.

2. மதிப்பு இழப்பு, பொருள் நஷ்டம், தொல்லைகள் அதிகம்.

3. பொருள் லாபம், குடும்பத்தில் மகிழ்ச்சி.

4. மனக்கவலை, பிறரிடம் நம்பிக்கை குறைதல்.

5. காரியக்கேடு, ஏமாற்றம், நலக் குறைவு.

6. மகிழ்ச்சி, வெற்றி, நலம் பெறுதல்.

7. மதிப்பு உயர்வு, திடீர்ப் பொருள் வரவு.

8. கவலை, நோய், சரிவு, துக்கம்.

9. மன உளைச்சல், வயிற்று வலி.



10. வெற்றி, உயர்நிலை பெறுதல், ஆசையில் பூர்த்தி பெறுதல்.

11. சுபிட்சம், புது நட்புப் பெறுதல், நல்ல பொருள் வரவு.

12. காயம் உண்டாவது, கூடுதல் செலவு.

இதைக் கொண்டு பார்த்தால் சந்திரன் ஜன்ம ராசிக்கு, 1,3,6,7,10,11-ஆம் இடங்களில் சஞ்சரிக்கும் போது மட்டுமே நற்பலன்கள் தருபவர் என்று அறிய முடிகிறது. அதாவது மாதத்தில் பதினைந்து நாட்கள் மட்டுமே நற்பலன்களை எதிர்பார்க்கலாம் என்றாகிறது.

**செவ்வாய்**

1. 1-ஆம் இடம் சஞ்சாரம் அதாவது ஜனன ராசி பலவித தொல்லைகள் உண்டாதல், உடற்பிணி.

2. அரசாங்கத் தொல்லை, பகைவரோடு சண்டை, நோய், விபத்து முதலியன.

3. உயர் பண்புகளால் ஆதாயம் பெறுதல், செல்வப் பெருக்கம்.

4. காய்ச்சல் ஏற்படுதல், வயிற்று வலி.

5. பகைவரால் தொல்லை, மக்களுடன் கருத்து பேதம், உடல் வலுக் குறைதல்.

6. பகைவரை வெல்லுதல், தன்னம்பிக்கை கூடுதல், நலம் உண்டாதல்.

7. கண் உபாதை, தம்பதியரிடையே சண்டை.

8. பெயர் கெடுதல், .செல்வம் பறிபோதல்.

9. குற்றம் சுமத்தப்பட்டு வருந்துதல், அதிகச் செலவு, பலவீனம்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



10. திடீர் பண வரவு, பணம் குவியப் பெறுதல்.

11. பதவி ஏற்றம், புகழ் கூடுதல், நல்ல பெயர் எடுத்தல்.

12. கண் பிணி, தம்பதியரிடையே சச்சரவு.

இந்த வகையில் பார்க்கும்போது செவ்வாய் ஜென்ம ராசிக்கு 3,6,10,11 ஆகிய இடங்களில் சஞ்சரிக்கும்போது மட்டுமே நலம் புரிவார் என்று தெரிகிறது. ஏறக்குறைய வருஷத்தில் ஆறு மாதங்களே நற்பலன் தருவார் என்று தெரிகிறது.

## புதன்

1. ஜன்மராசியில் புதன் வரும்போது அதாவது 1-இல், பணம் இழப்பு, கெட்ட சகவாசம் உண்டாகும். இதனால் சச்சரவு, சிறைப்பீதி, பயணத்தின் போது கலக்க மூட்டும் செய்தி எட்டுதல் முதலானவை உண்டாகும்.

2. காரிய வெற்றி, பணம் கிடைக்கும்

3. அரசினர் தொல்லை. சத்ருபயம்.

4. மகிழ்ச்சி, திரவியலாபம், உறவினர் சேர்க்கை, குடும்பத்தில் சுபிட்சம்.

5. மனைவியோடும் மக்களோடும் சச்சரவு உண்டாகும் மனதில் அமைதி இராது.

6. பெயர் புகழ் அதிகமாகும். வெற்றி உண்டாகும்.

7. மன நிம்மதி குறைவு, சச்சரவு உண்டாதல், இரத்த சோகை ஏற்படல்.

8. புத்திரபாக்கியம், புதுப்பண்டம் வாங்குதல், வெற்றி உண்டாதல், மகிழ்ச்சி ஏற்படல்.



9. உடல்நலம் கெடுதல், தடைகள் ஏற்படல், மனக்கவலை மிகுதல்.

10. தம்பதியரிடையே மகிழ்ச்சி, நல்ல சகவாசம், பகைவரை வெல்லல், சுக அனுபவம், பணம் கிடைத்தல்.

11. செல்வம் சேரும். நல்லநேரம். மகன் பிறப்பான், மகிழ்ச்சி உண்டாகும்.

12. உடற்பிணி, குடும்ப அமைதிகுறைவு, கடுஞ்செலவு, வருத்தம் ஏற்படல், பகைவரால் தொல்லை.

இந்த வகையில் ஜன்ம ராசியிலிருந்து புதன் 2,4,6,7,8,10,11 ஆகிய இடங்களில் சஞ்சரிக்கும்போது நற்பலன்களை எதிர்பார்க்கலாம். அதாவது ஒரு வருஷத்தில் ஆறு மாதங்கள் நற்பலன்கள்.

## குரு

1. ஜன்மராசியில் குரு சஞ்சாரம் அவ்வளவு நல்லதன்று. புத்தி மழுங்கும், பண இழப்பு உண்டாகும், குறிக்கோளின்றி அலைச்சல், சச்சரவுகள், அச்சம் எல்லாம் உண்டாகும்.

2. மகிழ்ச்சி ஏற்படும். இனிய சூழ்நிலை, பகைவர்களை வெல்லும் நிலை, பணமும் பண்டங்களும் குவியும்.

3. அலைச்சல், பணியில் தடை, அச்சம், நோய் ஆகியவை உண்டாகும்.

4. விரக்தி, அச்சம், பணவரவு தடை, உறவினரால் துன்பம் ஆகியவை ஏற்படும்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



5. நல்ல தன்மைகள், கபிட்சம், மகன் பிறப்பான்.

6. மன சஞ்சலம், நோய், நண்பர்கள் விரோதிகளாவர்.

7. திருமண பாக்கியம், மகிழ்ச்சி, சுகம், பொருள் வரவு, வாகனம், வாக்குவன்மை, மதிப்பு ஆகியவைப் பெருகும்.

8. மனநோய், உடல்நோய், சிறைப்பீதி.

9. செல்வாக்குப் பெருகும், குழந்தை பாக்கியம் வியாபாரத்தில் செழிப்பு, லாபம், வெற்றி ஏற்படும்.

10. மதிப்பு குறையும், பொருள் இழப்பு, வாழ்க்கையில் சரிவு, வீண் அலைச்சல்.

11. பதவி உயரும், உடல்நலம் சீரடையும், பணம் வரும், மகிழ்ச்சி நிலைக்கும்.

12. நோய் ஏற்படுதல், ஒழுக்கம் பங்கப்படுதல், துயரம் அதிகமாதல்.

இதைக்கண்டு குரு ஜன்ம ராசியிலிருந்து 2,5, 7,9,11 ஆகிய 5 இடங்களில் உலவும் போது மட்டும் நற்பலன்களைத் தருவார் என்று தெரிகிறது. இவர் ஒரு வீட்டில் 1 வருஷம் இருப்பார். அந்தக் கணக்கில் 12–க்கு 5 வருஷங்களே நற்பலன்களை எதிர்பார்க்கலாம். குரு பலம் இருக்கிறது என்பது இந்த 2, 5,7,9,11 ஆகிய இடங்களில் ஒன்றில் சஞ்சரிப்பதையே அடிப்படையாகக் கொண்டது ஆகும்.

கோள்கள் மனிதனைப் பாதிக்கின்றன என்று மட்டும் ஜோதிடம் கூறவில்லை. இந்தப் பாதிப்புகள் மனித வாழ்க்கையில் குறிப்பிட்ட விளைவுகளை அல்லது மாற்றங்களை ஏற்படுத்துகின்றன என்னும் கிரக நிலைகளைக் கவனிப்பதன்மூலம் இந்த



விளைவுகளை முன் கூட்டியே அறிந்து கொள்ளலாம் என்றும் ஜோதிடம் கூறுகின்றது.

மனித வாழ்க்கையில் ஒரு புதிய விளைவை அல்லது மாற்றத்தை ஏற்படுத்த ஒரு சிறு நிகழ்ச்சியே போதுமானது என்பது நாம் அனுபவத்தில் அறிந்த உண்மை.

எடுத்துக்காட்டாக மறுநாள் தேர்வு எழுத வேண்டிய ஒரு மாணவனின் உடல் நிலையையும் உள நிலையையும் அமாவாசை அல்லது முழு நிலவு பாதிக்கிறது என்று வைத்துக் கொள்வோம்.

இதனால் அந்த மாணவன் தோல்வியடைந்து விடுகிறான். இந்த நிகழ்ச்சி அந்த மாணவனுடைய வாழ்க்கை முறையையே மாற்றியமைத்து விடலாமே!

கோள்களின் பாதிப்பு ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் உண்டு என்பது உறுதியாகிறதல்லவா!

## 4. கிரகங்களின் சஞ்சாரம்

ஒருவன் பிறக்கும்போது அல்லது அன்னையின் வயிற்றில் கருவாய்த் தரிக்கும்போது உள்ள கிரக நிலை அவனுடைய வாழ்க்கை முறைகளை முழுவதுமாகத் தீர்மானித்து விடுகின்றது.

அதன் பின்னர் மாறி வரும் கிரக நிலையைக் கவனித்து, கோச்சாரம் மற்றும் அவனுடைய அன்றாட வாழ்க்கை முறைகளை முன் கூட்டியே அறிந்து கொள்ளலாம்.

மனிதனுடைய எதிர்காலத்தை முன் கூட்டியே அறிந்து கொள்வது குறித்து ஜோதிடம் இவ்வாறு கூறுகிறது.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



இப்பொழுது சுக்கிரன் சஞ்சாரத்தைப் பார்ப்போம்.

1. 1–ல் சஞ்சாரம் செய்தால், வாழ்க்கை வசதிகள் ஏற்படும். சுகபோக சாதனங்கள் கிடைக்கும்.

2. குழந்தை பாக்கியம், அன்பளிப்பு கிடைத்தல், மகிழ்ச்சி, பணம் வருதல்.

3. செல்வாக்கு மிகும். மகிழ்ச்சி நிலைக்கும். செல்வம் சேரும்.

4. பணம் வரும், லாபம் கிடைக்கும், பந்து ஜன சேர்க்கை ஏற்படும்.

5. மதிப்பு அதிகமாகும். நண்பர்கள் சேர்வார்கள். குழந்தைகளால் நலம் பிறக்கும். ஆற்றல் உண்டாகும். திரவிய லாபம் ஏற்படும்.

6. எதிரிகளால் சங்கடம், இடமாற்றம், தொல்லைகள், பொதுஜன சந்தோஷம் உண்டு என்றாலும் இவை எல்லாம் ஏற்படும்.

7. கவலை, அமைதி கெடும், பிணி ஏற்படும், பொருள் இழப்பும் இருக்கும்.

8. திரவிய லாபம் கிடைக்கும்.

9. பணம் வரும். புது வீடு வாங்கலாம். திருமணம் நிச்சயமாகும்.

10. மத விரோத காரியங்களில் ஈடுபடுவதுடன், பொருள் சிதையும்.

11. மனவியாகூலம் இருக்கும் என்றாலும் பணம் வரும்.

12. புத்தாடைகள் சேரும், செல்வம் குவியும், புதிய நண்பர்கள் சேர்வார்கள்.



இந்த அளவில் சுக்கிரன், 1,2,3,4,5,8,9,11,12 ஆகிய இடங்களில் சஞ்சரிக்கும் போது நற்பலன்களைத் தருவார் என்று உறுதியாகிறது. ஓராண்டில் ஏறக்குறைய எட்டு மாத காலம் நற்பலன்களை அளிக்கும் சுக்கிரனை யாவரும் வழிபடுவது நலமே.

## சனி

இது ஒவ்வொரு ராசியிலும் இரண்டரை ஆண்டுகள் சஞ்சரிக்கக் கூடியது.

1. இது ஜன்மராசியில் உலவினால் தீயினால் அபாயம் உண்டாகலாம். விஷத்தால் உபாதை, நண்பர், உறவினர்களால் அச்சம், வெளிநாட்டுப் பயணம், பொருள் இழப்பு, உறவினர் இறக்க நேருதல், பழி குற்றங்கள் சுமத்தப்படல், மன அமைதி இழத்தல் எல்லாம் ஏற்படும்.

2. செல்வம் சேர்ந்தாலும் அதை அனுபவிக்க முடியாமல் போகும். துயரம் கூடும், வசதிகளை இழக்க நேரிடும்.

3. செல்வம் பெருகும், வசதிகள் கூடும், உடல் சுகம் திருப்தி, மகிழ்ச்சி, பகைவர்கள் மறைவார்கள்.

4. மனத்திலும், உடலிலும் பிணியுண்டாகும். முரட்டு நடத்தையும் தவறான செயலும் கொள்ள நேரும். சந்தேகத்திற்குரிய தன்மைகள் ஜாதகனிடம் குடி கொள்ளும். உறவினர்களைப் பிரிந்து வாழ நேரிடும்.

5. அடிக்கடி சச்சரவில் சிக்கிக் கொள்ள நேரிடும். பண இழப்பு நேரும், மக்களிடமிருந்து பிரிந்து வாழ வேண்டி வரும்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



6. பெண்களின் தொடர்பால் நலம் பெறுவர். இந்த வீடு சனிக்கு நல்ல இடம். பகைவரின் உபத்திரவம் இராது. நோயிலிருந்து நிவாரணம் ஏற்படும்.

7. குறிக்கோளற்று அலைதல். பயனில்லாமல் திரிதல் ஆகியவற்றுடன் மனைவியிடமிருந்தும், மக்களிடமிருந்தும் பிரிந்து தனித்து வாழ வேண்டிவரும்.

8. பகைவர் அதிகமாவர். அற்பச் செயல்களில் ஈடுபட்டு, மகிழ்ச்சி குறையும்.

9. இப்பொழுதும் நல்ல பலன்களை எதிர்பார்க்க முடியாது. எட்டாம் வீட்டு பலன்கள் தொடர்ந்து இருக்கும்.

10. பெயரும் புகழும் பறிபோகும். பகைவர் அதிகமாவர். ஒழுங்கான ஜீவனம் அமையாது.

11. உணர்ச்சி பேதம், பதற்றப்படுதல் ஏற்படும். பாதகமான குறுக்குப் பாதையில் புகுந்து பணம் சம்பாதிக்கச் செய்யும்.

12. கவலைகளால் பீடித்தல், வருத்தம், துக்க காரியம், சுகாதாரமின்மை ஏற்படும்.

இந்த வகையில் பார்க்கும் பொழுது சனி ராசிக்கு, 3,6,11 ஆகிய வீடுகளில் சனி சஞ்சாரம் செய்யும் பொழுதுதான் நல்லது செய்வான் என்று தெரிகிறது. அதாவது 30 வருடங்கள் ஆகும் ஒரு முழுச் சுற்றில் ஏழரை வருட காலம் மட்டுமே சனியினால் நலம் விளையும் என்று தெரிகிறது.

ஜன்ம ராசிக்கு முன்னும், ஜன்ம ராசியிலும், பிந்திய ராசியிலும் சனி சஞ்சரிக்கும்போது,



தொடர்ச்சியாக ஏழரையாண்டு காலம் 'ஏழரைச் சனி' என்பார்கள்.

இந்தக் காலத்தில் மன அமைதி இராது. சங்கடங்கள் ஏற்பட்டவண்ணமிருக்கும். குடும்பத்திலும் ஏதாவது ஒரு மரணம் ஏற்படலாம். அப்படி நடக்காமலிருந்தால் அவர்கள் அதிர்ஷ்டசாலிகள் ஆவார்கள்.

இது பொதுப்பலம். மற்ற கிரகங்களின் சஞ்சாரத்தினாலும், பார்வையினாலும் இவற்றிற்கு விதி விலக்கு உண்டு.

### ராகு-கேது

இவ்விருவருமே சனி, செவ்வாய் போலவே பலனளிப்பார்கள்.

1-இல் ராகு – பொருள் இழப்பு, மனத்தொல்லை.
1-இல் கேது – நோய் உண்டாதல், பொருள் இழப்பு.
2-இல் ராகு – கடுஞ்செலவு, பொருள் நாசம்
2-இல் கேது – பொருள் நஷ்டம்.
3-இல் ராகு – சுகம், பொருள் வரத்து
3-இல் கேது – மகிழ்ச்சி, லாபம்.
4-இல் ராகு – கவலை, பகை ஏற்படுதல்
4-இல் கேது – அச்சம், மனநோய், உடல் நோய்
5-இல் ராகு – துக்கம், பொருள் இழப்பு
5-இல் கேது – கவலை, நஷ்டம்
6-இல் ராகு – சந்தோஷம், லாபம்
6-இல் கேது – ஆதாயம், மகிழ்ச்சி

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



- சச்சரவு, பொருள் இழப்பு

7-இல் ராகு - வியாதி, காரியச் சிதைவு

7-இல் கேது - வியாதி, அச்சம்

8-இல் ராகு - பொருள் இழப்பு, அச்சம்

8-இல் கேது - கொள்ளுதல்

9-இல் ராகு - பாவச் செயலில் ஈடுபடுதல்

9-இல் கேது - தீய கருமம் செய்தல், உடல் நலக்கேடு

10-இல் ராகு - பணவரவு, சந்தோஷம்

10-இல் கேது - பயம், கவலை

11-இல் ராகு - பண லாபம், மகிழ்ச்சி

11-இல் கேது - புகழ் உண்டாதல்

12-இல் ராகு - வியாதி, பொருள் இழப்பு

12-இல் கேது - உடல் நோய், பகைமை ஏற்படுதல்

ராகுவும் கேதுவும் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு - வீட்டிற்குச் செல்ல 1½ வருட காலம் ஆகும். அதனால் 18 வருடங்கள் ஆகும். ஒரு சுற்றில், நாலரை மாதங்கள் மட்டுமே நலம் புரியும் என்பதைத் தெரிந்து கொள்ளவும்.

இந்தக் கிரகங்களின் சஞ்சாரத்தைக் கொண்டு ஒவ்வொரு கிரகத்திற்குரிய நல்ல இடங்கள், தீய இடங்களை நாம் அறியலாம்.

| | | |
|---|---|---|
| சூரியனுக்கு | நல்ல இடங்கள் | 3,6,10,11 |
| | கெட்ட இடங்கள் | 1,2,4,5,7,8,9,12 |
| சந்திரனுக்கு | நல்ல இடங்கள் | 1,3,6,7,10,11 |
| | கெட்ட இடங்கள் | 2,4,5,8,9,12 |



| | | |
|---|---|---|
| புதனுக்கு | நல்ல இடங்கள் | 2,4,6,8,10,11 |
| | கெட்ட இடங்கள் | 1,3,5,7,9,12 |
| குருவுக்கு | நல்ல இடங்கள் | 2,5,7,9,11 |
| | கெட்ட இடங்கள் | 1,3,4,6,8,10,12 |
| சுக்கிரனுக்கு | நல்ல இடங்கள் | 1,2,3,4,5,8,9,11,12 |
| | கெட்ட இடங்கள் | 6,7,10 |
| சனிக்கு | நல்ல இடங்கள் | 3,6,11 |
| | கெட்ட இடங்கள் | 1,2,4,5,7,8,9,10,12 |
| ராகுவுக்கு | நல்ல இடங்கள் | 3,6,11 |
| | கெட்ட இடங்கள் | 1,2,4,5,7,8,9,10,12 |
| கேதுவுக்கு | நல்ல இடங்கள் | 3,6,11 |
| | கெட்ட இடங்கள் | 1,2,4,5,7,8,9,10,12 |

இந்தக் கிரகங்களின் சஞ்சாரத்தின் பொழுது, எந்த எந்த இடத்தில் உள்ளது என்பதைத் தெரிந்து கொண்டு, அதன் பலன்களைத் தெரிந்து கொள்ளலாம்.

சித்திரைத் திங்களில் மைந்தன் ராமனுக்கு முடி சூட்டத் திர்மானித்தார் தசரதர். அது என்ன ஆயிற்று? அச்சமயத்தில் சூரியன், அங்காரகன், ராகு இம் மூன்றும் மேஷத்தில் இருந்தார்கள்.

மேஷத்தில் இம்மூவரும் இருந்தால் அரசனுக்குக் கேடு விளையும் என்பது விதி.

இதன் விளைவு 14 ஆண்டுகள் நீடிக்கும் எனவும் கூறப்பட்டுள்ளது. இதன் பலன்தான் சக்கரவர்த்தி தசரதன் உயிர் நீத்தார் என்றும், முடி சூட்டிக் கொள்ள வேண்டிய இராமன் 14 ஆண்டுகள் வனவாசம் புரிந்து பல இன்னல்களுக்கு ஆளானான் என்றும், கைகேயி வரத்தினால் அரசாளும் உரிமை



https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



பெற்ற பாதனோ எதிலும் பற்றற்று ஒரு துறவி போல் வாழ்ந்தான் என்றும் கூறப்படுகிறது.

அதனால் ஜாதக பலன்களை யாராலும் தடுக்க முடியாது என்றாகிறதல்லவா!

சிரியா நாட்டிலுள்ள 18 வயதே நிரம்பிய யூலியா டோம்னா என்னும் பெண், பிரான்ஸ் நாட்டில் கவர்னராக இருந்த செட்டிமியஸ் என்பவருக்குக் கடிதம் எழுதினாள்.

“என் ஜாதக ரீதியாக, என்னை மணப்பவர் அரசன் ஆவார் என்று இருக்கிறது. நீங்கள் ஏன் என்னை மணந்து அரசராகக் கூடாது?” என்றுதான் எழுதினாள்.

அவரும் ஜாதகத்தில் நம்பிக்கையுடையவர். அவ்வண்ணமே அவளை மணந்து, ஆறு வருடங்களுக்குள் மன்னரானார்.

இப்படியெல்லாம் ஜோதிடம் பலித்துள்ளதே!

ஒருவரின் ஜன்ம நட்சத்திரத்திலிருந்து எத்தனையாவது நட்சத்திரத்தில் எந்தக் கிரகம் சஞ்சரிக்கிறது என்பதை அந்த அந்தக் காலத்துக்கு அறிந்து கொண்டு, அந்த எண்ணிக்கையின் அடிப்படையிலும் பலன்களை நிர்ணயிக்க வேண்டும்.

ஜன்ம நட்சத்திரத்திற்கு 2,4,6,8,9 ஆகிய எண்களில் அமையும் நட்சத்திரங்களில் சஞ்சரிக்கும் கிரகங்கள் நன்மை செய்யக் கடமைப்பட்டவர்கள்.

குறிப்பிட்ட கிரகம் குறிப்பிட்ட ராசியில் சஞ்சரிக்கும் போது, அவர் சமம் என்கிற நிலையில் சஞ்சரிக்கிறாரா என்பதையும் பார்க்க வேண்டும்.



நட்பு வீட்டில் சஞ்சரிக்கும் பொழுது நற்பலன்கள் நடக்கும்.

மற்றும் உச்சமா, ஆட்சியா, நீசமா என்பதையும் கவனிக்க வேண்டும். உச்சம், ஆட்சி என்றால் நற்பலன்களை எதிர்பார்க்கலாம்.

அடுத்தாற்போல் - பார்க்கின்ற கிரகத்தின் சுப பலத்தையொட்டி, நற்பலன் கூடும். பாபக் கிரகம் பார்க்குமென்றால் நற்பலன் குறைவதற்கு வழி உண்டு.

நற்பலன்களைத் தர வேண்டிய கிரகத்திற்கு ‘வேதை’ ஏற்பட்டால், அந்தப் பலன்கள் குறைந்து போகும். கெட்ட பலன்களைத் தர வேண்டிய கிரகத்திறகு வேதை உண்டாகுமானால் கெட்ட பலன்கள் குறைந்து விடும்.

வேதை என்றால் என்ன? ஒரு கிரகம் ஒரு ராசியில் சஞ்சரிக்கும்போது மற்ற கிரகம் வேறு ஒரு ராசியில் சஞ்சரிக்குமல்லவா! அந்நிலையில் ஒன்றின் செல்வாக்கை மற்றொன்று பறித்துக் கொள்ள இடமுண்டு. இதற்குப் பெயர்தான் வேதை.

கெட்ட பலனைத் தரும் கிரகங்களுக்கு ‘வேதை’ ஒரு தடுப்பு ஆகும்.

நற்பலன்களைத் தரக்கூடிய நிலையில் சஞ்சரிக்கின்ற ஒரு கிரகம், சூரியனுடன் நெருங்கி இருந்து ‘அஸ்தங்கதம்’ எனும் தோஷத்திற்கு ஆட்படுமானால் சுப பலன் குறையும்.

நவக் கிரகங்களில், ஒவ்வொரு கிரகத்திற்கும் பலன் உண்டு. அவன் என்ன என்ன செய்வான் என்று பொதுப் பலன் உண்டு.

அதே வண்ணம், வீடுகளுக்குரிய பலன்களும் உண்டு.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



இவற்றிற்கு கிரகங்களுடைய 'காரகத்துவங்கள்' என்றும் லக்னம் முதல் 12 பாவங்களின் - ராசிகளின் - காரகத்துவங்கள் என்றும் பெயர்.

முதலில் வீடுகளுக்குரிய காரகத்துவங்களைத் தெரிந்து கொள்ளுங்கள்.

**1-ஆம் வீடு** அதாவது லக்னம் - உடலின் தோற்றம், அறிவின் பலம், நிறம், மனநிலை, மற்றும் புகழ் குணாதிசயங்கள், வெளிநாட்டு வாசம், ஆரோக்கியம், பகை வெல்லுதல், வாழும் வகை அத்தனையும் குறிக்கும்.

**2-ஆம் வீடு** - வாக்கு, அறிவு, மகிழ்ச்சி, கல்வி, உணவு, பேச்சுத் திறமை, தெய்வ நம்பிக்கை, கொடைத் தன்மை, நண்பர்கள், செல்வம் திரட்ட முயலுதல், மகிழ்ச்சி ஆகியவற்றைக் குறிக்கும்.

**3-ஆம் வீடு** - வீரம், நிதானம், மனப்பழக்கம் ஆற்றல், உறுதி, நண்பர்கள், கல்வி, பொழுது போக்கு, பாரம்பரியச் சிறப்பு ஆகியவற்றைக் குறிக்கும்.

**4-ஆம் வீடு** - தாயார், உறவினர், சுகம், நிலபுலன்கள், வீடு, ஒழுக்கம், கடவுள் வழிபாடு ஆகியவற்றைக் குறிக்கும். இவற்றுடன் குடும்ப பாரம்பரிய சொத்துக்கள், கல்வி, வாசனை நுகர்ச்சி, அரசியல் தொடர்பு, புத்தி கூர்மை, தந்தை நிலை, மனைவி நிலையையும் காட்டும்.

**5-ஆம் வீடு** - பகுத்தறிவு, ஞாபக சக்தி, புத்திர பாக்கியம், கலை நுட்பத் திறம், கல்வி, மனத் தெளிவு, கணவன் அல்லது மனைவி மூலம் லாபம், நூல் எழுதுதல், கடவுள் பக்தி, பொருள் திரட்டும் முயற்சி ஆகியவற்றைக் காட்டும்.



**6-ஆம் வீடு** - கவலை, கலகம், பகைவர், காயம்படுதல், கெட்ட பழக்கங்களுக்கு அடிமை ஆதல், ஜனனேந்திரியக் கோளாறு, மரணம், அகால உணவு, சிறை, பங்காளிச் சண்டை இவற்றைக் குறிக்கும். இது மாமன்மார்களைப் பற்றியும் குறிக்கும்.

**7-ஆம் வீடு** - பயணம், திருமணம், சிற்றின்ப வேட்கை, தரும காரியம், நினைவு இழத்தல், வீரியம், காதலில் வெற்றி, பகை வெல்லுதல், சுவீகாரம், வெளிநாட்டுப் பயணம் ஆகியவற்றைக் குறிக்கும்.

**8-ஆம் வீடு** - மரணம் நிகழும் இடம், வீடு கட்டுதல், மகிழ்ச்சி, பகைவரால் பயம், கைது ஆதல், மன வியாதி, உடல் நோய், கலகம், ஆயுள், கடன் இவற்றைக் குறிக்கும்.

**9-ஆம் வீடு** - நல்லொழுக்கம், தெய்வ பக்தி, புனித நீராடல், அதிர்ஷ்டம், நல்லிதயம், மருத்துவ அறிவு பெறுதல், பணமுதலீடு ஆகியவற்றைக் குறிக்கும்.

**10-ஆம் வீடு** - அதிகாரம், மதிப்பு, ஜீவன மார்க்கம், கடன், தொழில், அணிமணிகள், விவசாயம், வியாபாரம், ஆசிரியர் தொழில், புகழ், தாய், சுவீகார புத்திரன், வெளிநாட்டு வாசம் ஆகியவற்றைக் குறிக்கும்.

**11-ஆம் வீடு** - பொதுவாக ஆதாயம், தாயின் வயது, மாமனார் மூலம் வருவாய், கலைகள் மூலம் ஞானம் பெறுதல், சொத்துக்கள் சேர்தல், கல்வி ஆகியவற்றைக் குறிக்கும்.

**12-ஆம் வீடு** - செலவு, வெளிநாட்டுப் பயணம், பொருள் இழத்தல், பாவங்கள் செய்தல், மனைவியை இழத்தல், பகைவர் பயம், கடன் தீர்த்தல் ஆகியவைப் பற்றிக் குறிக்கும்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



இந்தப் பலன்களுடன் கிரக காரகத்துவங்களையும் ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ள வேண்டும். குறிப்பிட்ட ஒரு விஷயத்தைப் பற்றி அறிய இரு நிலைகளையும் தெரிந்து கொண்டால்தான் முடிவான கருத்தைத் தீர்மானிக்க முடியும்.

பிறக்கும் பொழுது, சூரியன், சந்திரன் மற்றும் கிரகங்கள் எந்தெந்த நிலையில் இருக்கின்றன என்பதைக் காட்டும் விளக்கப் படம்தான் ஜாதகம். அந்தக் குறிப்பிட்ட நேரத்தில் அடி வானத்தில் இருக்கும் ராசி முதலாவது இடம் எனப்படுகிறது.

மற்ற ராசிகள் முறையே இரண்டாவது இடம், மூன்றாவது இடம் என்று 12-வது இடம்வரை கணக்கிடப் படுகின்றன.

இந்த ஜாதகத்தைப் பார்த்து அநேக பலன்களைக் கூறலாம். இருந்தும் தேவையான பலன்களை மட்டும் தேர்ந்தெடுத்துக் கூறுவதில்தான் ஜோதிடரின் சாமர்த்தியமும் அனுபவமும் பயன்படுகிறது.

## 5. கிரகங்களின் பலன்கள்

இப்பொழுது நீங்கள் தெரிந்து கொள்ளப் போவது கிரகங்களுடைய காரகத்துவங்கள். அதாவது ஒவ்வொரு கிரகத்தின் செய்கை என்ன, அதென்ன என்ன பலன்களைக் கொடுக்கும் என்பதைத் தெரிந்து கொள்வது நல்லதல்லவா?

ஒன்பதாம் வீடு தந்தையின் நிலையைப் பற்றி விளக்கும். அதே போன்று சூரியனும் தந்தையின் நிலையை விளக்கும்.

அந்த ஜாதகத்தில் 9-ஆம் வீடும், அந்த வீட்டோனும் நல்ல பலம் பெற்று, அவற்றுடன்



சூரியனது பலமும் சிறப்புடன் அமைந்திருந்தால் அதன் பிறகு அந்தத் தந்தையைப் பிடிக்க யாராலாகும்? எல்லா நிலைகளிலும் மிகவும் சிறந்து விளங்குவாரே!

இவ்விரண்டு நிலைகளிலும் பலவீனம் ஏற்பட்டால் தந்தையிடம் குறைகள் இருக்கவே செய்யும். உங்களுக்கு விளக்குவதற்காக இதை உதாரணமாகக் கூறினேன்.

### சூரியன்

அரசாங்க உதவி, தந்தை, பொதுவான ஒழுக்கம், தண், அதிகாரம், வீரம், ஆற்றல், கௌரவம், செல்வாக்கு, தன்னுணர்வு, ஆன்மா.

### சந்திரன்

அரசாங்கத்து உதவி, கௌரவம், முகவசிகரம், புகழ், நித்திரை, தாய், பயணம், செல்வம், உற்சாகம், உணர்ச்சி வசப்படுதல், பிறரால் புரிந்து கொள்ளும் பக்குவம்.

### செவ்வாய்

சட்டம், காவல், சகோதரர், அசையாச் சொத்துக்கள், இராணுவத் தலைமை, வாதம், எதிர்ப்பு, பகைவர்கள், நோய், விருப்பம், கோபம், துணிவு, உடல் உரம்.

### புதன்

புத்தி கூர்மை, மாமன், நண்பர்கள், பகுத்தறிதல், பேச்சு, கல்வி, கணிதம், தர்க்கம், ஜோதிடம், வைத்தியம், நூல் வெளியிடுதல், கலையார்வம்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



குரு

பேரறிவு, செல்வம், மதிப்பு, கல்வி, பக்திமார்க்க ஈடுபாடு, படிப்பில் மேதா விலாசம், வேதாந்தம், தரும குணம்.

சுக்கிரன்

சிற்றின்பம், பாடல் வித்தை, திருமணம், அணிமணிகள், வாசனை, வாங்குதல் - விற்றல், அழகு, சுக போகப் பொருட்கள், பசுக்கள்.

(பெண்களின் ஜாதகங்களில் குருவுடன் சேர்ந்து சுக்கிரனுக்கும் கணவன் காரகத்துவம் உண்டு.)

சனி

ஆயுள், முதுமை,கொடிய செயல்கள், வேலையாட்கள், மரணம், அவமதிப்பு, நோய், வறுமை, ஜீவன மார்க்கம், அன்னிய பாஷை அறிவு, விஞ்ஞானம், கல்வி, திருட்டு.

ராகு

உடல் வலி, தோல்வி, பாம்பு, திருட்டு, பயணம், சூதாட்டம், கடுமையான பேச்சு, தந்தை வழி பாட்டன்.

கேது

தாய்வழிப் பாட்டன், வேதாந்தம், முக்திநிலை, மாய வித்தைகள், பகைவருக்குத் தொல்லை ஏற்படுத்துதல், சுரம், புண், வலி.

இக்காரகத்துவங்கள் சுருக்கமானவை என்றாலும் முக்கியமானவைகளாகும்.



இன்னும் சில சிரேஷ்டமான குணாதிசயங்களும் கிரகங்களுக்கு உண்டு.

சூரியன்

பொது மக்கள் தொண்டு, உத்தியோகம், மருந்துகள், மலை மீது சுற்றுதல்.

சந்திரன்

இரத்த புஷ்டி, பட்டாடை, காய்ச்சல், ஸ்திரிகளுடன் சயன சுகம், உத்தியோகம்.

செவ்வாய்

கம்பீரம், ஜனனேந்திரிய கோளாறு, பெருந்தன்மை, பூமி, சச்சரவு.

புதன்

பேச்சில் மேன்மை, குடும்ப சுபிட்சம், நரம்பு அமைப்பு, அரசியல் ஞானம், வியாபாரத் திறமை.

குரு

தூய்மை, பேரன்மார்கள், பிறருக்கு உதவுதல், அழகான இல்லம், சுக வாழ்வு, பணம், க்ஷேத்திராடனம், வாகன சுகம்.

சுக்கிரன்

கலையம்சம், மனைவியால் சுகம், உயர்ந்த பதவி, காதல் விவகாரம், சிற்றின்ப உறுப்புகள், அன்பு, நடனம், சினிமா மோகம்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



**சனி**

அலைச்சல், அடிமை நிலை, போலித் தன்மை, இயந்திரங்கள்.

**ராகு**

ஏமாற்றுதல், இட மாற்றம், பொருள் குவித்தல், மதக் கோட்பாடுகள் இல்லாத நிலை.

**கேது**

தெய்விக அறிவு, சுபிட்சம், அனைத்துச் செல்வங்கள்.

இவையெல்லாம் கிரகங்களின் மிகவும் விசேஷமான குணங்களாகும்.

இக்கிரக காரகத்துவங்களுக்கும், வீடுகளுக்குரிய காரகத்துவங்களுக்கும் ஒருவித இணைப்பு உண்டு.

முதல் வீட்டுக்கு அதாவது லக்னத்திற்குக் காரகன் சூரியன்

2-ஆம் வீட்டுக்குக் காரகன் குரு

3-ஆம் வீட்டுக்கு - செவ்வாய்

4-ஆம் வீட்டுக்கு - சந்திரனும், புதனும்

5-ஆம் வீட்டுக்கு - குரு

6-ஆம் வீட்டுக்கு - செவ்வாயும், சனியும்

7-ஆம் வீட்டுக்கு - சுக்கிரன்

8-ஆம் வீட்டுக்கு - சனி

9-ஆம் வீட்டுக்கு - சூரியனும், குருவும்

10-ஆம் வீட்டுக்கு - சூரியன், புதன், குரு, சனி ஆகிய நால்வரும் காரகராகிறார்கள்.



11-ஆம் வீட்டுக்கு - குரு

12-ஆம் வீட்டுக்கு - சனி

முன்பு கிரகங்களுக்கும், பாவங்களுக்கும் (வீட்டுக்கும்) கூறியுள்ள காரகத்துவங்களை நினைவில் கொண்டு ஒப்பிட்டுப் பார்த்தால், இந்த இணைப்பின் முக்கியத்துவத்தை உணர்வீர்கள்.

வீடு - கிரகம் ஆகிய இரண்டின் பலன்களின் அடிப்படையிலேயே, அந்தந்த விஷயங்களைப் பற்றி அறிய வேண்டும்.

இப்பொழுது ஜாதகம் குறித்து, ஓரளவு பலன் சொல்லும் அளவுக்குத் தேர்ச்சி பெற்றிருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

இவ்வுலகில் 450 கோடி மக்கள் இருக்கிறார்கள் என்றால் அத்தனை பேருக்கும் ஜாதகம் உண்டு. அதற்கேற்பவே அவரவர் வாழ்க்கையும் அமைந்திருக்கும்.

அவ்வப்போது ஏற்படும் கிரகப் பெயர்ச்சி, சஞ்சாரம் போன்றவற்றுக்கேற்ப அவரவர் வாழ்க்கையில் ஏற்றமோ இறக்கமோ ஏற்பட்டுக் கொண்டிருக்கும்.

கெடுதலான நேரங்களில், அவ்வண்ணம் தீங்கு விளைவிக்கும் கிரகத்திற்குச் சாந்தி செய்தால், அதனுடைய கடுமை குறையும்.

ஆதிமனிதன், விண் கோள்களை மனிதருடைய எதிர்காலத்தைக் காட்டும் சகுனங்களாகவே கருதினான். எதிர்காலத்தைத் தெரிந்து கொள்ளும் நம்பிக்கையிலேயே விண் கோள்களைக் கவனித்தான். ஆகவே வான நூலுக்கும், ஜோதிடத்திற்கும் சில

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



அடிப்படை ஒற்றுமைகள் இருப்பதில் வியப்பொன்றுமில்லை!

மனிதன் விண்வெளி விநோதங்களைச் சகுனங்களாக்கினான். எதிர்காலத்தை மேலும் தெளிவாக அறிந்து கொள்வதற்காக அந்தச் சகுனங்களை உன்னிப்பாகக் கவனிக்கத் தொடங்கினான்.

ராசி வட்டம், கோள்களின் சுழற்சி முதலியவற்றைக் கண்டறிந்தான். ஜோதிடம் வளர்ச்சியடைந்தது.

இராகு கேது என்னும் இரகங்கள் இயற்கை ஜோதிடத்திற்கு இந்தியர்கள் வழங்கிய ஒரு மிகச் சிறந்த அம்சம் - கண்டுபிடிப்பு என்று கூடச் சொல்லலாம்.

இராகு கேது என்பவை உண்மையில் இரகங்களே அல்ல. சூரியனைச் சுற்றி அமைந்துள்ள, பூமியினுடைய பாதையில் - பூமியைச் சுற்றி அமைந்துள்ள - சந்திரனுடைய பாதையில் குறுக்கிடும் புள்ளிகள் தாம் இராகு கேது எனப்படுகின்றன.

இவை இரண்டும் எப்போதும் ஒன்றுக்கொன்று எதிர் எதிர்த் திசையில் இருக்கும். இவை மற்ற இரகங்கள் சுற்றுவதற்கு எதிர்த் திசையில் சுற்றுகின்றன.

இராகு கேதுகளின் இருப்பிடத்தைச் சரியாகக் கணக்கிட்டால், சூரிய சந்திர இரகணங்களை நாம் முன் கூட்டியே அறிந்து கொள்ளலாம்.

உச்சம், நீசம், பகை, நட்பு, காரகன், கேந்திரம், திரிகோணம் போன்றவையெல்லாம் இரேக்க ஜோதிடத்திலிருந்து அப்படியே நாம் ஏற்றுக் கொண்டதாகவே தெரிகிறது.



இந்தியர்கள் ஜாதகக் கணிப்பு தவிர இராணுவ ஜோதிடத்திலும் முகூர்த்த சாஸ்திரத்திலும் அதிக அக்கறை செலுத்தினர்.

மருத்துவ ஜோதிடத்திலும், நிமித்த ஜோதிடத்திலும் கூட ஓரளவு கவனம் செலுத்தினர்.

இவை எல்லாவற்றையும் விட முக்கியமாக நாம் ஜோதிடத்தை இந்து சமயத்தின் அடிப்படை நம்பிக்கைகளுள் ஒன்றாக ஏற்றுக் கொண்டுள்ளோம்.

பிற்காலத்தில் சமஸ்கிருதத்தில் நிறைய ஜோதிட நூல்கள் எழுதப்பட்டன. அவற்றுள் வராஹமிஹிரர் எழுதிய பிருஹத்சம்கிதா என்னும் நூலும், பத்ரபாஹு என்பவர் எழுதிய பத்ரா பாட்சம் கிதா என்னும் நூலும் குறிப்பிடத் தக்கவை. அப்போது தான் அதர்வ வேதத்தின் பின்னிணைப்பாக ஜோதிடம் சேர்க்கப்பட்டது.

மனிதருடைய வாழ்க்கை முறைகளை மனிதன் பிறக்கும் போது இருந்த கிரக நிலைகள்தான் நிர்ணயிக்கின்றன என்று ஜோதிட நூல் கூறுகின்றது. அதாவது ஜோதிட நூலின்படி மனித வாழ்க்கை முறையில் கடவுள் தலையிட முடியாதா என்று கேட்பர் சிலர். அது சரியன்று.

கிரகங்கள் கடவுளின் படைப்பு. அவை கடவுளின் ஏவலாட்கள். ஒவ்வொரு வேலைக்காரனுக்கும் ஒவ்வொரு வேலையைக் கொடுத்து வாங்குவதில்லையா? அதே போன்றுதான் கடவுள் தன்னுடைய காரியத்தை, இவர்களைக் கொண்டு முடித்துக் கொள்கிறார்.

வீட்டில் உள்ள விளக்குகளுக்குத் தனி ஸ்விட்ச் என்று இருந்தாலும், எல்லாவற்றிற்கும் பொதுவாக மெயின் ஸ்விட்ச் என்று ஒன்றுண்டல்லவா!

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



பொதுவான வான நூல் உண்மைகள் அடங்கிய பிரிவு இயற்கை ஜோதிடம் எனப்படும். இந்த வான நூல் உண்மைகளை மனித வாழ்க்கை முறையோடு தொடர்புபடுத்திப் பார்க்கும் பிரிவு கணிப்பு ஜோதிடம் எனப்படும்.

கணிப்பு ஜோதிடத்தில் பின்னர் ஜாதக ஜோதிடம் என்ற கிளை தோன்றியது. இந்திய ஜோதிடத்தைப் பொறுத்த வரையில் ஜாதகம் அமைத்தல், அஷ்டவர்க்கம், நவாம்சம் அமைத்தல் முதலியவை இந்தப் பிரிவில் அடங்கும்.

ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒரு கிரகத்தின் நிலை என்ன? ராசிகளின் நிலை என்ன, சூரியன் சந்திரன் நிலை என்ன என்பன போன்ற விவரங்களை முன் கூட்டியே கணித்து ஆண்டு தோறும் பஞ்சாங்கம் வெளியிடப் படுகிறது.

ஜோதிடத்திற்குத் தேவையான ஜாதகம் அமைப்பதற்கு அத்தனைத் தகவல்களும் பஞ்சாங்கத்தில் கொடுக்கப்பட்டிருக்கும்.

பிறந்த நேரத்தைக் குறித்துக் கொண்டு அதற்கான நட்சத்திரம், ராசி, அப்போதுள்ள கிரகங்களின் அமைப்பு அத்தனையும் எளிதில் குறித்து விடலாம். அதன் பிறகு பலன்களை அறிய வேண்டியதுதான்.

சூரியனும் சந்திரனும் அவற்றின் ஈர்ப்பு விசையின் காரணமாகப் பூமியிலுள்ள கடலில் ஓதங்களை உண்டாக்குகின்றன. இதன் காரணமாகப் பூமியின் வானிலை பாதிக்கப்படுகிறது. இதை விளக்குவதுதான் ஜோதிட வானிலையியல்.

முழுநிலவு அன்றும், அமாவாசை அன்றும், சூரியன், பூமி, நிலவு ஆகிய மூன்றும் கிட்டத்தட்ட



ஒரே நேர்கோட்டில் இருக்கின்றன. எனவே, இது போன்ற நிலைகளில் பூமியின் பரப்பில், ஈர்ப்பு விசையின் பாதிப்பு சற்று அதிகமாகவே இருக்கும்.

அமாவாசை, முழுநிலவு தினங்களில் கடல் ஓதம் அதிக தீவிரமாக இருக்கும். இது போலவே உலகத்து உயிரினங்களின் அன்றாட வாழ்க்கையிலும் சில மாறுபாடுகள் காணப்படுவது அனுபவ பூர்வமாகக் கண்ட உண்மை.

யுரேனஸ், நெப்டியூன், புளூட்டோ ஆகிய கோள்கள் கண்டு பிடிக்கப்பட்ட பின்னர் அவையும் ஜோதிடத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன.

விண்வெளி ஆராய்ச்சி இன்று எவ்வளவோ வளர்ந்துள்ளது. சந்திரனில் காலடி பதித்து சூரிய குடும்பத்தைத் தாண்டியும் ராக்கெட் விடும் அளவிற்கு மனிதன் வளர்ச்சியடைந்துள்ளான். வானியலும் வியக்கத்தக்க அளவில் வளர்ந்துள்ளது.

பேரண்டப் பெருவெளியில் எத்தனையோ கோடி நட்சத்திரங்களும் அண்டங்களும் தொங்கி கொண்டே சுழல்கின்றன. அவை எப்படியோ ஒரு நியதிக்கு உட்பட்டு இயங்கி வருகின்றன.

கோடானு கோடி யுகங்களாக அப்படியே இயங்குகின்றன. கோள்கள் எல்லாம் பம்பரத்தைப் போலச் சுழன்று கொண்டே சூரியனை வலம் வருகின்றன.

கோள்களுக்குச் சில கோள்கள். இப்படி வியாபித்திருக்கும் அவற்றின் இயக்கமோ இன்னும் அதிசயம்.

"சாட்டி நிற்கும் அண்டமெல்லாஞ்
சாட்டையிலாப் பம்பரம் போல்
ஆட்டுவிக்குங் குற்றாலத் தண்ணலார்"

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



என்று இந்த அதிசயத்தை இரண்டே வரிகளில் குற்றாலத்தலைவனின் கூற்றாகத் திரிகூடராசப்பக் கவிராயர் பாடியுள்ளார்.

இப்படிப்பட்ட நமது அறிவுக்கு எட்டாத சுழற்சிகளை, இயக்கங்களையெல்லாம் கண்டு களித்த நமது முன்னோர் அதற்கு ஒரு வடிவம் கொடுத்தார்கள்.

சந்திரனையும் நட்சத்திர மண்டலங்களையும் ஆபரணங்களாக அணிந்து தாண்டவம் புரியும் நடராஜ மூர்த்தியைக் கற்பித்துப் பூஜித்தார்கள்.

பேரண்டப் பெருவெளி முழுவதும் நீக்கமற நிறைந்து பரந்து நிற்கும் சக்தியை நமது கண்களால் காண ஒரு கலை வடிவத்தைப் படைத்தார்கள்.

இவர்கள்தாம் பேரண்டப் பெருவெளியில் உள்ள கிரகங்கள். இவ்வுலகில் ஜனிக்கும் ஜீவன்களை எவ்வண்ணம் இயக்குவிக்கின்றன என்பதையும் கண்டார்கள். அதுவே ஜோதிடக் கலையாயிற்று.

உலக மக்கள் பிறத்தல், வளர்தல், இறத்தல் ஆகிய முக்குணம் வாய்த்தனராய் மேலே கூறிய நவக்கிரகங்களால் பலவாறு ஊழ்வினைப் புண்ணிய சடு போல் இயக்கப்பட்டு, பிறந்து வளர்ந்து சுக துக்கங்களை அனுபவித்து, தங்களுக்கு விதித்திருக்கும் கால அளவு வரை வாழ்ந்து மாண்டு வருகின்றனர்.

இவ்வித ஜீவித மரண வாழ்க்கையின் தத்துவத்தை விளங்கச் செய்வதும் வாழ்நாளில் வழிபடு பலனை யூகிப்பதும் ஜோதிடம் ஆகும்.

ஜோதிட சாஸ்திர உண்மை நமக்குத் தெரியும் பொழுது, நவக்கிரகங்களின் செயல்பாட்டை அறிந்து, இந்த நிலையில் இந்தப் பலன் உண்டாகும் எனக் கண்டு கொள்ளலாம்.



அவ்வாறு கண்டு கொண்டால், இன்ன தேதியில், இந்த நேரத்தில், இன்ன இடத்தில் நவக்கிரகங்கள் நம் நன்மைக்கு, அதாவது ஆசை நிறைவேற அனுகூலமான நேரம் இதுதான் என்று கண்டு கொள்ளலாம்.

அவ்வாறு அறிந்த பின் நம் வாழ்நாளில் நமக்கு இயற்கையாக ஏற்பட்டுள்ள கெட்ட பலன்களிலிருந்து நீங்குவதற்குச் சில வழி முறைகளைக் கடைப்பிடித்து நம் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ளலாம்.

இதன் தத்துவம் ஒவ்வொருவருக்கும் அனுபவத்திலும், நடைமுறை வழிகளின் இறுதியிலும் ஏற்படக் கூடிய விஷயமாகும்.

கருணை வடிவான இறைவனின் திருவிளையாடலின் பெருமையை, இந்த நவக்கிரகங்களால் நாம் கண்டு அறிய வேண்டும்.

## 6. கால பலன்கள்

இனிப் பொதுப் பலன்களைப் பார்ப்போம்.

ஒரு வருஷம் இரண்டு அயனங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

அயனம் என்றால் சூரியனுடைய கதி - செல்லுதல் - எனப் பொருளாகும்.

சூரியன் வட பாகத்தில் சஞ்சரிக்கும் காலம் உத்தராயணம். தை, மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி, ஆனி ஆகிய ஆறு மாதங்கள். சூரியன் தென் பாகத்தில் சஞ்சரிக்கும் காலம் தட்சணாயனம். இது ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி ஆகிய ஆறு மாதங்களாகும்.



https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



இவ்விரண்டினுள், எந்த அயனத்தில் பிறக்கிறார்களோ அதற்கேற்ப பலன் அமையும்.

உத்தராயணத்தில் பிறந்தவர்கள் எப்பொழுதும் சுகபோகங்களை அனுபவிக்கக் கூடியவர்களாயிருப்பார்கள்.

புது முறையில் தந்திரங்களைக் கையாண்டு வெற்றி காண்பார்கள்.

எப்பேர்ப்பட்ட எதிரியாயிருந்தாலும், அவனை வென்று எளிதில் வெற்றி வாகை சூடுபவர்களாக இருப்பார்கள்.

சாஸ்திர ஆராய்ச்சியில் மிகுந்த விருப்பமுள்ளவராயிருப்பர்.

போரிடுவதில் மிகுந்த விருப்பம் உண்டு.

மிகுந்த புத்திசாலியாகவும் இருப்பர்.

தட்சணாயணத்தில் பிறந்தவர்கள் - மிகுந்த வசீகரம் உடையவர்கள்.

மோகத்தில் அதிகம் ஈடுபடாமல், ஞானியைப் போன்று இருப்பர்.

புராண, இதிகாச, ஞான நூல்களைப் படிப்பதுடன் அவ்வண்ணமே நடந்து கொள்ள வேண்டுமென்று அவாவுறுவார்கள்.

குறைவற்ற சீலம் உடையவராயிருப்பர்.

இவ்வண்ணமே எந்தப் பருவத்தில் ஜாதகர் பிறந்தார் என்பதற்கும் பலன் உண்டு.

ஒரு வருஷத்தை ஆறு ருதுவாக - பருவ காலமாகப் பிரித்துள்ளார்கள்.

**வசந்த ருது** - இளவேனில் காலம் - சித்திரை, வைகாசி.



இந்தப் பருவத்தில் பிறந்தவர்கள் நீண்ட ஆயுள் உடையவர்களாயிருப்பார்கள். செல்வமும் நிறையச் சேரும்.

இவர்கள் நறுமணத்தை அதிகம் விரும்புவார்கள். நல்ல நறுமணத்தைத் தேடிப் பிடித்து உடம்பில் பூசிக் கொண்டு மகிழுவார்கள்.

இவர்கள் - சாதாரண உணவைவிட - பலகாரங்களையே அதிகம் விரும்புவார்கள். அது போன்று சுவையான மாலைப் பருவத்திலும் இவர்களுக்கு விருப்பம் அதிகமாக இருக்கும்.

**கிரீஷ்ம ருது:** முதுவேனில் காலம் - ஆனி, ஆடி

இந்தப் பருவத்தில் பிறந்தவர்கள் மிகவும் மேன்மையானவர்களாகத் திகழ்வார்கள்.

சமயோசிதமாகப் பேசும் திறன் கொண்ட புத்திசாலிகள்.

நீரில் நன்கு மூழ்கிக் குளிப்பதில் மிகுந்த விருப்பம் கொண்டவர்கள்.

மிகுந்த குண சீலர். ஞானவான்.

அனைவரும் இவர்களை மிகவும் கௌரவிப்பார்கள்.

இத்தனைக்கும் இவரது உடல் மிகவும் மெலிந்து காணப்படும்.

**வருஷருது:** - கார்காலம் - ஆவணி, புரட்டாசி.

இவர்கள் மிகுந்த உவர்ப்புப் பொருள்களையே விரும்பிச் சாப்பிடக் கூடியவர்கள்.

இன்ப நுகர்ச்சியில் மிகுந்த நாட்டம் உள்ளவர்கள்.

தாமக் கவலை அதிகம் இருக்கும்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



இவர்கள் புண்ணியத் தலங்களிலேயே - அநேகமாக வசித்து வருவார்கள்.

**சரத்ருது:** - கூதிர் காலம் - ஐப்பசி, கார்த்திகை

இவர்கள் மிகவும் பிரபுத்துவம் உள்ளவராக இருப்பார்கள்.

இவர்கள் பார்க்கும் அலுவலும் மிகவும் [illegible]ருமையுள்ளதாக அமையும்.

[illegible]காம இச்சை அதிகம் உள்ளவர்கள் என்பதோடு, பிற பெண்கள் பால் மிகுந்த மோகம் கொண்டு துன்புறுவார்கள்.

**ஹேமந்தருது:** - முன்பனிக் காலம் - மார்கழி, தை

இவர்கள் கண்கள் மிகவும் அழகாக அமைந்திருக்கும்.

இவர்கள் உடல் அமைப்போ மிகவும் மென்மையாயிருக்கும்.

கருங்கூந்தலில் மலர் சூடியிருந்தால் போதும். அந்தப் பெண்களின்பால் மிகுந்த ஆசை உள்ளவர்கள்.

இவர்களுக்கு மேழிச் செல்வம் அதிகமாக இருக்கும்.

**சசிருது:** - பின்பனிக்காலம் - மாசி, பங்குனி

இவர்கள் தூய்மையானவர்கள்.

இவர்களுக்கு நிலையான புகழ் அமைந்திருக்கும்.

மிகுந்த தைரியசாலியாயிருப்பார்.

இவர் நல்ல நடத்தை உடையவர்.

இவர்கள் நீரில் நீந்தி விளையாடுவதை மிகவும் விரும்புவார்கள்.



ஜாதகர் எந்த 'பட்சத்தில்' பிறந்துள்ளாரோ, அதற்கேற்ப குணாதிசயங்கள் அமையும்.

இதை சுக்கில பட்சம், (பூர்வ பட்சம்) என்பார்கள்.

அது வளர்பிறை காலத்தைக் குறிக்கும். அமாவாசையிலிருந்து பௌர்ணமி வரை வளர்பிறை தானே.

ஜாதகர் வளர்பிறைக் காலத்தில் பிறந்திருந் தால், இனிமையாகப் பேசுவார். இவர் பேச்சில் - கோபம் கொண்டவன் கூட - குழைந்து பேசுவார்கள்.

இவருக்குத் தரும சிந்தை மிகுதியாகவே இருக்கும்.

இவர் சொன்ன சொல் தவறமாட்டார்.

சுக போகங்களை நன்கு அனுபவிப்பார்.

எந்தக் காரியத்தையும் மிகவும் பக்குவமாகச் செய்யக் கூடியவர்.

மிகுந்த ஒழுக்கம் உள்ளவராயிருப்பார்.

இவரிடம் தயை மிகுந்து காணப்படும்.

இவர் செல்வந்தராகவே இருப்பார்.

இவர் மிகுந்த சாதுரியம் உள்ளவர், களங்கம் இல்லாத உள்ளம் படைத்தவர்.

தேய்பிறையைக் கிருஷ்ண பட்சம் (அமர பட்சம்) என்பார்கள்.

தேய்பிறையில் பிறந்தவர் வெறுப்பு மிக்கவரா யிருப்பார்.

தன் காரியத்திலேயே கண்ணும் கருத்துமாக இருக்கக் கூடியவர்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



இவரிடம் சற்று முரட்டுத்தனம் இருக்கும். அதனால் குடும்பம் நாசமாகும்.

இவர் பேச்சில் கடுமையான சொற்கள் அதிகம் இருக்கும்.

எதிலும் ஒழுங்கு முறையைக் கடைப் பிடிக்க மாட்டார்.

அதனால் அவருக்கு வாழ்க்கையில் கஷ்டம்தான் மிஞ்சும்.

ஜாதகர் எந்தக் காலத்தில் பிறந்தாரோ அதற்கேற்ற பலனும் உண்டு.

ஒரு நாளை ஆறு காலங்களாகப் பிரித்துள்ளார்கள். அவை விடியற்காலம், பகல் காலம், மத்தியான காலம், பிற்பகல் காலம், அஸ்தமன காலம், இரவுகாலம் எனப்படும்.

**விடியற்காலையில் பிறந்தவர்கள்** - அனைவரிடமும் பிரியமாக நடந்து கொள்வார்கள். நல்ல வருமானம் கிடைக்கும். செல்வந்தர்களாக வாழ்வார்கள். இவர்கள் மிகுந்த பாக்கியசாலிகளாவார்கள்.

**பகற்பொழுதில் பிறந்தவர்கள்** இவர்களிடம் அனைவரும் அன்பு காட்டுவார்கள். அவர்களுடைய முகராசி அப்படி. இவர்களும் பலரைக் காப்பாற்றக் கூடியவர்களாக இருப்பார்கள்.

**மதியவேளையில் பிறந்தவர்கள்** - இவர்களுக்குக் கடன் சுமையே இராது. இவர்களுக்கு அரசாங்க ஆதரவு நிறைய இருக்கும். செல்வமும் சேரும். பலருடைய நட்பைப் பெறுவார்கள்.



**பிற்பகல் நேரத்தில் பிறந்தவர்கள்** - இவர்கள் உழைப்பால் உயர்வார்கள். நன்கு சம்பாதித்துப் பெருமை.

**மாலை நேரத்தில் பிறந்தவர்கள்** - இவர்கள் வாழ்க்கை அவ்வளவாகச் சுகப்படாது. அவமானம் ஏற்படும். குடும்பத்தில் வறுமையும் தாண்டவமாடும்.

**இரவு நேரத்தில் பிறந்தவர்கள்** - இவர்களுக்குப் புத்திரப் பேறு இருப்பது துர்லபம். ஆசாரங்களைக் கடைப்பிடிப்பவர்களாக இருப்பார்கள். இவர்கள் மிகுந்த அடக்கமானவர்கள்.

எந்தக் கிழமையில் பிறந்தார்களோ அதற்கேற்ப ஜாதகரின் வாழ்க்கையில் பலன்கள் அமையும்.

**ஞாயிற்றுக்கிழமை:-** இவர்கள் கண்கள் எப்பொழுதும் சற்று சிவந்து காணப்படும். இவர்கள் ரூபமோ மன்மதனை ஒத்திருக்கும். அதாவது மிகவும் அழகாகவும் கவர்ச்சியாகவும் இருப்பார்கள். வேதம் ஓதும் அந்தணர்களைத் தேர்ந்தெடுத்து பூஜிக்கும் இயல்புடையவர்கள். மிகுந்த செல்வம் படைத்தவர்கள். அத்துடன் வலிமை மிக்க உடலும் அமைந்திருக்கும். மக்களிடையே இவர்களுக்கு மிகுந்த செல்வாக்கு உண்டு.

**திங்கட்கிழமை:-** இவர்கள் புகழ் மிக்கவர்கள். விரதங்களைத் தேர்ந்தெடுத்து அனுஷ்டித்து வருவார்கள். மிகுந்த மரியாதை உள்ளவர்கள். தர்மத்தைப் பரிபாலித்து வருவார்கள்.

**செவ்வாய்க்கிழமை:-** இவர்கள் எப்பொழுதும் பொய்யே பேசுவார்கள். உண்மை பேச இவர்களுக்குத் தெரியாது. ஆனால் சொன்ன சொல்லை நிறைவேற்றுவார்கள். இவர்களுக்கு நிலையான

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



வருமானம் இராது. இவர்களைப் பலரும் ஈனன் என்று இகழ்வார்கள். மிகுந்த கபடமானவர்கள்.

**புதன் கிழமை:-** இவர்கள் இறைவனை எப்பொழுதும் ஆராதனை செய்து வருவார்கள். அந்தணர்களை வணங்குவார்கள். இவர்களுக்கு மேலான பதவி கிடைக்கும். நல்ல காரியங்களைக் கருத்தோடு செய்து வருவார்கள். இவர்கள் பொய் பேச அஞ்சுவார்கள்.

**வியாழக்கிழமை:-** இவர்களுக்கு அரசாங்கத்தின் ஆதரவு நிறைய உண்டு. இவர்கள் புகழ் ஓங்கி நிற்கும். உண்மையே பேசுவார்கள். தர்மங்களைச் செய்வதுடன், யாகங்களையும் செய்யக் கூடியவர்கள். நல்ல ஒழுக்கமுடையவர்கள். விவேகமானவர்கள்.

**வெள்ளிக்கிழமை:-** இவர்கள் நீதி நெறியோடு வாழும் குணம் உள்ளவர்கள். இவர்களுக்குத் தனதானியங்கள் நன்கு சேரும். மன்னரைப் போன்ற தகுதி உடையவர்கள். நல்ல காரியங்களைச் சிந்தித்துச் செயலாற்றுபவர்கள்.

**சனிக்கிழமை:-** இவர்கள் உடல் வலிமை யற்றவர்கள். பிற பெண்களிடம் மோகம் கொள்பவர்கள். இவர்களுக்குப் பெருமையற்ற இழிவான உறவினர்களே அமைவார்கள். எந்த விரதங்களையும் அனுஷ்டிக்க மாட்டார்கள்.

தமிழ் மாதக் கணக்குப்படி எந்த தேதியில் பிறந்தாரோ அதற்கேற்ப பலன் அமையும்.

1. நீச்சல் வீரர், கடல், ஆறு, குளம் போன்றவற்றில் நீந்திக் களிப்பார்.

2. இவர் போஜனப் பிரியர்: நிறையச் சாப்பிடுவார்.



3. வீட்டிற்கு வருவோருக்கு இல்லையென்னாது சாப்பாடு போடுவார்.

4. பயந்த சுபாவம் உள்ளவர். எதற்கெடுத்தாலும் பயப்படக் கூடியவர்.

5. இவர் நன்றாகச் சமைப்பார். அது சுவையாக இருக்கும்.

6. விருந்து சாப்பிடுவதில் மிகுந்த பிரியம் கொண்டவர்.

7. இவர் எண்ணம் எல்லாம் எப்பொழுதும் உயர்ந்தே காணப்படும்.

8. இன்பத்தில் விருப்பம் கொண்டவர். சுக போகங்களை நன்கு அனுபவிப்பார்.

9. இவர் அநேகமாக வாகனங்களில் அமர்ந்தே செல்வார்.

10. இவருக்குப் பல வகையான வாகனங்கள் கிடைக்கும். அவ்வப்போது அதை மாற்றிக் கொண்டே இருப்பார்.

11. இவர் தீர்த்த யாத்திரை செல்வதில் மிகுந்த பிரியம் உள்ளவர்.

12. இவர் பிறந்த ஊர் ஒன்றாயிருக்கும். வாழ்வது வேறு ஊராயிருக்கும். ஊரை விட்டு, வீட்டைவிட்டு, வெளியேறுபவர்.

13. இவருக்கு ஏற்படும் துன்பங்களைத் துடைக்க புனித தலங்களுக்குச் சென்று வருவார்.

14. இவர் முழுக்க முழுக்க வாகனங்களில் ஆதிக்கம் செலுத்தக் கூடியவர்.

15. இவர் பிறந்த குலத்திற்குத் தலைவராக அமைவார். குலத்தின் மீது அதிகாரம் செலுத்தக் கூடியவர்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil

16. பிறந்த ஊர் கிராமமாயிருந்தாலும், அதிக்கத்தோடு செல்வாக்கு உள்ளவர்.

17. மிக்க செல்வாக்கு உள்ளவர். குடும்பத்தில் அதிகாரம் செலுத்தக்கூடியவர்.

18. கல்வி கேள்விகளில் சிறந்தவர். அறிவுச் செல்வத்தோடு தனம் படைத்த செல்வந்தராகவும் இருப்பார். மிக்க செல்வாக்கு உண்டு.

19. எங்கு நீர் நிலைகள் அதிகமாக உள்ளதோ அங்கு இவர் அதிகாரம் பெறக் கூடியவர்.

20. எப்பொழுதும், மனைவி மீது வெறுப்பும் கோபமும் உள்ளவர். அதனால் அமைதியான குடும்பம் அமையாது.

21. இவர் கும்பகர்ணனை ஒத்தவர். தூக்கப் பிரியர். உட்கார்ந்து கொண்டே தூங்குவார்.

22. இவருக்கு மனைவியிடத்தில் மிகுந்த பிரியம் இருக்கும். அமைதியான குடும்பம் அமையும்.

23. இவர் தூக்கத்தில் பிரியம் உள்ளவர்தான் என்றாலும் அமைதியாக அமைய வேண்டும் அது.

24. இவருக்குச் சுகமான இன்ப இரவுப் பொழுதுகள் அமையும்.

25. பிறர் மனைவி மீது மிகுந்த ஏக்கம் கொள்வார். அதனால் சங்கடங்களும் ஏற்படும்.

26. இவர் ஒரு தூங்குமூஞ்சி. எப்பொழுதும் தூக்கத்திலிருந்து எழுந்து வந்தது போலவே இருப்பவர்.

27. இவர் ஒரு பிரயாணப் பிரியர். ஆனால் அந்தப் பிரயாணத்திற்குத் தடை ஏற்பட்டுக் கொண்டிருக்கும்.



28. இவருக்கு அரசாங்கத் தண்டனை காத்துக் கொண்டிருக்கும். இவர் நடந்து கொள்வது அப்படி!

29. இவருக்குத் தீயால் ஆபத்து உண்டு. அது போன்று விஷத்தினாலும் அபாயம் உண்டு.

30. இவர் நோயாளி. எப்பொழுதும் ஏதோ ஒரு வியாதி உடலில் குடி கொண்டிருக்கும்.

31-இல் பிறந்தவர்களுக்கு 1-ஆம் தேதி பலன்.

32-இல் பிறந்தவர்களுக்கு 2-ஆம் தேதி பலன்.

## 7. பிறந்த மாதப் பலன்கள்

ஜாதகர் எந்த தேதியில் பிறந்தாரோ அதற்கேற்ற பலனும் உண்டு.

திதிகள் பதினைந்து என்று முன்பே விளக்கியுள்ளேன்.

திதி என்பது வடசொல். இது சூரிய நிலையிலிருந்து கணக்கிடப்பட்ட சந்திர நாள் ஒன்றைக் குறிக்கிறது.

ஆனால் மற்ற நாளுக்கும் இந்த நாளுக்கும் வேறுபாடு என்னவென்றால், சூரியனால் உண்டாவது பகல் மானம், சந்திரனால் உண்டாவது இரவு மானம்.

ஆனால் சூரிய சந்திர கதியினால் உண்டாவது திதிநாள்.

அது பகலிலும் ஆரம்பிக்கும், இரவிலும் ஆரம்பிக்கும். ஆகவே ஒரே தினத்தில் இரண்டு திதிகள் கூடச் சம்பவிக்கும்.

இதைப் பஞ்சாங்கத்தில் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



சுமார் 58 நாழிகைகளைக் கொண்டு ஒரு திதி வியாபகமாவதால், திதி உதயம் நடுப்பகலிலும், நடுஇரவிலும், சூரியோதய காலத்திலும், மாலை நேரத்திலும் ஆரம்பிக்கும்.

வானத்தில் இராந்தி மண்டலத்தில் சந்திரனுக்கும் சூரியனுக்கும் மத்தியில் உள்ள தூரமே திதி என்பது. சந்திரனின் அசைவுக்கேற்ப அது மாறுபடும்.

இதைப பஞ்சாங்கத்தில் நன்கு கணித்துச் சொல்லியிருக்கிறார்கள். பிறந்த நேரத்தைக் கணக்கிட்டு எந்த திதி என்று சுலபமாகக் கண்டு பிடித்து விடலாம்.

**பிரதமை:** – எதற்கும் அஞ்சாத தைரியசாலி. எந்தக் காரியத்தையும் திர யோசித்தே செய்வார். நல்ல புத்திசாலி. எதையும் நிலையான புகழ் உண்டாகும்படி செய்து முடிப்பார். நல்ல செல்வந்தர். பிறரிடம் இனிமையாகவும் சாந்தமாகவும் பேசுவார்.

**துதியை:** – இவர் கால் நடைகளைப் பிரியமாக வளர்ப்பார். சொன்ன வாக்குத் தவற மாட்டார். உறவினருக்கு நன்கு உதவுவார். பொய் பேசவே தெரியாது. மிகுந்த புகழ் உடையவர். எப்பொழுதும் குற்றமற்ற காரியங்களையே செய்வார்.

**திரிதியை:** – மிகுந்த பலசாலி. பரிசுத்தமானவர். சுயமான அதிகாரம் உள்ளவர். ஆலயங்களைப் புதுப்பிப்பதிலும், புதிதாகக் கட்டுவதிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். இவர் சிந்திக்கும் காரியங்களைச் செய்து முடித்து விடுவார்.

**சதுர்த்தி:** – பிறர் இவரைச் சுலபமாக ஏமாற்றி விடுவார்கள். இவர் பல நாடுகளில் வாழக் கூடியவர்.



தானம் தருமம் எல்லாம் தவறாது செய்வார். அனைவருடனும் அன்பாகப் பழகுவார். எப்பொழுதும் முகம் மலர்ந்திருக்கும். ஏராளமான செல்வம் சேரும்.

**பஞ்சமி:** – காமி. பெண்களிடம் அதிக ஆசை உள்ளவர். எப்பொழுதும் சஞ்சல புத்தி படைத்தவர். மெலிந்த உடல்தான் அமைந்திருக்கும். வேத, புராண, இதிகாச நூல்களில் மிகுந்த ஆராய்ச்சி உடையவர்.

**சஷ்டி:** – இவருக்கு மனவலிமை குறைவுதான். அரசாங்க ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். எதையும் அவசரமாகச் செய்வார். அடிக்கடி கோபம் வந்துவிடும். இவருக்கு இளைத்த உடல்தான் அமையும்.

**சப்தமி:** – மிகுந்த சாமர்த்தியசாலி. நல்ல பொருள் ஈட்டுவார். அரசாங்க ஆதரவும் இருக்கும். இவருக்கு இருமல் நோய் ஏற்படும். பிறர் வெறுக்கும்படியான வார்த்தைகளையே பேசுவார். உடல் வலிமை உண்டு. இவருக்குப் பல இடங்களிலிருந்து சன்மானம் கிடைக்கும்.

**அஷ்டமி:** – மிகுந்த பேராசைக்காரர். இவருக்கு ஜலதோஷம் அடிக்கடி உண்டாகும். கல்வியில் மிக்க ஆர்வம் உள்ளவர். லட்சுமி கடாட்சமும் உண்டு. மன்னனைப் போல் வாழும் திறமைசாலி. புத்திரப் பேறு உடையவர்.

**நவமி:** – இவர் விலைமாதரைத் தேடிச் சென்று சுகம் அனுபவிப்பார். அதனால் இவர் குடும்பத்தோடு வாழ்வது துர்லபம். இவருக்கு வாத சரீரம் அமைந்திருக்கும். சற்று பருமனாகத்தான் இருப்பார். மிகுந்த பெருமை மிக்கவர்.

**தசமி:** – இவர் செய்யும் தருமத்தால், இவருக்கு நிலையான புகழ் உண்டாகும். நல்ல ஒழுக்கம்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



உள்ளவர். நீதி நெறியோடு வாழ்பவர். வாக்குத் தவற மாட்டார். சத்தியசீலர். குலப்பெண்ணோடு கூடி வாழ்வார்.

**ஏகாதசி:** - நல்ல காரியங்கள் என்றால் செலவுக்கு அஞ்ச மாட்டார். இவருக்கு நல்ல பண்புள்ள வேலையாள் அமைவான். மிகுந்த செல்வம் இருக்கும். அந்தணர்களிடம் மிகுந்த அன்பு காட்டுவார். நன்மை செய்வதில் மிகுந்த விருப்பம் உண்டு. மரியாதையும் நல்ல அபிமானமும் உள்ளவர்.

**துவாதசி:** - புதுமையான செயல்களைத் தேர்ந்தெடுத்துச் செய்து வெற்றியும் பெறுவார். அந்த ஆற்றல் இவருக்கு உண்டு. அறநெறி தவற மாட்டார். நற்குணம் படைத்தவர். செல்வம் இவருக்குக் குவியும். குபேரனாக வாழ்வார்.

**திரியோதசி:** - இவர் மாந்திரீகப் பிரியர். நிறையச் செல்வத்தை அந்த வகையில் செலவழித்துப் பெருமை அடைவார். இவருக்குத் திரண்ட செல்வம் சேரும். ஆனால் எச்சிற் கையினாலும் காக்கையைத் துரத்த மாட்டார். லோபி. இவருக்கு நண்பர்களே இருக்க மாட்டார்கள். உறவினர்களும் உதவியாக இருக்க மாட்டார்கள். பலரும் இவரைப் பாவி என்று தூற்றுவார்கள்.

**சதுர்த்தசி:** - இவருக்குத் தன்மானம் என்பது சிறிதும் இருக்காது. கடினமான உள்ளம் படைத்தவர். மற்றவர்களுடைய குற்றங்களையே எப்போதும் பேசிக் கொண்டிருப்பார். பேய் போல் அலைந்து பிறர் பொருளை அபகரிக்கத் திட்டம் தீட்டுவார். மிகுந்த முன் கோபி. வாழ்க்கை சுகமாக அமையாது.

**பௌர்ணமி:** - இவருக்குப் பிறரை ஏமாற்றவே தெரியாது. மிகுந்த தயாள குணம் படைத்தவர். கல்வி



கேள்விகளில் சிறந்து விளங்குவார். எப்பொழுதும் சத்தியத்தையே நாடுவார். சாந்தமாக இருப்பார். மிகுந்த பொறுமைசாலி. உலக மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்று சிந்தித்துக் கொண்டே இருப்பார். சூது, வாது, கபடு, ஏமாற்று எதுவும் அறியாதவர்.

அமாவாசை, இதில் சேராது என்றாலும் இங்கு அமாவாசையில் பிறந்தவர்கட்கும் பலன் கூறப்பட்டுள்ளது.

அமாவாசையில் பிறந்தவர் - மந்திர தந்திரத்தால் பிறரை எளிதில் வசப்படுத்தக் கூடியவர். உக்கிரமான தெய்வங்களையே வணங்கி வருவார். வீரபத்திரர், ஆஞ்சநேயர், காளி, துர்க்கை இவர்களுக்கு அடிக்கடி வழிபாடு செய்து வருவார். இவர் பல வகையான வாகனங்களைத் தானே செய்து மகிழ்வார்.

இந்த திதிகளை இரண்டு சமபங்கிட்டு அதைக் கரணம் என்பர். அவை பதினொன்றாகும். அவ்வண்ணம் கரணத்தில் பிறந்தவர்களுக்கும் பலன் உண்டு.

ஒரு வருடத்திற்கு பன்னிரண்டு மாதங்கள் உண்டு என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும்.

ஜாதகர் எந்த மாதத்தில் பிறந்துள்ளாரோ அதற்கேற்ப அவரது வாழ்க்கை அமையும்.

**சித்திரை:** - இவருடைய புகழும் பெருமையும் எங்கும் பரவும். அதனால் எப்பொழுதும் இவர் மகிழ்ச்சியோடிருப்பார். இவர் வேதங்களையும் மந்திரங்களையும் உப நிஷதங்களையும் நன்கு கற்றவராயிருப்பார். பெற்றோர்களைப் போற்றிக் காப்பாற்றக் கூடியவர். எப்பொழுதும், எந்த நிலையிலும் சன்மார்க்க வழியிலேயே நடப்பார்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



**வைகாசி:** - சாஸ்திரங்களின் நுட்பங்களை உணர்ந்து நடக்கும் புலமையாளர். மிகுந்த தன்னம்பிக்கையிருக்கும். பிறகு தைரியசாலியாக இருக்கக் கேட்க வேண்டுமா? புராணம், இதிகாசங்களைப் படிப்பதோடு, அதைப் பிறருக்குப் புரியும்படி விளக்கவும் செய்வார். அரசாங்கத்திலிருந்து சன்மானமும் பெறுவார். மிகுந்த கண்ணியமானவர். இவர் சேர்க்கும் செல்வம் எல்லாம் நல்ல வழியில் வந்ததாகவே இருக்கும்.

**ஆனி:** - நீண்ட ஆயுள் உண்டு. இவரது புத்திரர்களும் நீடு வாழ்வார்கள். மிகுந்த தெய்வ பக்தி உள்ளவர். ஒழுக்கம், கருணை, தயாளம் யாவும் நிறைந்திருக்கும். மிகுந்த செல்வம் சேரும். குபேர வாழ்க்கை வாழ்வார். மிகவும் சாதுரியமாகப் பேசுவார். கோபம் உள்ளவர் என்றாலும், அது உடனேயே மறைந்து விடும். உடல் வலிமை மிக்கவர். நல்ல வாழ்க்கை அமையும்.

**ஆடி:** - இனிமையாகப் பேசுவார். கனிவாக உரையாடுவார். அதனால் பெண்கள் இவருக்குக் கட்டுப்படுவர். அவர்கள் மத்தியில் இருக்கவே ஆசைப்படுவார். மிகுந்த தெய்வ பக்தியும் உண்டு. செல்வம் சேரும். மனைவியோடு சிறப்பான வாழ்க்கையை நடத்துவார். இவரிடம் ஒழுக்கம் இருக்கும், கூடவே கருணையும் உண்டு.

**ஆவணி:** - இவருக்கு அவ்வப்பொழுது சன்மானம் வரும். மிகுந்த பக்தியுடன் நாள்தோறும் இறைவனை வணங்கி வழிபாடு செய்பவர். வேதங்களை அறிந்தவர். அந்தணர்களை அரவணைப்பவர். வாக்கில் தவற மாட்டார். பிறர்பால் மிகுந்த விசுவாசம் உள்ளவர். கீழ்மையானவர்களிடம் தொடர்பு கொள்ள மாட்டார்.



**புரட்டாசி:** - பிடிவாதம் உண்டு என்றாலும் அதை நல்லதுக்கே பயன்படுத்துவார். முரட்டுச் செயல்கள் இராது. கோபத்தையும் அகற்றிவிடுவார். வியாபார நுட்பங்களைப் பலநாடுகளிலிருந்தும் அறிந்தவர். தற்புகழ்ச்சியை விரும்புவார். மற்றவர்கள் மதிக்க வேண்டுமென்று, அதற்கேற்றபடி நடந்து கொள்வார். மற்ற நாடுகளைப் பற்றி நிறையத் தெரிந்து வைத்துக்கொண்டு பிறருக்கு எடுத்துச் சொல்வார்.

**ஐப்பசி:** - இவரைப் பாவி, லோபி என்று மற்றவர்கள் கூறுவார்கள். பிறர் மனதைப் புண்படுத்தும்படி நடந்து கொள்வார். உடல் அழகர். சிவப்பாகவும் கம்பீரமாகவும் இருப்பார். சபல உள்ளம் படைத்தவராதலால் கெட்ட செய்கைகளில் ஈடுபடுவார். பிறரை ஏமாற்றி மகிழ்ச்சியடைவார். குரோதம், வஞ்சனை, கபடம் எல்லாம் கூட உண்டு.

**கார்த்திகை:** - இவர் உறவினர்களோடு சேர்ந்து வாழ்வார். இவரது கண்கள் அகன்று விசாலமாக அமைந்திருக்கும். உடல் அமைப்பும் கம்பீரமாக இருக்கும். இவரைச் சுற்றியுள்ளவர்கள் மிகவும் புகழ்ந்து பேசுவார்கள். மிகுந்த கண்ணியம் உடையவர். சிறப்பான காரியங்களை நிறைவேற்றக் கூடியவர்.

**மார்கழி:** - இவர் அறநெறி வழுவாதவர். ஆனால் செல்வம் தேடும் ஆற்றல் இல்லாதவர். பெற்றோர் சொற்களுக்கு மதிப்புக் கொடுப்பார். இறைவனைத் தினம் வணங்குவதோடு, தனக்கு எழுத்து அறிவித்த ஆசானையும் மறக்க மாட்டார். பொதுவாக மக்களிடையே இவருக்கு நல்ல பெயர் உண்டு.



https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



தை:- இவர் காமி, அதுவும் மற்றப் பெண்களிடம் அதிக இச்சை கொள்பவர். செல்வம் சேர்ந்தாலும் ஆரோக்கியம் இராது. வலிமையற்ற உடல்தான் அமைந்திருக்கும். இவரது நடையில் ஒருவித ஒயில் இருக்கும். பிறர்பால் மிகுந்த பொறாமை கொள்வார்.

மாசி:- பிறர் நடுவில் முந்திரிக் கொட்டைத் தனமாய் நடந்து கொண்டு, புத்தி இல்லாதவர் என்ற பெயரை எடுப்பார். காலத்தை அனுசரித்துப் பேசத் தெரியாத கசடர். பிறருக்குச் சிறிதும் உதவி செய்யாத லோபியாக வாழ்வார். தர்ம நெறி அறியாதவர். நோயாளி. வாழ்நாள் முழுவதும் விரோதத்தையே பாராட்டிக் கொண்டிருப்பார்.

பங்குனி:- இவர் ஒரு கலைப் பிரியர். இசையில் மயங்கிப் போய் விடுவார். சொல் தவற மாட்டார். இவர் வாயிலிருந்து எப்பொழுதும் இங்கிதமான சொற்களையும் மங்களகரமான வார்த்தைகளையுமே எதிர்பார்க்கலாம். மிகுந்த பெருமையுடையவர். பிறர் வறுமையைக் கண்டு மனம் சகிக்க மாட்டார். ஓடிச்சென்று தர்ம நெறிப்படி கருணையோடு உதவி செய்வார். பெருந் தீவினைகளை அகற்றி மிகுந்த கௌரவமாக வாழ்பவர்.

ஜாதகர் எந்த வேளையில் பிறந்தாரோ அதற்கேற்ப பலன் அமையும்.

வேளையைச் சாத்வீகம், இராஜசம், தாமசம் என மூன்று வகையாகப் பிரித்துள்ளார்கள்.

பிறந்த வேளையை எப்படித் தெரிந்து கொள்வது? அதற்குப் பஞ்சாங்கத்தின் உதவியைத்தான் நாட வேண்டும்.



சாத்வீகம்:- நல்ல அழகுடையவர். அங்கங்கள் ஒவ்வொன்றும் எடுப்பாகவும், வன்மையாகவும் அமைந்திருக்கும். முகத்திலும் பொலிவுண்டு. நல்லறிவு படைத்தவர். அதனால் புத்திசாலித்தனம் நிறைய உண்டு. பெற வேண்டிய சுகத்தைத் தவறாமல் பெறுவார். குருவிடம் மிகுந்த விசுவாசம் உள்ளவர். இவரிடம் பொல்லாங்குத்தனமே இராது. இவர் எங்குச் சென்றாலும் நல்ல வரவேற்பு கிடைக்கும். இவரிடம் சிநேகம் கொள்ள அநேகர் விரும்புவர். இவரிடம் கல்வியறிவும் நிறைந்திருக்கும்.

இராஜசம்:- இவர் பிறர்பால் நல்ல அதிகாரம் செலுத்துவார். இவர் வார்த்தைக்குப் பிறர் கட்டுப்படுவர். இயல்பாகவே நல்ல பேச்சாளி. பிறரை எளிதில் கவர்ந்து விடுவார். அன்பும் நல்லறிவும் படைத்தவர். இவருக்கு இல்லற இன்பத்தில் மிகவும் ஈடுபாடு உண்டு. அதற்காகப் பிற பெண்கள்பால் நோக்கு இல்லாதவர். ஒரு தாரத்துக்கு இரு தாரமாகக் கொண்டு சுகிப்பார். மிகுந்த கல்விமான். எவருக்கும் தீமையே செய்ய மாட்டார்.

தாமசம்:- இவர் பிறருக்குத் துன்பம் விளைவித்து இன்பம் அடைவார். இது பாவச் செயலாயிற்றே என்று பின் வாங்க மாட்டார். பாவத்தைச் செய்யவே இவர் மனம் விழையும். மிகவும் சோம்பேறி, தூக்கத்தில் மிகுந்த விருப்பம் உள்ளவர். கொஞ்சம் மதுபானப் பழக்கமும் ஏற்படும். அதனால் அடிக்கடி நல்ல நிதானம் இல்லாமற் போகும். இவர் சர்வ சாதாரணமாகப் பொய் பேசுபவர். இவர் ஓரளவுக்குப் படித்து நிறுத்திக் கொண்டு விடுவார். அதனால் கல்வி அறிவு இவருக்கு அதிகம் இராது. பிறர் காரியங்களில் அனாவசியமாக ஈடுபட்டு, அதனால்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



அவமானப் பட்டுத் திரும்புவார். பிறரிடம், தான் செய்யாத காரியங்களையெல்லாம் செய்ததாகச் சொல்லிப் பெருமைப் பட்டுக் கொள்வார். ஓடும் பஸ், ரயில் மீது கல் எறிகிறார்களே அவர்களெல்லாம் அநேகமாகத் தாமஸ வேளையில் பிறந்தவர்களாகத்தான் இருப்பார்கள்.

## 8. ஜோதிடத்தின் மேன்மை

ஆண்டவன் அனுமதியின்றி ஓர் அணுவும் அசைவதில்லை. மனிதன் நடமாடும் பூலோகத்தையும், அவன் சஞ்சாரம் செய்யும் வானத்தையும், கோளங்களையும், கிரகங்களையும் தன்னுள் அடக்கி ஆளும் சக்திதான் மெய்ஞ்ஞானம். மனிதனது வாழ்க்கையின் அத்தியாயங்கள் நவக் கிரகங்கள் எனப்படும் சக்திகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. அவனுடைய அன்றாடச் செயல்களும் கிரகங்களின் சஞ்சாரத்தினால் அனுமானிக்கப்படுகின்றன.

தற்காலத்தில் வழங்கும் ஜோதிடக் கலையின் வல்லமையினால் நவக்கிரகங்களின் பலன்களை நாம் நன்கு அறிய முடிகிறது. ஒவ்வொரு கிரகத்தின் பலனையும் கிரக வழிபாட்டுக்குத் தகுந்த விதி முறைகளையும், அவற்றின் கடுமையிலிருந்து நம்மை விடுவித்துக் கொள்ளும் முறைகளையும் நமக்கு ஜோதிடக் கலை அழகாகப் போதிக்கின்றது.

வாழ்க்கையில் புண்ணியமும் பாவமும் உண்டு. இரண்டும் சம நிலை நேர் கோடுகள். அவை எந்த நிலையிலும் ஒன்றோடு ஒன்று சேரவே முடியாது. நாம் செய்யும் புண்ணியத்தில் இருந்து பாவத்தைக் கழிக்கவும் முடியாது.பாவத்தோடு புண்ணியத்தைச்



சேர்க்கவும் முடியாது. இந்த ஜன்மத்தில் நாம் அறியப் புண்ணியமே செய்த ஒருவர் துன்பத்தை அனுபவிக்க நேர்ந்தால் அதன் காரணம், பூர்வ ஜன்ம பாவங்களே ஆகும்.

ஆகவே, இதை மனதில் கொண்டு இந்த ஜன்மத்தில் நற்காரியங்களையே செய்வதால், அடுத்தெடுக்கும் பிறவிகளில் துன்பங்கள் நேர வாய்ப்பிருக்காது.

பாவமற்ற வாழ்க்கை இயங்க நமக்குக் கோட்பாடுகள் தேவை. தெய்வ வழிபாடு தேவை. இந்து மதக்கோட்பாடுகளையும், நவக்கிரக வழிபாட்டையும் அவற்றின் பலன்களையும் தெளிவாக அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

ஜோதிடம் என்பது சாதாரணமான ஒரு சயன்ஸ் மட்டும் அல்ல. பல விஞ்ஞானத் தத்துவங்கள் அடங்கிய ஒரு சாத்திரமாகும். அரசியல், மனோதத்துவம், உடற் கூறு சாத்திரம் ஆகியவை போல ஜோதிடமானது உலகத்தார் அனைவர்க்கும் பொருத்தமான ஒன்றாகும். ஒளியின் இயக்கக் கதிர்களால் உலகத்திலுள்ள அனைத்துமே இயங்குகின்றன. அந்த ஜோதியின் இயங்கும் முறைதான் ஜோதிடம்.

பரந்த வானத்தில் விளங்கும் கிரகங்கள், நட்சத்திரங்கள் ஆகியவற்றின் ஸ்வரூபம் – அமைப்பு – நிலை நியதிக்குட்பட்ட கதி – சாரம் இவற்றால் இவ்வுலகத்துக்கு ஏற்படக் கூடிய பலாபலன்களைப் பற்றிய அறிவை இக்கலையின் மூலம் அறிகிறோம். காலத்தின் தத்துவத்தையும், அதன் கூறுகளையும் அவை மூலம் இச்சராசரத்தில் நிகழும் விளைவுகளையும் இக்கலை அறிவிக்கிறது.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



இக்கலை கணிதத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். ஒரு சிறந்த விஞ்ஞானக் கலையாகும். ஆரிய பட்டர், வராஹமிஹிரர் போன்ற சிறந்த மேதாவிகள் விஞ்ஞான முறையில் இக்கலை வளர அரும்பாடு பட்டு நூல்களை இயற்றியுள்ளனர்.

ஆராய்ச்சிக்குரிய நவீன காலத்தில் உள்ள கருவிகள் இல்லாமலேயே அவர்களது நுண்ணறிவைக் கொண்டு விஞ்ஞான முறையில் இக்கலையை ஆராய்ந்து அதன் பயனை நூல்களின் வாயிலாக உலகத்துக்கு அறிவித்துள்ளனர்.

வேத புருஷனுக்கு ஆறு அங்கங்கள் உண்டு. நமக்கும் ஆறு அங்கங்கள் உண்டு. கண், காது, நாசி, வாய், கை, கால் என்ற அங்கங்கள். வேத புருஷனுக்கோ ஜோதிடம், சிக்ஷை, வியாகரணம், நிருக்தம், சந்தஸ், கல்பம் என்பவையாகும்.

ஜோதிடம் கண் என்ற அங்கமாகும். கண் தொலைவில் உள்ள பொருளையறியும் கருவி. அது போல் ஜோதிடம் பின்னே வருவதை முன்னே அறிவிக்கும் உயர்ந்த கருவியாகும்.

கர்ம வினையால் ஒருவன் எளியவனாகப் பிறக்கக் கூடும். ஆனால் அவன் பிறந்த நேரத்தை ஒட்டிக் கணிக்கப்படுகிற ஜாதகத்திலிருந்து அவன் எளியவனாகவே வாழ்வானா? அல்லது அவன் வாழ்வில் ஏதாவது மாற்றம் ஏற்படுமா என்பதை அறிய முடியும்.

எளியவனாகப் பிறந்து சில காலத்திற்குப் பிறகு பெரிய செல்வந்தனாகக் கூடிய யோகம் உண்டு. அதற்கு அவன் ஜாதகத்தில் பின் கண்டபடி கிரகங்கள் இருக்க வேண்டும்.



ஐந்து அல்லது அதற்கும் மேற்பட்ட கிரகங்கள் உச்சமாகவோ, ஆட்சியாகவோ இருக்க வேண்டும். அல்லது கேந்திர வீடுகளில் இருக்க வேண்டும். இப்படியிருந்தால் சாதாரண குடும்பத்தில் பிறந்தவன் கூட அரசன் ஆவான் – இப்பொழுது அரசன் இல்லாததால் அரசனுக்குச் சமமான அந்தஸ்து அடைவான். அல்லது ஒரு பெரிய பதவியை வகிக்கும் தகுதி பெறுவான்.

ஜன்ம லக்ன நட்சத்திரம், சந்திரன் நிற்கும் நட்சத்திரம் ஆகிய இரண்டுக்குள் எந்த நட்சத்திரம் ஜன்ம நட்சத்திரம் எனக் கொள்ளப்படுமோ, அந்த நட்சத்திரத்தின் நாயகனது தசையே ஜனன கால ஆரம்ப தசையாகக் கொள்ள வேண்டும் என்பது ஒரு பாடம். இது ஆராய்ச்சியின் அடிப்படையில் நிச்சயிக்கப்பட்டுள்ளது.

அடுத்த நட்சத்திரத்து நாயகனின் தசை இரண்டாவது தசையாகத் தொடரும் என்றும் விளக்கப்பட்டுள்ளது.

சந்திர லக்னம் – ஜன்ம லக்னம் ஆகிய இரண்டினுள் எது அதிக பலமுள்ளது என்பதை அறிவதற்குச் சில விதி முறைகள் உள்ளன.

சந்திரன் இருக்கும் ராசி, இருக்கின்ற நிலை, இவர்கள் கூடியிருக்கும் கிரகங்களின் நிலை, அனைவரையும் பார்க்கும் கிரகங்களின் நிலை முதலியவற்றால் சந்திரனது பலத்தையும் அதன் மூலம் சந்திர லக்னத்தின் பலத்தையும் அறிய வேண்டும்.

ஜன்ம லக்னத்தின் பலத்தை லக்னாதிபதியின் பலத்தைப் பார்த்தும் லக்ன பாவத்தில் இருக்கும் கிரகங்களின் பலத்தைப் பார்த்தும் முடிவு செய்ய வேண்டும்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



ஆட்சி, உச்சம், நட்பு, மூலத் திரிகோணம், வர்க்கோத்தமம், பகை, நீசம் போன்ற பல நிலைகள் பலத்தையும் பலமில்லாமையையும் நமக்கு உணர்த்தும்.

பலமுள்ள நட்சத்திரத்தை ஜன்ம நட்சத்திரமாகக் கொண்டு கொண்டதும், அதையே ஆரம்பமாகக் கொண்டு தாராபலம் காண வேண்டும். மற்றும் கோசார பலம் காண்பதற்கு, பலம் பெற்ற லக்னம் எதுவோ அதையே முதலாம் இடமாகக் கொள்ள வேண்டும்.

இப்படி இதை அனுசரித்தால், பலன்கள் மெய்யாகும் என்றும், இல்லையேல் பொய்யாகும் என்றும் கூறுகிறார் பழம் பெரும் இரந்த கர்த்தாவான சத்யா சாரியார்.

ஒரு ஜாதகத்தில் பத்தாம் வீடு என்பது செய்யும் தொழிலைப் பற்றிச் சொல்வதுடன், எங்கிருந்து யார் மூலம் செல்வம் வரும் என்பதையும் எடுத்துக் காட்டும் இடமாகும்.

ஒருவர் ஜாதகத்தில் 10-ஆம் வீட்டில் சூரியன் இருந்தால், பிதுரார்ஜித சொத்து வரும்.

சந்திரன் இருந்தால் தாயார் மூலம் பொருள் கிடைக்கலாம்.

செவ்வாய் இருந்தால் பகைவரிடமிருந்து பொருள் கிடைக்கும்.

புதன் இருந்தால் நண்பர்களின் மூலம் பொருள் கிடைக்கும்.

குரு இருந்தால் சகோதரர் மூலமாகவும், இதர உறவினர் மூலமாகவும் பொருள் வரக் கூடும்.



சுக்கிரன் இருந்தால் பெண்கள் மூலமாகச் செல்வம் சேரும்.

சனி இருந்தால் வேலைக்காரர்கள் மூலமாகப் பணம் குவியும்.

பத்தாம் இடத்தில் இருக்கும் கிரகம் பலமாக இருப்பதைப் பொறுத்து, அந்தச் செல்வத்தின் அளவு நிர்ணயிக்கப்பட முடியும். எல்லா நிலையிலும் ஒரு கிரகம் பலமாக இருந்தால், அந்தக் கிரகத்தின் மூலம் அந்த வகையில் செல்வம் வரத் தடையிராது.

நாம் தங்கியிருக்கும் இடத்தை 'வீடு' என்று சொல்வோம். மகாஞானிகள் மோட்சத்தையும் 'வீடு' என்பார்கள். ஜோதிட சாஸ்திரத்தில் வழக்கில் உள்ள வீடு என்பது ராசியைக் குறிக்கும்.

ஒருவருடைய ஜென்ம லக்னம் எந்த ராசியில் அமையுமோ அதை 1-ஆம் வீடு என்றும், அதற்கு அடுத்த ராசியை 2-ஆம் வீடு என்றும், இப்படியே 12 ராசிகளையும் அந்தந்த வரிசை எண் உள்ள வீடுகளாகக் குறிப்பிடுவார்கள்.

மேஷம், ஜன்ம லக்னமானால் அதுவே முதல் வீடு ஆகும். ரிஷபம் 2-ஆம் வீடாகும். சிம்மம் 5-ஆம் வீடாகும். மகரம் 10-ஆம் வீடாகும். இப்படி ஒவ்வொரு லக்னத்திற்கும் வீடுகள் எண்ணப்படும்.

லக்ன வீட்டில் ஒரு கிரகம் இருந்தால் 1-ஆம் வீட்டில் உள்ள கிரகம் என்றும், லக்னத்திற்கு அடுத்த ராசியில் ஒரு கிரகம் இருந்தால் 2-ஆம் வீட்டில் உள்ள கிரகம் என்றும், இப்படியே அந்தந்த ராசி எத்தனையாவது வீடாகுமோ அதைச் சொல்லி, அந்த வீட்டிலுள்ள கிரகத்தை அத்தனையாவது வீட்டில் உள்ள கிரகம் என்றும் அழைப்பது வழக்கம்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



லக்ன ராசிக்குரிய கிரகம் யாரோ, அவரை 1-ஆம் வீட்டுக்காரர் என்றும், 2-ஆம் வீட்டுக்குரியவர் எந்த கிரகமோ அவரை 2-ஆம் வீட்டுக்காரர் என்றும், இப்படியே அந்தந்த வீட்டுக்குரிய கிரகத்தை அதனதன் எண்ணுக்கேற்பச் சொல்லிக் குறிப்பிடுவது வழக்கம்.

ஜோதிட சாஸ்திரத்தில் 'தோஷம்' என்பது வழக்கிலுள்ள மொழியாகும்.

தோஷம் என்றால் குறைபாடு என்றாகும். பலம் குறைவு, குணக் குறைவு, சுப பலனைத் தரும் தகுதிக் குறைவு இப்படி எல்லாக் குறைபாடுகளும் தோஷம்தான்.

நன்மைக்குக் குறைபாடு தருவது 'தோஷம்' என்றால், தீமைக்கு வளர்ச்சி தருவதும் தோஷம்தான்.

இந்தத் தோஷம் நல்லதுக்குக் குறுக்கீடு ஆகும். எதிர்மறையான விளைவுகளைத் தந்து உடன்பாடான சாதகங்களை அழிக்கும் ஆற்றலுடையது 'தோஷம்.'

ஒரு கிரகம் நீசம் அல்லது பகை வீடுகளில் இருந்தால் பலம் குறையும். அப்படிக் குறைந்த பலம் கொண்ட கிரகங்கள் 'தோஷம்' உடையவர்களாவார்கள்.

6,8,12-ஆம் இடங்களில் கிரகங்கள் இருந்தால் 'தோஷம்' உடையவர்களாவார்கள். ஏனென்றால் இந்த இடங்கள் 'துஸ்தானங்கள்' ஆகும்.

இதற்கு விதி விலக்கு உண்டு. 6-ஆம் இடத்தில் பாபக் கிரகங்கள் இருந்தால் தோஷம் இல்லை.

8-ஆம் இடத்தில் உள்ள ஒரு கிரகம் யோகத்தைத் தரக்கூடிய பலத்தைப் பெறுமானால், அப்போது அதற்கும் 'தோஷம்' ஏற்படாது. இதுவும் ஒரு விதி விலக்கு.



ஜாதகத்தில் 'பலம்' என்றால் நற்பலன்களை அதிகமாகத் தரும் தகுதி பெற்றிருத்தல் என்று பொருள். பலவீனம் என்றால், நற்பலன்களைக் குறைவாகத் தரும் நிலையைப் பெற்றிருத்தல் என்று பொருள்.

ஒரு கிரகம் நல்ல பாவங்களுக்கு அதிபதியாக இருப்பது பலமாகும். அந்தக் கிரகம் நல்ல பாவங்களில் இருந்தால் அதுவும் பலமாகும்.

கேந்திர ஸ்தானங்களில் இருந்தாலும் திரிகோண வீடுகளில் இருந்தாலும் பலமுண்டு.

சுபக் கிரகங்களோடு சேர்ந்தாலோ, சுபக் கிரகங்களால் பார்க்கப்பட்டாலோ பலமுண்டாகும்.

நட்பு வீட்டிலோ, உச்ச வீட்டிலோ இருந்தால் அப்போதும் பலம் உண்டாகும்.

இப்படிச் சொல்லப்பட்ட வகைகளில் சில வகைகள் கூடினாலும் போதுமானது. அந்த அளவுக்குப் பலம் உண்டாகும்.

பலம் பெற்றுள்ள கிரகம், பாபக் கிரகங்களுடன் கூடினால் பலம் குறைய நேரும்.

ராசி குண்டலியில் பலம் பெற்றுள்ள கிரகம் அம்ச குண்டலியில் பலம் குறைந்து விடுமானால், அப்போதும் அந்தக் கிரகத்தின் பலம் குறைந்ததாகவே கருதப்படும்.

ஜாதகத்தில் வரும் 'வேதை' என்பது பற்றி முன்பே ஓரளவு கூறியுள்ளேன். இப்பொழுது ஓர் உதாரணத்தின் மூலம் விளக்கி அது உங்களுக்கு நன்கு புரியும்படி செய்கிறேன்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



'வேதை' என்பது வட சொல். ஒரு கிரகம் ஒரு ராசியில் சஞ்சரிக்கும்போது, இன்னொரு கிரகம் இன்னொரு ராசியில் சஞ்சரித்துக் கொண்டு, முதலில் சஞ்சரிக்கும் கிரகத்தின் பலனைச் சிதைக்கக் கூடும்.

உதாரணமாக நம்முடைய சந்திர லக்னத்திற்கு குரு 5–ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அதே நேரத்தில் வேறு ஒரு கிரகம் நம்முடைய சந்திர லக்னத்திலிருந்து 4–ஆம் இடத்தில் சஞ்சரித்தால், குருவுக்கு வேதை ஏற்படும்.

குரு 5–ஆம் இடத்தில் உலவுவதால் ஏற்படக் கூடிய நலல பலன்கள், இந்த வேதை காரணமாகப் பாதிக்கப்படும்.

நம் சந்திர லக்னத்திலிருந்து 2–ஆம் இடத்தில் வேறு ஒரு கிரகம், உலவுமானால், அப்போதும் குருவுக்கு 'வேதை' ஏற்படும். ஆனால் இந்த வேதையால் நல்லது உண்டாகும்.

எப்படி என்று தெரிய வேண்டுமா? 3–ஆம் இடத்து குரு கெடுதலைத்தானே செய்ய வேண்டும். வேதை காரணமாக அந்தக் கெடுதல் பலம் குறைந்து விட நேரும்.

இவ்வண்ணம் ஒவ்வொரு கிரகத்திற்கும் 'வேதை' என்பது உண்டு. இந்த வேதை சூரியனுக்கும் சனிக்கும் கிடையாது. இது விதி விலக்கு.

பொதுவாக வேதை என்றால் ஒன்றை மற்றது பாதிக்கும் நிலை என்று பொருள் கொள்ளலாம்.

'மகம்' என்ற நட்சத்திரம் சிம்ம ராசியின் தொடக்கமாகும். சிம்ம ராசி என்பது சூரியனுடைய சொந்த வீடு. சூரியனுடைய சொந்த வீட்டில் சனி புகும் தருணமே, மகத்தில் சனி புகும் காலமாகிறது.



சூரியனுக்கு சனி நேர் பகை. ஒரு சத்ரு வீட்டில் புகுந்ததும் பல துன்பங்களும் பயமும் எப்போதும் வியாகூலமும், அந்தச் சத்ரு வீட்டை விட்டு வெளியேறும்வரை இருந்தே தீரும். புகுந்தவுடன் விபரீதங்கள் அதிகம் ஏற்படும். பின்பு வேண்டுமானால் ஓரளவிற்குக் குறையலாம். அதனால் தான் சிம்ம ராசியின் முதல் நட்சத்திரமே – மகம் என்று கூறப்பட்டுள்ளது.

ஆனால், சிம்ம ராசி குருவிற்கோ மிகச் சிறந்ததாகக் கருதப்படுகிறது. 12 வருஷங்களுக்கு ஒரு முறை சிம்ம ராசியில் மகம் நட்சத்திரத்தில் குரு புகும் காலத்தை 'மஹாமகம்' என்ற புண்ணிய தினமாய்க் கருதி கொண்டாடி வருகிறோம். மிகத் தொன்மையான காலம் தொட்டு குடந்தை மாநகரில் இதற்கென விழா நடந்து வருகிறது.

இயற்கைச் சுபராகிய குரு பகவானுக்கும், இயற்கைப் பாபராகிய சனிக்கும், மகம் நட்சத்திரம் – சிம்ம ராசியின் தொடக்கம்.

இங்கு குரு நன்மையையும், சனி தீமையையும் தருகின்றது.

சந்திரன் நின்ற ராசிக்கு 12–இல் சனி வந்த காலத்தில் எத்தனையோ ஜாதகர்களுக்கு விவாகம், தனம், பிள்ளைச் செல்வம், வெகு கீர்த்தி போன்ற பல நன்மைகள் ஏற்பட்டுள்ளன.

ஆகவே மகச் சனி, பூரச் சனி, உத்திரச் சனி என்பதற்கேற்ப பலன் நிகழ்வதில்லை. நவநாயகர் களில் பிரதானவராகிய சூரியனின் வீட்டில் எதிரி கிரகம் புகுந்தால் அளவிலாத் துன்பத்தைத் தரும் என்று அக்காலத்திலேயே இறையடியார்கள் உணர்ந்து எழுதியிருக்கிறார்கள்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



பிருஹதவுத் ஜாதகம், சாராவளி போன்ற உன்னத கிரந்தங்களில் இதற்குரிய விளக்கம் காணலாம்.

முன் காலத்தில் நம்மிடையே வாழ்ந்த மகரிஷிகள் எல்லாத் துறைகளிலும் சிறந்து விளங்கினார்கள். வேதங்களும் சாஸ்திரங்களும் உலகத்திலேயே இந்தியாவில் தான் முதலில் உருவாகியது.

இன்றைய விஞ்ஞானிகளை விட நமது மகரிஷிகள் அபாரமான சக்தி வாய்ந்தவர்கள்.

## 9. லக்கின பலன்கள்

ஒவ்வொரு லக்கினத்திற்கும் - அதிர்ஷ்டத்தையும் யோகத்தையும் அளிக்கக் கூடிய யோக கிரகமும், மரணத்தை உண்டாக்கக் கூடிய ஒரு மாரக கிரகமும் உண்டு. அதை நீங்கள் தெரிந்து கொள்வது நல்லது.

**மேஷ லக்கினம்** - சுக்கிரன், புதன், சனி தீய கிரகங்கள் சூரியன், செவ்வாய், குரு நல்ல கிரகங்கள்.

மரணத்தை அளிப்பவர்கள் புதன், சனி.

**ரிஷப லக்கினம்** - சந்திரன், குரு, சுக்கிரன் தீய கிரகங்கள்.

சூரியன், செவ்வாய், புதன், சனி நல்ல கிரகங்கள்.

சனி - யோகத்தைத் தருபவர்.

புதன், சனி - மரணத்தை அளிப்பவர்.

**மிதுன லக்கினம்** - சூரியன், செவ்வாய், குரு தீய கிரகங்கள்.

சுக்கிரன், சனி - நல்ல கிரகங்கள்

சுக்கிரன், சனி - யோகத்தைத் தருபவர்கள்.



செவ்வாய், குரு மரணத்தை அளிப்பவர்கள்.

**கடக லக்கினம்** - புதன், சுக்கிரன், சனி தீய கிரகங்கள்.

செவ்வாய், குரு - நல்ல கிரகங்கள்.

செவ்வாய் - யோகத்தைத் தருபவர்.

புதன், சுக்கிரன் - மரணத்தை அளிப்பவர்கள்.

**சிம்ம லக்கினம்** - புதன், சுக்கிரன், சனி தீய கிரகங்கள்.

சூரியன், செவ்வாய் - நல்ல கிரகங்கள்.

செவ்வாய் - யோகத்தைத் தருபவர்.

புதன், சுக்கிரன் - மரணத்தை விளைவிப்பவர்கள்.

**கன்னி லக்கினம்** - செவ்வாய், சந்திரன், குரு தீய கிரகங்கள்.

சுக்கிரன் - நல்ல கிரகம்.

புதன், சுக்கிரன் யோகத்தைத் தருபவர்கள்.

செவ்வாய், குரு மரணத்தை அளிப்பவர்கள்.

**துலாம் லக்கினம்** - சூரியன், செவ்வாய், குரு தீய கிரகங்கள்.

புதன், சந்திரன், சனி நல்ல கிரகங்கள்.

சந்திரன், புதன்,சனி யோகத்தைத் தருபவர்கள்

குரு மரணத்தை அளிப்பவர்.

**விருச்சிக லக்கினம்** - புதன், சனி, செவ்வாய் தீய கிரகங்கள்.

குரு, சூரியன், சந்திரன் நல்ல கிரகங்கள்.

சூரியன், சந்திரன் யோகத்தை தருபவர்கள்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



புதன், சுக்கிரன் மரணத்தை அளிப்பவர்கள்.

தனுசு லக்கினம் - சனி, சுக்கிரன், புதன் தீய கிரகங்கள்.

சூரியன், செவ்வாய் நல்ல கிரகங்கள்.

சூரியன், செவ்வாய் யோகத்தை தருபவர்கள்.

சுக்கிரன் மரணத்தை அளிப்பவர்.

மகர லக்கினம் - சந்திரன், செவ்வாய், குரு தீய கிரகங்கள்.

புதன், சுக்கிரன், சனி நல்ல கிரகங்கள்.

புதன், சுக்கிரன் யோகத்தை தருபவர்கள்.

செவ்வாய், குரு மரணத்தை அளிப்பவர்.

கும்ப லக்கினம் - குரு, சந்திரன் தீய கிரகங்கள்

சுக்கிரன், செவ்வாய், சூரியன், சனி நல்ல கிரகங்கள்.

செவ்வாய் சுக்கிரன் யோகத்தைத் தருபவர்கள்.

குரு மரணத்தை அளிப்பவர்.

மீன லக்கினம் - சூரியன், புதன், சுக்கிரன், சனி தீய கிரகங்கள்

செவ்வாய், சந்திரன் நல்ல கிரகங்கள்

செவ்வாய், குரு, சந்திரன் யோகத்தைத் தருபவர்கள்

புதன், சுக்கிரன், சனி மரணத்தை அளிப்பவர்கள்.

ஒரு கிரகமோ அல்லது ராசியோ பார்வையினாலோ அல்லது சேர்க்கையினாலோ மற்றொரு கிரகத்துடன் சம்பந்தப்படும்போது யோகங்கள் ஏற்படுகின்றன.



ஒரு ஜாதகம் எப்படிப்பட்டது என்பதைத் நிர்மாணிப்பதற்கு, அந்த ஜாதகத்தில் லக்கினமும், லக்கினாதிபதியும் பலம் பொருந்தியவராகவும், சுப கிரகங்களின் சம்பந்தம் பெற்றும் அசுப கிரகங்களின் பார்வை இன்றியும் இருக்கின்றனவா என்பதை ஆராய்தல் மிகவும் முக்கியமாகும்.

இதேமுறையில் சந்திரனையும் ஆராய்தல் அவசியம்.

லக்கினமானது இரு அசுப கிரகங்களுக்கு மத்தியில் அமைந்தால், அதற்கு பாபகர்த்தரி யோகம் என்று பெயர். இதற்கு மாறாக லக்கினத்திற்கு இருபுறமும் சுப கிரகங்கள் இருப்பின், அதற்கு சுபகர்த்தரி யோகம் என்று பெயர்.

பாபகர்த்தரி யோகம் ஜாதகரின் அதிர்ஷ்டத்தில் மாறுதல்களையும், சுபகர்த்தரியோகம் அதிகமான நன்மையையும் அளிக்கின்றன.

ஜாதகத்திலோ, அல்லது கோசாரத்திலோ சந்திரன் நின்ற இடத்திற்கு ராசி என்று பெயர். இதனை சந்திரா லக்கினம் என்றும் கூறுவார்கள்.

சந்திரன் ஜனன காலத்தில இருந்த ராசிக்கு எட்டாமிடத்திற்கு, கோசாரத்தில் வரும் காலத்தைத்தான் 'சந்திராஷ்டமம்' என்பர்.

பொதுவாக எந்த கிரகமும் கோசாரத்தில் எட்டாமிடத்திற்கு வரும் காலத்தில் கஷ்டம், மனச் சங்கடம், நஷ்டம், பிரயாண பயம், போஜன சுகக் குறைவு முதலிய தீமையான பலன்களையே கொடுப்பார்கள்.

அவ்வித கிரகங்களுக்குள் சனி, சந்திரனுடைய காலங்களில்தான் முக்கியமாக குரு பலன்கள் ஏற்படும்.



https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



வியாதியஸ்தர்கள் அது சமயம் படுக்கையில் இருக்க நேரிட்டால் சந்திராஷ்டமும், அஷ்டமத்து சனி, பரணி, கார்த்திகை ஆகியனவும் போக வேண்டும் என்று சொல்கிறோம்.

அவ்வித பலன்கள் தசாபுத்திகள் பொருந்தியவை ஆகும்.

எல்லா இரகங்களுக்குள்ளும் சந்திரன் சீக்கிரகதி - அசைவு உள்ளவர். சந்திர தாரா பலத்தை நன்கு அறிந்து கொண்டால் தினசரி பலனை மிகச் சுலபமாக அறிந்து கொள்ள முடியும்.

சந்திரன் நற்பல ஸ்தானங்களில் இருக்கும்போது தொழிலில் லாபம், காரிய சித்தி, சுகம், சந்தோஷம் முதலிய நல்ல பலன்கள் உண்டாகும்.

விருச்சிகம், மகரம், மீனம் இவை சந்திர லக்னம உடையவர்களுக்கு கெட்ட பலனையே கொடுக்கும்.

ரிஷபம், மிதுனம், கடகம், கன்னி உடைய வர்களுக்கு தீமையும், நன்மையும் கலந்திருக்கும்.

ஆனால் மேஷம், சிம்மம், விருச்சிகம், தனுசு, கும்பம் உடையவர்களுக்கு சந்திராஷ்டமத்தில் நற்பலன்களே உண்டாகும்.

எந்த ராசிக்காரர்களுக்கும் சந்திராஷ்டமத்தில் தாராபலன் உத்தமமானால் நல்ல பலன்களே உண்டாகும். அது சமயம் பாபி அல்லது சுபனே ஆவான்.

சந்திர பலம் விசேஷமாக ஏற்பட்ட நாள்களில் அவரவர்கள் சுப கர்மங்களைச் செய்து நற்பலன் பெறுதல் வேண்டும்.



அன்று அவசியமான காரியம் ஒன்றை நிறைவேற்ற வேண்டும். ஆனால் சந்திரன் நல்ல இடத்தில் இல்லை - என்ன செய்வது?

சந்திர பலம் இல்லாமைக்கு சங்கு தானமும் பார்க்கும் தினத்தில் தாராபலம் இல்லாவிட்டால் உப்பு தானமும் செய்ய வேண்டும்.

திதி சுத்தமில்லாவிட்டால் அரிசி தானம் செய்தல் வேண்டும்.

கரணம், வாரம், நட்சத்திரம் இவை சுத்தமில்லாவிட்டால் தான்ய தானம் செய்தல் வேண்டும்.

யோகம் சுத்தமில்லாவிட்டால் எள்ளு தானம் செய்தல் வேண்டும்.

லக்கினம் சுத்தமில்லாவிட்டால் ரத்ன தானம் செய்தல் வேண்டும்.

இவ்வண்ணம் அதற்கான தானத்தைச் செய்து விட்டு அவசியமான நற்காரியத்தை நிறைவேற்றிக் கொள்ளலாம்.

ஒவ்வொரு கிரகமும், ஒரு குறிப்பிட்ட ராசியில் இருக்கும்போது உச்ச பலத்தை அடைகிறது. உச்ச ராசியில் இருக்கும் போது, ஒரு கிரகத்திற்கு தனது சொந்த ராசியில் இருப்பதை விட அதிகமான பலமும், நல்ல பலனைக் கொடுக்கும் தன்மையும் ஏற்படுகின்றன.

**கிரகங்களின் உச்ச ராசிகள்:**

சூரியன் - மேஷம்

சந்திரன் - ரிஷபம்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



| | | |
|---|---|---|
| செவ்வாய் | - | மகரம் |
| புதன் | - | கன்னி |
| குரு | - | கடகம் |
| சுக்கிரன் | - | மீனம் |
| சனி | - | துலாம் |
| ராகு | - | ரிஷபம் |
| கேது | - | விருச்சிகம் |

இவ்வண்ணம் உச்ச ராசிகளில் இருப்பதால் என்ன பயன்?

ஒரு ஜாதகத்தில் சூரியன் உச்சனாக இருந்தால், நல்ல கல்வியறிவு ஏற்படும். பக்தியும் மிகுந்திருக்கும். பலமுள்ளவராகவும் இருப்பார். தருமம் செய்யும் குணம் மிகுந்திருக்கும். வாழ்க்கை நல்ல விதமாக பிரகாசமாக அமையும்.

**சந்திரன் உச்சனாக இருந்தால் -**

இவர்கள் செல்வந்தர்கள். முகத்தில் நல்ல பொலிவு இருக்கும். மிகுந்த விடா முயற்சி உள்ளவர்கள். கல்வி அறிவு மிகுந்தவர்கள்.

**செவ்வாய் உச்சனாக இருந்தால் -**

மிகுந்த தன்னம்பிக்கை உள்ளவர்கள். அதனால் எடுத்த காரியத்தில் வெற்றிதான். ராஜபோக வசதி இருக்கும். இவர்கள் புகழ் பெற்றவர்களாக விளங்குவார்கள். ஊக்கமும் ஆர்வமும் எப்பொழுதும் இவர்களிடம் குடி கொண்டிருக்கும்.

**புதன் உச்சனாக இருந்தால் -**

இவர்கள் மிக்க அதிர்ஷ்டசாலிகள். எப்பொழுதும் உற்சாகமாகவே இருப்பார்கள். கல்வியறிவில்



மிகுந்தவர்கள். அநேகமாக பட்ட மேற்படிப்பில் பெரும் ஆராய்ச்சியாளராக இருப்பார்கள். இவர்களைப் பிறர் மனமுவந்து கௌரவிப்பார்கள்.

**குரு உச்சனாக இருந்தால் -**

இவர்கள் சற்று முன் கோபிகள். ஆனால் உடனே அது தணிந்து விடும். பிறருக்கு இவர்கள் தலைமை தாங்குவார்கள். அத்துடன் பிறரை ஆதரிப்பவர்களாகவும் அமைவார்கள். இவர்கள் மிக்க பலசாலிகள். அதனால் இவர்களுக்குச் சென்ற விடமெல்லாம் சிறப்பு இட்டும். பிறரால் நன்கு மதிக்கப்படுவார்கள். இவர்களைப் பார்த்ததுமே பிறர் மரியாதை செய்வார்கள்.

**சுக்கிரன் உச்சனானால் -**

இவர்கள் திறமை மிகுந்தவர்கள். இவர்கள் சௌக்கியமாக பூரண ஆயுளுடன் வாழ்வார்கள். கையில் இருக்கிறதோ இல்லையோ, இவர்களுக்குத் தரும சிந்தனை அதிகமிருக்கும். அதனால் பலர் இவர்களை அண்டிப் பிழைப்பர்.

**சனி உச்சமானால் -**

இவர்களுக்கும் நீண்ட ஆயுள் உண்டு. தன் மனைவியிடத்தில் மிகுந்த அன்பு கொண்டவர்கள். இவர்கள் பூர்வீக சொத்துடன் தங்கள் சம்பாத்தியத்தையும் பெருக்கி மிகுந்த செல்வந்தர்களாக வாழ்வார்கள். தரும சிந்தனை மிகுந்தவர்கள். மற்றும் மிகுந்த சாமர்த்தியசாலிகளாகவும் இருப்பார்கள்.

**ராகு, கேதுக்கள் உச்சமானால்-**

இவர்களுக்கு மிகுந்த செல்வம் சேரும். அதனால் சற்று செருக்குடையவர்களாவார்கள். ஆனால் பிறருக்குத் தீங்காக இருக்க மாட்டார்கள்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



இதே போன்று கிரகங்களுக்கு நீச்ச வீடும் உண்டு. அவை கெட்ட பலன்களைக் கொடுக்கும்.

| | | |
|---|---|---|
| சூரியன் | - | துலாம் |
| சந்திரன் | - | விருச்சிகம் |
| செவ்வாய் | - | கடகம் |
| புதன் | - | மீனம் |
| குரு | - | மகரம் |
| சுக்கிரன் | - | கன்னி |
| சனி | - | மேஷம் |
| ராகு, கேது | - | ரிஷபம் |

உச்ச வீடுகள், நீச்ச வீடுகள் போன்று ஆட்சி வீடுகள் உண்டு. அதுதான் அந்தக் கிரகத்திற்குச் சொந்த வீடு. இது பற்றி உங்களுக்கு முன்பே கூறியுள்ளேன். இப்பொழுது நன்கு மனதில் பதிய வைத்துக் கொள்ளுங்கள்.

| | | |
|---|---|---|
| சூரியனுக்கு | - | சிம்மம் |
| சந்திரனுக்கு | - | கடகம் |
| செவ்வாய்க்கு | - | மேஷமும், விருச்சிகமும் |
| புதனுக்கு | - | மிதுனமும், கன்னியும் |
| குருவுக்கு | - | தனுசும், மீனமும் |
| சுக்கிரனுக்கு | - | ரிஷபமும், துலாமும் |
| சனிக்கு | - | மகரமும், கும்பமும் |

தனது ராசியிலேயே இருக்கும் கிரகத்திற்கு நல்லதைச் செய்யக் கூடிய முழு பலமும் ஏற்படுகிறது.

கிரகங்கள் எங்கெங்கிருந்தால், நல்லதைச் செய்கிறது, மிகவும் மேன்மையுறச் செய்கிறது, கெட்ட



தைச் செய்கிறது என்பதையெல்லாம் இப்பொழுது நீங்கள் நன்கு தெரிந்து கொண்டிருப்பீர்கள்.

இவற்றையெல்லாம் ஒரு தடவைக்கு இரு தடவையாகப் படித்து மனதில் நன்கு பதியச் செய்து கொள்ள வேண்டும்.

## 10. பிறந்த நட்சத்திரப் பலன்கள் - I

சூரியன் முதலான நவக்கிரகங்கள் அனைவரும் நல்லவர்களே. நாம் செய்த பாவ - புண்ணியத்திற்கேற்ப அவை அமைந்து பலன்களைக் கொடுக்கின்றன. அவ்வண்ணம் நாம் அப்பலன்களை அடையும்போது, நமக்கு விரோதிகளாகவும், சத்ருவாகவும் தோன்றுகின்றனர்.

நவக்கிரகங்களில் சனிக்கிரகம் மிகவும் வலிமையுள்ளவர். சற்று தாமசமாகப் பலன்களைக் கொடுப்பார். நற்பலன்களைக் கொடுக்கும் காலத்தில் கனவிலும் நினைக்க முடியாத, பிரபல யோக பலன்களைக் கொடுப்பார். அது போல தீய பலன்களைக் கொடுக்கும் காலத்திலும், இமைக்கும் நேரத்தில் சூன்யமாக்கும் தன்மையும் அவருக்கு உண்டு.

ஜனன காலத்தில், சனி பகவான் உச்சனாகவோ, ஆட்சியாகவோ, மித்ரனாகவோ இருந்திருந்தால், அவர்களுக்கு நன்மையான பலன்களே நடக்கும்.

ஜாதகத்தில் சனிக் கிரகம் பகை, நீசம் பெற்றவர்கள் - தீய பலன்களைப் பெற நேரிடும்.

அந்தத் தீயபலன்கள் அதிகமாகாமலிருக்க சனிக்கிரகத்துக்கு ப்ரீதி, பரிஹாரம், ஸ்தோத்ரம்,

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



அர்ச்சனை ஆகியவற்றை பக்தி சிரத்தையுடன் செய்து வந்தால் அவை அதிகம் பாதிக்காமல் தப்பிக்கலாம்.

ஏழரை நாட்டுச் சனியை உடையவர்கள் நாள்தோறும் சனீச்சிர காயத்ரியை உச்சரித்து வருவது மிகவும் நல்லது. அதாவது —

காக த்வஜாய வித்மஹே

கட்க ஹஸ்தாய தீமஹி!

தந்நோ மந்த: ப்ரசோதயாத்!!

"மந்த" எனும் சொல்லில் சனி பகவான் மிகுந்த ப்ரீதி கொள்கிறான்.

ஜாதகர் பிறந்த நேரத்தைக் கொண்டு எந்த நட்சத்திரத்தில் பிறந்துள்ளார் என்பதை பஞ்சாங்கத்தின் மூலம் கண்டுபிடித்து விடலாம். அதற்கேற்ப பலன் அமையும். மற்றும் ஒவ்வொரு நட்சத்திரத்திற்கும் நான்கு பாதங்கள் உண்டு. ஒருவர் எந்த பாதத்தில் பிறந்துள்ளாரோ, அதற்கேற்ற பலனும் அமையும், நட்சத்திரங்கள் 27 ஆகும்.

### அசுவினியில் பிறந்தவர்

மிகுந்த வல்லமையுடையவர். இருந்தாலும் சாந்த குணம் உண்டு. பெண்கள்பால் மிகுந்த ஆசை உண்டு. அழகான தோற்றமுள்ள இவர் எல்லாராலும் விரும்பப்படுவார். எதிலும் பதற்றம் இராது. செல்வம் குவியும். எதையும் நிறைவாகச் செய்வார். தைரியசாலி. தரும குணம் உண்டு. இவருக்கு விரிந்த மார்பும், சிவந்த கண்களும், உயர்வான நெற்றியும் அமைந்திருக்கும். ஆபரணப் பிரியர், சற்று முன்கோபியாக இருப்பார். ஆனால் அதனால் தீங்கு விளையாது. இவரைப் பெரும் புகழ் வந்து சேரும்.



முதற்பாதம் – ஆடம்பரம் இருக்கும். பிறருக்குப் பிரியமானதைச் செய்வார். எதிலும் சபலம் உண்டு. பாவம் செய்தல், குற்றம் புரிதல் எல்லாம் உண்டு. முகப் பொலிவு சற்று குறைந்திருக்கும்.

இரண்டாம் பாதம் – மெய் ஞானத்தில் நாட்டமுடையவர். எதிரியின் மனதைக் கூர்ந்து எளிதில் அறிந்து விடுவார். பிறகு நன்மை செய்வார். அழகாகவும் இருப்பார்.

மூன்றாம் பாதம் – இவருக்கு மூல நோய் உண்டாகும். இனிமையாகப் பேசுவார். நற்செய்கை புரிவார். ஜோதிட சாஸ்திரத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்.

நான்காம் பாதம் – விவேகம் நிறைந்தவர் என்றாலும், சண்டை போட அஞ்ச மாட்டார். இந்திர போகமும் ஆசையும் உடையவர். இவரிடம் சத்தியமும் உண்டு. ஜோதிடம் அறிந்தவர்.

### பரணியில் பிறந்தவர்

இவர் கல்விமான். வாழ்க்கையை நன்கு அனுபவிப்பார். பெற்றோர்களுக்குப் பிரியமான பிள்ளை. சத்திய சீலர். எதிலும் நிதானமுண்டு. பெண்களின் வார்த்தையில் பிரியம் கொள்பவர். பெருமையும் புகழும் இவரை வந்து சேரும். தாம்பூலப் பிரியர். நோயற்று வாழ்வார். செல்வச் சிறப்பு உண்டு. இவருக்கு இடது பக்கத்தில் மரு இருக்கும்.

முதல் பாதம் – பகைவர்களை எளிதில் வெற்றி கொள்பவர். சிவந்த உடல். ரோமம் கூட சற்று சிவந்தே காணப்படும். துரவு அதிகம் உண்டு. விவகாரம் அறிந்தவராதலால் இவரது பஞ்சாயத்துக்கு அனைவரும் கட்டுப்படுவர்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



இரண்டாம் பாதம் - சாஸ்திர ஆராய்ச்சி உண்டு. எதையும் எளிதில் இரகித்துக் கொள்வார். நல்ல குணம் படைத்தவர். அபிமானமும் விவேகமும் உடையவர்.

மூன்றாம் பாதம் - மிகுந்த கோபக்காரர். இருந்தாலும் திறமைசாலி. நற்குணம் அமையப் பெற்றவர். அபிமானமும் உற்சாகமும் உண்டு. உடல் வலிமை அதிகம் உண்டு. வட்ட வடிவமான கண்கள் உண்டு.

நான்காம் பாதம் - இவர் துன்மார்க்கர். கர்வமும் கோபமும் அதிகம் உண்டு. உடல் வலிமையும் அதிகம். அரசாங்கத்தில் பெரும் பதவி வகிப்பார்.

**கிருத்திகையில் பிறந்தவர் -**

பெரிய வட்டாரத்தில் முக்கிய புள்ளியாக இருப்பார். மிகவும் சாதுர்யமாகப் பேசக்கூடியவர். அதிகமாக உண்பார். உடல் வலிமை அதிகம் உண்டு. பல தாரங்களை உடையவர். பொய் சொல்லி பொருள் தேடுபவர். இருந்தாலும் புகழ் வாய்ந்திருப்பார். துணிந்து புகார்களைக் கூறக் கூடியவர். இவர் நெஞ்சில் மரு உண்டு. மக்களிடமிருந்து சன்மானம் கிடைக்கும். புத்திசாலியாயிருந்தும் அது வஞ்சக எண்ணத்துக்கே செலவழிக்கப்படும்.

முதற்பாதம் - எண்ணியபடி லாபம் சம்பாதித்து விடுவார். மிகுந்த சூரத்தனத்துடன் காரியத்தில் ஈடுபடுவார். புலமையும் ஆசாரமும் உண்டு. அடிக்கடி பிணி காணும். தேசத்தன்மையும் அறிவுப் பெருக்கமும் உண்டு.



இரண்டாம் பாதம் - அனாச்சாரம் உடையவர். சாஸ்திரங்களை வெறுப்பவர். தன் முயற்சிக்காக சிலரைச் சேர்த்துக் கொள்ளுவார். பொல்லாத மூர்க்கத்தனம் உண்டு. இவர்பால் எல்லாரும் அருவருப்புக் கொள்வர்.

மூன்றாம் பாதம் - சூரத்தனம் உண்டு. அனாவசியமாக கோபம் கொள்வார். கீழ்த்தரமான ஒழுக்கமற்ற பெண்களுடன் சேர்வார். புத்திவிசாலம் கிடையாது. கொடுமை செய்து மகிழ்ச்சியடைவார்.

நான்காம் பாதம் - நோயாளி. அதனால் துயரம் மிகும். வறுமையில் உழல வேண்டியிருக்கும். படிப்பு வராது. எதிலும் பொறுமையும் இருக்காது. வெறுப் படைபவர். வாழ்வு சுகப்படாது.

**ரோகிணியில் பிறந்தவர்-**

நன்றாக உரையாடுவார். தரும குணம் உண்டு. ஆசாரமானவர். நினைத்ததை முடிப்பார். வாய்மையுள்ளவர். மனப்பக்குவம் இருக்கும். திடமான நடையுடையவர். இரும்பு வியாபாரத்தில் நல்ல லாபம் வரும். புருவங்கள் நெருங்கியிருக்கும். கண்களும் சற்று பெரியதாகவே இருக்கும். புலமை மிக்கவர். சொல் தவற மாட்டார். அன்னதானம் செய்வார். பால் தயிர் நெய்யில் அதிக விருப்பம் உள்ளவர். பிறர் சொல் கேட்பவர். ஆனால் நினைத்ததை முடிப்பவர்.

முதல் பாதம் - சூரத்தனம் மிகுந்தவர். ஆனால் பொறுமை இல்லாதவர். பிறருக்கு இடையூறு செய்து மகிழ்வார். மர்மமானவர். வாழ்க்கையில் அலைச்சல் அதிகம் இருக்கும். அடிக்கடி பிணிகள் ஏற்பட்டு

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



பெறச் சிரமப்படுவார். நல்ல பொருள்களை கூடியவர்.

இரண்டாம் பாதம் - துன்பம் ஏற்படும். இருந்தாலும் குணம் நிறைந்தவர். நல்ல குணவதியாகத் தேர்ந்தெடுத்து திருமணம் செய்து கொள்வார். அன்பு மனம் படைத்தவர். கருணை நிறைந்தவர். வாய் சாலகர்.

மூன்றாம் பாதம் - சுகமான வாழ்க்கை அமையும். சாஸ்திரங்களிலும் மாந்திரீகத்திலும் பற்று கொண்பவர். இசையுடன் கணிதமும் இவருக்கு கைவந்த கலை. குருவின் அருளுக்குப் பாத்திரமானவர்.

நான்காம் பாதம் - பிற பெண்களை மோகிக்கும் குணம் படைத்தவர். நல்ல தேகவாகு படைத்தவர். பிறர் பொருளின் மேல் இச்சை வைத்து அதைப் பெற அரும்பாடுபடுவார்.

மிருக சீரிஷத்தில் பிறந்தவர்: -

தன்னைப் பற்றி குறைவாக மதித்துக் கொள்வார். நல்ல பேச்சாளர். வாழ்க்கையை எளிதாக எடுத்துக் கொள்வார். லலித கலைகளில் மிகுந்த பிரியம் கொண்டவர். ஒளி மிகுந்த கண்கள் இருக்கும். வலிமையான உடல். உயர்வான நெற்றி. மழமழப் பான கேசம் உடையவர். மாறாத போக்குடையவர். செல்வவந்தராகவே இருப்பார். நினைத்த காரியத்தை செய்து முடிப்பார். தன் கருத்துக்களை வெளியே சொல்லிக் கொள்ள மாட்டார்.

முதல் பாதம் - ஒழுக்கம் குறைந்தவர். சுத்தமும் இராது. கோபம் கொள்பவர். தனவந்தர். எதிராளியை



எப்படியும் ஒழித்துக் கட்டிவிடுவார். செல்வம் இருந்தும் வாழ்க்கை அவ்வளவாக சிறக்காது.

இரண்டாம் பாதம் - பெண்கள்பால் மிகுந்த மோகம் உள்ளவர். சத்திய வாக்கு இருக்கும். உலகத்துக்கே அறிவுரை வழங்குபவர். சிந்தனை வாதி. மன மகிழ்ச்சியுடையவர்.

மூன்றாம் பாதம் - உற்சாகமான குணம். பெருந் தன்மை உண்டு. ஒழுக்கமும் இருக்கும். செல்வம் சேரும். உத்தமமானவர் யோக்யஸ்தர். அடக்க முள்ளவர். பிறர் இவரை மிகவும் நேசிப்பார்கள். மரியாதையளிப்பார்கள்.

நான்காம் பாதம் - கோபம், கபடம், ஆசை எல்லாம் இருக்கும். ஆனால் புத்திசாலியாயிருப்பர். மிகுந்த பலசாலி. தருமமும் செய்வார். எந்தக் காரியம் செய்தாலும் அதில் தனக்கு ஏதேனும் ஆதாயம் உண்டாவென்று பார்ப்பார்.

திருவாதிரையில் பிறந்தவர்-

சீக்கிரத்தில் கோபம் கொள்பவர். சுயநலம் அதிகமிருக்கும். கர்வமும் இருக்கும். நன்றி மறப்பவர்கள். நீண்ட புருவம். சிவந்த கண்கள். உயர்வான மூக்கு. அழகான கேச அமைப்பு உண்டு. பொய் பேசுவார். சச்சரவுக்குத் துணிவார். இதனால் வறுமைதான் மிஞ்சும். பலசாலியாக இருந்தாலும், மூட்டு வலி தொந்தரவு இருக்கும். சுத்தமானவர். உறவு கொண்டாடுவார்.

முதற் பாதம்:- - யுவதிகளுக்குப் பிரியமானவர். சொற்களில் இனிமை இருக்கும். நற்குணமும் பொருந்தியிருக்கும். அதனால் வாழ்க்கை அவ்வளவு மோசமாக இராது.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



இரண்டாம் பாதம்:- - கர்வம் உண்டு. வாக்குச் சாதுரியம் அதிகம் இருக்கும். கர்வமும் உண்டு. வம்பு கூறி சண்டைக்கிழுப்பார். விரதம் ஏதும் இருக்க மாட்டார். தகுதியான பெண்களின் மீதே இச்சை வைப்பார்.

மூன்றாம் பாதம்:- - தயை இல்லாதவர். பெண்களுக்குப் பயப்படுபவர். குணமற்றவர். கோபம் அதிகம் இருக்கும். கோள் சொல்லுதலும் உண்டு. இவருக்குக் குனிய முடியாத நோய் உண்டாகும்.

நான்காம் பாதம்:- - கொடுமையான கெட்ட செய்கைகளை உடையவர். உறவினர்களைப் பகைத்துக் கொள்வார். கெட்ட செய்கைகளும் கபட எண்ணமும் உண்டு. அசுத்தமாயிருப்பார். கோபக்காரர்.

**புனர்பூசத்தில் பிறந்தவர்-**

எதையும் மறைத்துப் பேசும் குணம் படைத்தவர். கடுஞ் சொற்கள் இருந்தாலும் நன்னடத்தை உள்ளவரே. சாமர்த்தியமும் இருக்கும். இளமையில் காலில் காயம் உண்டாகும். அகன்ற தோள்கள், மிருதுவான கைகள். நெடுந்தூரம் நடந்தே செல்வார். இரக்க குணம் உண்டு. வாழ்க்கையில் சிக்கனத்தை கடைப்பிடிப்பார். பித்த உடல், பலருடன் நட்பு கொள்வார்.

முதல் பாதம்:- இவருக்கு சீக்கிரத்தில் காது கேளாமை ஏற்படும். உடலும் பருத்து விடும். மிகுந்த ஆசையுடன் சுக போகம் அனுபவிக்கக் கூடியவர். இவருடைய ரோமம் குத்திட்டு நிற்கும்.



இரண்டாம் பாதம்:- துயரம் தோய்ந்தவர். பெரிய சோம்பேறி. ஒழுக்கம் இருக்காது. உஷ்ண தேகம், பித்த உடல். இவரது வாழ்க்கை அவ்வளவாகச் சுகப்படாது.

மூன்றாம் பாதம்: - ஆயுள் நீண்டிருக்கும். ஆனால் பெரு வியாதி போன்று சரும வியாதியால் துன்பப்படுவார். பல்வலி அடிக்கடி வரும். காரிய சாதனை தெரிந்தவர். பிறர் இவரை வெறுப்பார்கள்.

நான்காம் பாதம்: - இவர் அழகாயிருப்பார். குளிர்ச்சியான கண்கள். அனைவரும் இவரை விரும்புவார்கள். சற்று குள்ளமாகத்தான் இருப்பார். வல்லமையுண்டு. நன்மையான காரியங்களில் விருப்பம் கொள்வார்.

**பூசத்தில் பிறந்தவர்**

நேர்மை உள்ளவர். செல்வமும் புகழும் உண்டு. கல்விமான். அநேகமாக இவர் வழக்கறிஞராக இருப்பார். அதனால் பொய் பேசக் கூடியவர். கள்ள வழக்கு கூறுவார். மூக்கு கூர்மையாயிருக்கும். கண்கள் அழகாக இருக்கும். உயரமாயிருப்பார். ஒழுக்கமுள்ளவர். பசி பொறுக்க மாட்டார். பெற்றோரைப் பேணுபவர். நன்கு அலங்கரித்துக் கொண்டு நறுமணம் பூசிக் கொள்பவர்.

முதல் பாதம்: தர்ம குணம் உண்டு. நீண்ட ஆயுள் இருக்கும். கோபமும் கொடுமையும் இருக்கும். உஷ்ண சம்பந்தமான நோய் வரும்.

இரண்டாம் பாதம்:- நட்புக்கு மிகவும் நல்லவர். நல்ல செல்வாக்கு இருக்கும். மக்களுக்கு நன்மை புரிவார். சொல்லில் நிதானம் இருக்கும். பிரபுத்துவமும் உண்டு.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



மூன்றாம் பாதம்:- அழகாயிருப்பார். நல்ல காரியங்களைச் செய்வார். உறவினர்களைத் தாங்குவார். நட்புக்கு நல்லவர். மிகுந்த உற்சாகம் உண்டு. விவேகமும் இருக்கும்.

நான்காம் பாதம்:- பிற பெண்களிடம் இச்சை கொள்வார். கோபம் உண்டு. சச்சரவும் கொள்வார். தைரியம் இருக்காது. வாழ்க்கையில் சங்கடந்தான்.

**ஆயில்யத்தில் பிறந்தவர்**

பலசாலி, படிப்புள்ளவர். மகிழ்ச்சியோடு இருப்பார். நன்றியிராது. இருந்தும் பெற்றோர்களுக்குப் பிரியமானவர். கண்ணும் புருவமும் உயர்ந்திருக்கும். இதமாகப் பேசுவார். எதிரியையும் நேசிப்பார். தெய்வ பக்தி உண்டு. சுக போகம் உடையவர். தனக்கென்று சில கருத்துகளை உடையவர். உணவை விட சிற்றுண்டியில் விருப்பம் அதிகம் இருக்கும். உள்ளுக்குள் சற்று பயந்த சுபாவம்தான்.

முதல் பாதம்- உற்சாகமானவர். நன்மையான காரியங்களைச் செய்பவா. செல்வச்செழிப்பு உண்டு. பெண்மைத் தோற்றமும் மேன்மையான விவேகமும் உண்டு.

இரண்டாம் பாதம்:- கெட்ட நடத்தையுள்ளவர். அதனால் ஒழுக்கமேது? சற்று அழகாகவே இருப்பார். துக்கம், துன்மார்க்கம் எல்லாம் உண்டு. பிறர் இட்ட வேலையைச் செய்பவர்.

மூன்றாம் பாதம்- பயனற்ற சொற்களை உடையவர். கெட்டிக்காரத் தனத்துடன் சோம்பலும் இருக்கும். கோபமும் கொடூரமும் உண்டு.



மனைவியைத் துன்புறுத்துபவர். எதிலும் ஞானம் இராது.

நான்காம் பாதம்:- இவர் ஸழ்த்தரமானவர களுடன் நட்பு கொள்வார்கள். அடிக்கடி பிணியும் ஏற்படும். இவர்கள் கொலை புரியக் கூடியவர். நாசம் விளைவிப்பார். புரட்டர்களிடம் பிரியம் வைப்பார். இவரிடம் பிறா நட்பு கொள்ளாமலிருப்பது நலமே!

## 11. பிறந்த நட்சத்திர பலன்கள் - 2

**மகத்தில் பிறந்தவர்**

கடவுளிடம் பயந்து நடப்பார். உற்சாகமாயிருப்பார். செல்வந்தராகவும் இருப்பார். வலது பக்கத்தில் மரு இருக்கும். பல இடங்களைச் சுற்றிப் பார்க்க ஆசை கொண்டவர். அழகாயிருப்பார். வாசனைப் பிரியர். இசையில் பிரியம் கொண்டவர் சிறிது நேரமே தூங்குவார். நியாயம் தெரிந்தவர்.

முதல் பாதம்:- சிவந்த நிறமும் செம்பட்டையான கேசமும் கொண்டவர். சண்டாளத்தனமும் பயந்த பார்வையும் இருக்கும். சிவந்த கண்களை உடையவர். பேராசை உண்டு.

இரண்டாம் பாதம்:- போலித்தனம் அதிகமிருக்கும். செலவு செய்வதில் மகிழ்ச்சி காண்பவர். உடலில நெருப்புக் காயம் இருக்கும். காதிலும் நோய் இருக்கும். கண்கள் பொன்மயமாயிருக்கும்.

மூன்றாம் பாதம்:- மிகுந்த பேராசை உடையவர். பலசாலியாயிருந்தாலும் அடிக்கடி பிணிகள் ஏற்படும். பொல்லாத கோபம் உண்டு. இருந்தும்



https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



சாத்விகமாகவே தென்படுவார். பரிசுத்தமா விருப்பார்.

நான்காம் பாதம்:- மனப்பரிசுத்தம் அதிகம் உண்டு. பெண்கள் பேச்சை பெரிதாகக் கேட்பவர். பிறரிடம் கனிவாகவே பேசுவார். பிணிகளால் மனக்கவலை ஏற்படும்.

## பூரத்தில் பிறந்தவர்

வியாபாரத்தில் வெற்றி பெறுவார். பேச்சில் இனிமை இருக்கும். தரும குணம் உண்டு. சிவந்த கண்கள். அழகான பற்கள். அதிகாரியாக இருப்பார். நிதானம் தவறுவார். கல்வி அறிவோடு செல்வம் உள்ள சீமான். உழைத்து சம்பாதிப்பவர். எப்பொழுதும் ஆழ்ந்த சிந்தனையிலிருப்பவர். விலை மாதர்களையே வென்று விடக் கூடியவர். பின்னால் வரக்கூடிய விளைவுகளை முன் கூட்டியே அறிந்து கொள்ளக் கூடியவர்.

முதல் பாதம்:- வீடு வாசல் இருக்காது. வர்த்தகர். முன் கோபி. இனிமையாகப் பேசுவார். தைரியசாலி. வர்த்தகராகத்தான் இருப்பார்.

இரண்டாம் பாதம்:- இவர் விவசாயி. பயிர்த் தொழில் நன்கு செய்வார். பிறருக்கு உதவ இயலாதவர். வறுமையும் கவலையும் சூழ்ந்திருக்கும்.

மூன்றாம் பாதம்:- மிகுந்த புகழ் படைத்தவர். நற்குணம் உண்டு. பிறர்பால் மிகுந்த அன்பு கொண்பவர்.

நான்காம் பாதம்:- இவர் தெய்வங்களையே தூஷிப்பவர். பெரியோர்களையும் இழிவாகப் பேசுவார். எப்பொழுதும் தர்க்கமாகவே இருப்பார்.



பிறர் மீது கூசாமல் அபாண்டம் கூறுவார். ஆனால் சோம்பல் இல்லாதவர்.

## உத்திரத்தில் பிறந்தவர்

நல்ல மனமுள்ளவர்தான். ஆனால் கோபம் சீக்கிரம் வந்து விடும். சத்தியவான். மேதை. வாயும் கண்களும் அழகாக அமைந்திருக்கும். நடை அழகும் உள்ளவர். பொய் சொல்லமாட்டார். பெண்கள் நேசம் உள்ளவர். ஞானத்துடன் சூரத்தனமும் உண்டு. மிகுந்த பக்திமான். மார்பிலும் முகத்திலும் மரு இருக்கும். கனிவாகவும் உபசாரமாகவும் பேசக் கூடியவர். முன் கை மிகவும் பலம் பொருந்தியதாக இருக்கும்.

முதல் பாதம்:- உறவினர்களிடம் பற்று உள்ளவர். மிகுந்த கண்ணியம் உண்டு. இனிமையாகப் பேசுவார். தைரியமும் இங்கிதமும் கொண்டவர்.

இரண்டாம் பாதம்:- மிகுந்த வறுமை உண்டு. குற்றமற்றவராயிருந்தாலும் கஞ்சத்தனம் மிக்கவர். மனச் சஞ்சலம் நிறைய உண்டு. யாசித்துப் பிழைக்கக் கூடியவராக இருப்பார்.

மூன்றாம் பாதம்:- ஆடு மாடுகளை மேய்க்கக் கூடியவர். இருந்தாலும் ஆடம்பரமாக இருக்க ஆசைப்படுவார். யோக்கியமானவர். நல்ல வார்த்தைகளையே பேசுவார்.

நான்காம் பாதம்:- பிறரைத் தூஷிப்பதில் பிரியம் கொண்டவர். இளமையிலேயே தாயை இழந்து விடுவார். போக்கிரித்தனம் அதிகம் இருக்கும். எவரையும் லட்சியம் செய்ய மாட்டார்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



## அஸ்தத்தில் பிறந்தவர்

இன்ப உணர்வு அதிகம் உடையவர். கோபம் உண்டு. கூடவே இரக்கமும் இருக்கும். நன்றி மறக்காதவர். படிப்பும் ஊக்கமும் உண்டு. தைரியசாலிகள். வாழ்க்கையில் பிந்திய காலத்தில் பணக்காரர்களாவார்கள். விரிந்த மார்பும் புறங்கால் அழகும் உடையவர். மகான்களை வணங்குபவர். தீர்த்த யாத்திரை செல்வார். கடினமான சொற்களைப் பேசக் கூடியவர்.

முதல் பாதம்:- பசுக்களிடம் பிரியம் உண்டு. காம இச்சை அதிகம் உண்டு. பெரிய கலகத்தை உண்டு பண்ணி வேடிக்கை பார்ப்பார். பொய் பேசுவார். ஆடம்பரமும் ஆங்காரமும் உண்டு.

இரண்டாம் பாதம்:- சிறு வயதிலேயே தந்தையை இழந்து விடுவார். திறமையுள்ளவர். ஆடல் பாடலில் ஆர்வம் உணடு. உயர்வான குணம் படைத்தவர். அதிகமாக வார்த்தையாடுவார்.

மூன்றாம் பாதம்:- இவரும் சிறு வயதில் தந்தையை இழப்பவரே! தந்திரம் படைத்தவர். வியாபாரியாக இருப்பார். அவ்வப்பொழுது பிணித் தொந்தரவு இருக்கும். பகைவரைப் போன்ற மனம் படைத்தவர்.

நான்காம் பாதம்:- தாய் சொல்லைத் தட்ட மாட்டார். அரிய செயல்களைப் புரிந்து புகழ் அடைவார். மகிழ்ச்சியான சுபாவமும் பெருந்தன்மையும் இருக்கும். நல்ல நடத்தையும் இருக்கும்.



## சித்திரையில் பிறந்தவர்

இவர் கஞ்சர். ஆபரணப் பிரியர். நல்ல தன்மைகள் இருக்கும். தேச பக்தர். பலமான உடல். விரிந்த மார்பு. அழகான கண்கள். இனிய சொற்கள் உண்டு. முகத்தில் மரு இருக்கும். கோபம் கொள்ளக் கூடியவர். தாமச புத்தி உண்டு. சொல்லில் உறுதி உண்டு. கடினமான நடை உடையவர்.

முதல் பாதம்:- பல ஊர்களுக்குச் சென்று வருவார். விரிவுரை நிகழ்த்தக் கூடியவர். கண் நோய் உண்டு. தந்திரசாலி. தீமையான காரியத்தில் ஈடுபட பிரியம் கொண்டவர்.

இரண்டாம் பாதம்:- இவரும் சிறப்பான பேச்சாளர். உடலை நன்கு பேணிக் காப்பார். சற்று தரித்திர வாழ்வுதான் அமையும். கவலையுடையவர். தவ சிரேஷ்டமும் உன்னதமும் உள்ளவர்.

மூன்றாம் பாதம்:- நற்செய்கை உடையவர். பிரபலமான புகழும் இருக்கும். வாழ்க்கையில் வெற்றி அடைவார். அறிவாற்றலும் தேர்ந்த புலமையும் உண்டு.

நான்காம் பாதம்:- குற்றமற்ற தன்மை கொண்டவர். கொடிய பகைவர்களையும் எளிதில் கவர்ந்து விடுவார். இயல்பாகவே நல்ல விவேகம் உண்டு. எதிலும் வெற்றிதான்.

## சுவாதியில் பிறந்தவர்

உயர்ந்த அந்தஸ்து உடையவர். நன்றாகப் பழகுவார். தெய்வ பக்தியும் தரும குணமும் உண்டு. தியாகி: கல்வியறிவுள்ளவர். நல்ல சுவையான உணவைத்தேடி உண்பார். பெற்றோருக்குப்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



பிரியமானவர். தொடையில் மரு இருக்கும். கடினமான உடல் அமைப்பு உண்டு. முறையோடு பேசுவார். பேச்சில் இனிமை சொட்டும். எப்பொழுதும் ஏதேனும் ஆயுதத்தை கையில் வைத்திருப்பார். சாத்வீக குணம் உண்டு.

முதல் பாதம்:- சொற்பொழிவு ஆற்றலும் இருக்கும். பிரபலமானவர்கள் நட்பு எளிதில் இட்டும். மிகுந்த தைரியசாலி. தெளிந்த ஞானம் உண்டு. கல்வியில் சிறப்பு உண்டு.

இரண்டாம் பாதம்:- காம இச்சை சற்று அதிகமாகவே இருக்கும். வலிமை பொருந்திய உடல். ரகசியத்தைக் காப்பார். வாக்குச் சாதுரியம் உண்டு. எதிலும் முன்னெச்சரிக்கையாக இருப்பார். நல்ல விவேகி.

மூன்றாம் பாதம்:- இவர் ஒரு கலகப் பிரியர். ஆயுதப் பயிற்சி உண்டு. வல்லமை பொருந்தியவர். நல்ல நடத்தை இருக்காது. எப்பொழுதும் மனதில் வஞ்சனையும் கொடுமையும் குடி கொண்டிருக்கும்.

நான்காம் பாதம்: - எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருப்பார். இருந்தும் மனதில் வஞ்சனை உண்டு. பேச்சுத் திறன் இருக்கும். எதிலும் ஆத்திரப்படுவார். வேற்றுமைப் படுத்துவதில் பிரியமுடையவர்.

## விசாகத்தில் பிறந்தவர்

தெய்வ பக்தி உள்ளவர். வேதங்களைக் கற்றவர். தலை, முகம், மார்பு, இடுப்பு, இவற்றில் மரு இருக்கும். பொறாமையும் கஞ்சத்தனமும் உண்டு. பேச்சில் எச்சரிக்கை இருக்கும். கவலையற்றவர். குதிரை சவாரியில் பயிற்சி உண்டு. நித்திரையில் அதிக



விருப்பம் உள்ளவர். உறவினரிடம் அன்பு கொண்டவர். பெண்கள் நேசம் உடையவர். குணசாலியாயிருந்தாலும் முன் கோபக்காரர்.

முதல் பாதம்:- நல்ல சுகவாசி. ஆனால் வஞ்சகம் உண்டு. கல்வியில் தேர்ச்சி பெற்றவர். சோதிடரா யிருப்பார்.

இரண்டாம் பாதம்:- பிணியினால் துன்பப் படுவார். தற்புகழ்ச்சி சற்று அதிகம்தான். எப் பொழுதும் விளையாட்டும் வேடிக்கையும் உள்ளவர். மந்திர வித்தையில் ஆர்வம் காட்டுவார். நீதியாளர்.

மூன்றாம் பாதம்:- மிகுந்த வாயாடி. பார்வைக்கு பலசாலி போல் தோன்றுவார். சற்று குள்ளமா யிருப்பார். அழகான பெண்களைத் தேடிச் சேருவார். வஞ்சனையாளர். தந்திரசாலியாகவும் இருப்பார்.

நான்காம் பாதம் - சற்று உயரமாயிருப்பார். வாக்கு சாதுரியம் உண்டு. அறிவு விசாலம் படைத்தவர். ஞானி. தூதராகலாம். அழகான மனைவி அமைவாள்.

## அனுஷத்தில் பிறந்தவர்

அடிக்கடி பயணம் செய்வார். வெளிநாட்டில் வாழலாம். பெற்றோர்களிடம் நன்றியுடன் நடந்து கொள்வார். பலரால் பாராட்டப்படுவார். செல்வம் உண்டு என்றாலும் லோப குணம் உண்டு. இனிமையாகப் பேசுவார். பெண்களிடம் அதிகமாக மோகம் உண்டு. பெற்றோர்களைக் காப்பாற்றுவார். சிவந்த கண்களும் அழகான கேசமும் படைத்தவர். அநேகர் கொண்டாடும் நீதியாளர். அரசாங்க வெகுமதியும் உண்டு.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



முதல் பாதம்:- மந்திர வித்தையில் பிரியம். ஒழுக்கம் உண்டு. மேலான பதவி வகிப்பார். விவகாரம் தெரிந்தவர். இங்கிதம் இருக்கும்.

இரண்டாம் பாதம்:- சிறந்த அறிவாளி. மிகுந்த காமம் படைத்தவர். குழல், நாதசுர இசையில் ரசனை உள்ளவர். சாதுரியமாகப் பேசுவார்.

மூன்றாம் பாதம்:- அழகாயிருப்பார். குரலும் இனிமையாக இருக்கும். சாமர்த்தியசாலி. எழுத்துப் பணியில் சிறந்தவர். பகுத்தறிவு உண்டு.

நான்காம் பாதம்:- தெய்வ நிந்தனை உண்டு. வாக்கில் விஷத் தன்மையிருக்கும். வெட்கப்படக் கூடியவர். சகோதரர்கள் துரோகம் புரிவார்கள்.

### கேட்டையில் பிறந்தவர்-

மகிழ்ச்சியாக இருப்பார். தரும குணம் உண்டு. ஆனால் ஏழ்மைதான். பணம் பறிக்கும் குணம் உள்ளவர். குரூரமானவர். அடிக்கடி கோபம் வரும். உள்ளுக்குள் பொருமுவார். வலப்பக்கத்தில் மரு இருக்கும். கண்கள் சிவப்பாக இருக்கும். உடன் பிறந்தவர்களை ஆதரிப்பார். பொய்யை அழகாக மெய் போல் பேசுவார். கெட்ட நண்பர்கள் சேருவார்கள். தந்திரசாலி. பலம் பொருந்தியவர்.

முதல் பாதம்:- உல்லாசம் நிறைந்தவர். விளையாட்டுப் பிரியர். நன்றாக சிந்தித்து எழுதக் கூடியவர். பரிகாசமும் கர்வமும் சேர்ந்திருக்கும்.

இரண்டாம் பாதம்:- போக இச்சை அதிகம் உண்டு. கடினமான உள்ளம் படைத்தவர். பிணித் தொந்தரவும் உண்டு. இசைப் பிரியர். பெருமையும் சுகமும் உண்டு.



மூன்றாம் பாதம்:- அமைதியுள்ளவர். பகை விருத்தி உண்டு. தூண்டி விட்டு வேடிக்கைப் பார்ப்பார். கண் பார்வையில் தொந்தரவு இருக்கும். பிறர் காரியத்தை சொந்தக் காரியம் போல் பார்ப்பார். சிறிது விவேகமும் உண்டு.

நான்காம் பாதம்:- தம் குடும்ப பரம்பரை மேன்மையைப் பற்றி அடிக்கடி பேசிக் கொண் டிருப்பார். கலகம் செய்து பிறரை வருத்துவார். கபடமும் பொல்லாங்கும் உண்டு. முன் கோபக்காரர்.

### மூலத்தில் பிறந்தவர்

ஒழுக்கத்தைக் கடைப் பிடிப்பார். மன உறுதி உண்டு. உறவினரைப் புறக்கணிப்பார். முன் கோபமுண்டு. எந்தக் காரியத்தையும் செவ்வனே செய்வார். கண்டதையெல்லாம் ருசி பார்ப்பார். கொடூரமானவர். கல்வி ஓரளவுதான் இருக்கும். புத்திசாலியாயிருந்தாலும் சூதாட்டத்தில் பிரியம் கொண்டவர்.

முதல் பாதம்:- இவரைப் பைத்தியக்காரரோ என்று பிறர் சந்தேகப்படுவார்கள். கிழங்கு வகைகளைப் பிரியமாக உண்பார். நோயுண்டு. பாவ காரியங்களைப் பிரியமாகச் செய்வார். கோபமும் அடிக்கடி வரும்.

இரண்டாம் பாதம்:- இவருக்கு வாய்மை உண்டு. இவரது புலமை பிரசித்தி அடையும். அடிக்கடி வயிற்று வலி வந்து துன்பப்படுத்தும். அன்பு மிகுந்தவர். விவேகமும் மரியாதையும் உண்டு.

மூன்றாம் பாதம்:- இவர் கனி வகைகளில் பிரியம் கொண்டவர். சூனிய வித்தையை அறிந்திருப்பார். அழகாயிருப்பார். சோம்பேறிதான்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



நான்காம் பாதம்:- இவருக்கு கண்டமாலை நோய் வரலாம். மிகுந்த வலிமை உண்டு. சாந்த குணம் உண்டு. சாமர்த்தியசாலி. பகைவர்களை எளிதில் அடக்கிவிடுவார். ஞானம் படைத்தவர்.

## பூராடத்தில் பிறந்தவர்

இவருக்குப் பிரயாணத்தில் மிகுந்த ஆசை இருக்கும். சற்று உயரமாயிருப்பார். தாயிடம் மிகுந்த அன்பு கொண்டவர். வாய்மை உடையவர். பெண்களிடம் அதிகப் பிரியம் கொண்டவர். கண்கள் சிறியதாக இருக்கும். நெற்றியும் குறுகலாகத்தான் இருக்கும். சிற்றுண்டிப் பிரியர். கை, கால்கள் சற்று நீளமாயிருக்கும். தோள் வலிமை உண்டு. தைரியசாலி. நறுமணப் பிரியர். அழகாக இருப்பார். பொய் சொல்ல மாட்டார். மனதில் கவலை இருக்கும்.

முதல் பாதம்: - வயது மத்திமம்தான். மரியாதையானவர். புத்திரா இல்லாதவர். வீம்புக்காக விவாதம் செய்யக் கூடியவர்.

இரண்டாம் பாதம்:- தாசிகளின் நேசம் உண்டு. நல்ல நண்பர்கள் இடையாது. அறியாமை உண்டு. அழகுடையவர். மோட்ச சாதனை பெறுவதில் மிகவும் ஈடுபடுவார்.

மூன்றாம் பாதம்:- இவருக்குப் பெருவியாதி வரலாம். தாயை இளமையிலேயே இழந்து விடுவார். நற்குணம் உண்டு. குறைவில்லாத சுகம் உண்டு.

நான்காம் பாதம்:- பிறர் பொருளை அபகரித்தல், சோரம் எல்லாம் உண்டு. இளவயதிலேயே தந்தையை இழந்து விடுவார். திருட்டு நிந்தை உண்டு. இவர் வாழ்வு அவ்வளவாகச் சுகப்படாது.



## உத்திராடத்தில் பிறந்தவர்

உறவினர்களிடம் மதிப்பு உண்டு. நல்லதும் கெட்டதும் தெரிந்தவர். நல்ல பலசாலி. நீண்ட மூக்கு இருக்கும். பெருந்தன்மை உண்டு. முகத்தில் மரு இருக்கும். மர்மமானவர். பிறர் பொருளில் ஆசை வைக்கமாட்டார். தியாகி. உணவுப் பிரியர். பக்தி மிகுந்தவர். நல்ல நீச்சல் வீரர். நயமாகப் பேசுவார். நல்ல நட்பை விரும்புவார். புத்திசாலி.

முதல் பாதம்:- குருவை மிகவும் உபசரிப்பார். பெருந்தன்மை உண்டு. பல சாத்திரங்களை அறிந்தவர். நல்ல விவேகம் படைத்தவர்.

இரண்டாம் பாதம்:- இவரிடத்தில் டாம்பீகம் உண்டு. நல்ல பேச்சாளர். பலசாலி. லோப குணம் உண்டு. விரோதமான செய்கைகளில் மிகவும் பிரியம் கொண்டவர்.

மூன்றாம் பாதம்:- இவருக்குப் பருத்த உடல் இருக்கும். மிகுந்த கல்விமான். விஷமத்தனம் உண்டு. பேச்சு அதிகமாயிருக்கும். எதிலும் ஆத்திரப்படுவார். மனக்கிலேசம் உண்டு.

நான்காம் பாதம் - உறவினர்களிடம் மிகவும் அன்பாக இருப்பார். உலக நடவடிக்கையை நன்கு அறிந்தவர். சிறப்பான காரியங்களைச் செய்து பெருமை அடைவார். வீரமுள்ளவர். நல்ல தருமகுணம் படைத்தவர். வாழ்க்கை இவருக்கு நன்கு அமையும்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



## 12. மனதின் நிலையைக் கூட அறியலாம்.

இப்போது பிறந்த நட்சத்திர பலன்களைப் பார்த்துக் கொண்டு வருகிறீர்கள்.

### திருவோணத்தில் பிறந்தவர்

மிகுந்த ஒழுக்க முள்ளவர். இவரை மற்றவர்கள் அதிகமாக விரும்புவார்கள். அறிஞர்கள், கீர்த்தியுள்ளவர்கள். தோற்றம் கம்பீரமாக இருக்கும். பெண்களிடம் அதிகம் பிரியம் உள்ளவர். உள்ளங்கால் உயர்ந்திருக்கும். முன் கோபி. ஆனால் சீக்கிரத்தில் சாந்தமாகிவிடுவார். கல்வி மிகுந்தவர். பொன்னைப் போற்றி சேமித்து வைப்பார். ஆனால் பிறருக்கு அன்னம் படைக்க மாட்டார். நாலா பக்கங்களிலும் பார்த்து நடப்பார்.

முதல் பாதம்:- வலிமையான உடல் இருந்தாலும் இவருக்கு சந்ததி இருப்பது துர்லபமே! சண்டை மூட்டி விட்டு வேடிக்கைப் பார்ப்பார். களிப்புடன் இருந்தாலும் ஆங்காரம் கொண்டவர்.

இரண்டாம் பாதம்:- நேசம் இல்லாதவர். லோபியென்றே சொல்ல வேண்டும். சதா பிரம்ம ஞானத்தைப் பற்றி பேசுவார். கருணையும் கிடையாது. காமமும் கிடையாது.

மூன்றாம் பாதம்:- இவருக்கு காம இச்சை அதிகம் உண்டு. ஆனால் அடிக்கடி பிணிகள் வந்து வருத்தும். நல்ல சுகபோகம் அனுபவிப்பார். செல்வமும் சேர்ப்பார். மிகுந்த ஈகை உள்ளவர்.

நான்காம் பாதம்:- எப்பொழுதும் இவர் நெற்றியில் சந்தனப் பொட்டோ குங்குமப் பொட்டோ



இருக்கும். ஆசாரம் உண்டு. செல்வமும் வேளாண்மையும் உடையவர். தான தருமம் செய்வார். பெருந்தன்மையும் கண்ணியமும் உண்டு. ஆனால் இவர் பரத்தையரிடம் மிகவும் பிரியமாக நடந்து கொள்வார்.

### அவிட்டத்தில் பிறந்தவர்

இவர் மிகுந்த இசைப் பிரியர். பெருந்தன்மை உண்டு. சுதந்திரமானவர். எதற்கும் பயப்பட மாட்டார். சுவையான உணவில் அதிக விருப்பம் உண்டு. மூக்கும் பாதமும் சற்று உயர்ந்து இருக்கும். சொல் பொறுக்க மாட்டார். பெண்கள்பால் அதிகம் பிரியமுள்ளவர். அழகாக இருப்பார். அறிவாளி. முறையான தொழில் செய்பவர். அடக்கத்தோடு இருப்பார். பிறர் பொருளின் மீது இச்சைக் கொள்ளாதவர்.

முதல் பாதம்:- இவர் கரிய நிறமாய் இருப்பார். பசி தாளமாட்டார். உடல் பருத்து இருக்கும். காமம் மிகுந்தவர். கோள் சொல்வார். வஞ்சனை புரிவார். சஞ்சலமானவர்.

இரண்டாம் பாதம்:- மிகுந்த தைரியசாலி. தருமம் செய்யும் குணம் உண்டு. ஆனால் வறுமை மிகுந்திருக்கும். மனதில் வேற்றுமை நினைப்பவர். அடம் பிடிப்பவர். அதனாலேயே காரியத்தை சாதித்துக் கொள்வார்.

மூன்றாம் பாதம்:- சன்மார்க்கமும் அபிமானமும் உள்ளவர். சற்று குள்ளமாயிருப்பார். உறுதியான உள்ளம் படைத்தவர். சிவந்த நிறம். சிரித்த முகம். இவருக்கு எளிதில் புகழ் கிட்டும்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



நான்காம் பாதம்:- செல்வம் மிகுந்திருந்தாலும் குரூர புத்தி உண்டு. உடல் திடமாயிருக்கும். அழகான தேகம் அமைந்திருக்கும். ஆங்காரமும், வெறுமையும் உண்டு.

## சதயத்தில் பிறந்தவர்

அரசாங்கத்தின் மூலம் நல்ல பாராட்டு கிடைக்கும். இவர் அநேகமாக வக்கிலாகவோ நியாயாதிபதியாகவோ இருப்பார். கல்வியறிவு அதிகம் உண்டு. தைரியசாலி. செல்வந்தர். கடுஞ் சொற்களை தாங்க மாட்டார். எதிரியை எளிதில் அழித்து விடுவார். கை கால்கள் மிகவும் வலிமையுடன் இருக்கும். பெண்களுக்குப் பிரியர். அதிகமாக நீராடுவார். பிணி அற்பமாகத்தான் இருக்கும்.

முதல் பாதம்:- பொருள் அதிகம் சேரும். மிகுந்த நற்குணம். பசுக்களிடத்தில் மிகுந்த அன்பாயிருப்பார். காம இச்சை அதிகம் உண்டு. அந்தணர்களிடத்தில் அன்பும் ஆசாரமும் கொண்டவர். அழகாயிருப்பார்.

இரண்டாம் பாதம்:- இவர்களது நண்பர்களெல்லாம் கீழ்த் தரமானவர்கள்தாம். அடிக்கடி கோபம் வரும். சஞ்சலபுத்தியும் உண்டு. வேறுபாடு உண்டாக்கி வேடிக்கைப் பார்ப்பவர்.

மூன்றாம் பாதம்:- இவர் உத்தியோகம் பார்க்க மாட்டார். உடலுழைப்பின் மூலம் நினைத்ததை நிறைவேற்றுவார். அடிக்கடி வயிற்று வலி உண்டு. பித்தம் உண்டு. பசி பொறுக்க மாட்டார்.

நான்காம் பாதம்:- நல்லொழுக்கம் உண்டு. சுகமாயிருப்பார். எண்ணியதை முடிப்பார். நாடி வருவோருக்கு உதவி செய்வார். நாடகப் பிரியர். நாட்டியத்திலும் ஈடுபாடு உண்டு.



## பூரட்டாதியில் பிறந்தவர்

பெண்களால் வெல்லப் படுவார். கல்வியறிவு உண்டு. வாக்குப் பலிதமும் உண்டு. பிறர் மீது பொறாமை கொள்வார். இவர் மூக்கு சற்று உயரமாயிருக்கும். பால், தயிர், நெய் இவற்றை சற்று அதிகமாகவே சேர்த்துக் கொள்வார். இவரிடம் வரும் எந்த வழக்கையும் எளிதில் தீர்த்து வைப்பார். பிறர் பெண்களுக்காக பொருள் செலவிட மாட்டார். பிறர் குறை சொல்வதைப் பொறுக்க மாட்டாதவர்.

முதல் பாதம்:- மிகுந்த சுகவாசி. ஒரே குறிக்கோள் உடையவர். திடமான உடல், முகம் பரந்திருக்கும். மனைவியிடம் மிகுந்த விருப்பம் உள்ளவர்.

இரண்டாம் பாதம்:- பரிந்துக் காட்டி காரியத்தை எளிதில் சாதித்துக் கொள்வார். எதிலும் பின் வாங்க மாட்டார். சிறந்த மந்திரத்தை அறிந்தவர். மிகுந்த இராஜரீகமானவர்.

மூன்றாம் பாதம்:- புலமை, பொறுமை இருந்தாலும் சற்று மனபேதம் உடையவர். பிறருக்கு கல்வி போதிப்பார். பிறர் வீட்டில் சாப்பிடுவதை அதிகம் விரும்புவார். விவேகம் உண்டு. நல்லொழுக்கமும் உண்டு.

நான்காம் பாதம்:- சத்தியவந்தர். நல்ல காரியங்களைத் தேர்ந்தெடுத்து செய்வார். பலரும் கொண்டாடுவார்கள். மேன்மையானவர். நட்பை எளிதில் அடைவார். லட்சுமிகரம் வாய்க்கப் பெற்றவர். அழகானவர்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



## உத்திரட்டாதியில் பிறந்தவர்

திறமைசாலியாயிருந்தாலும் படிப்பில் ஆர்வம் காட்டமாட்டார். துடுக்காகப் பேசுவார். தரும குணமும் உண்டு. அகன்ற மார்பும் விரிந்த காதுகளும் உடையவர். பொன் பொருள் சேர்க்கை உண்டு. சுற்றம் சூழ்ந்தவர். நீதிமான். ஆற்றில் நீராடுவதில் பிரியம் காட்டுவார். தாம்பூலப்பிரியர். பெண்களால் நேசிக்கப்படுவார்.

முதல் பாதம்:- இவருக்கு உடல் முழுவதும் ரோமம் அடர்ந்திருக்கும். எப்பொழுதும் கவலையும் ஆத்திரமும் உடையவர். பிரதானமான சிறப்புப் பொருந்தியவர்.

இரண்டாம் பாதம்:- சன்மார்க்கம் உள்ளவர். அதிக ரோஷம் உண்டு. சற்று வறுமை சூழ்நிலைதான். விவேகம் உண்டு. சாத்வீக குணம் படைத்தவர்.

மூன்றாம் பாதம்:- இவரது ரோமம் சற்று சிவந்து இருக்கும். குற்றமற்ற விவேகமும், புத்திசாலித்தனமும் உண்டு. முன்கோபி, பிறர் மீது குற்றம் கூறுவார்.

நான்காம் பாதம்:- இவரிடம் தாராளத் தன்மை உண்டு. விவசாயம் உண்டு. கெட்டவார்த்தைகளாக கேட்பவர். மனம் பேதலிக்காதவர். ஆனால் அவரையும் மீறி மனவாட்டம் ஏற்படும்.

## ரேவதியில் பிறந்தவர்

நல்ல பேச்சாளர். பெண் சபலம் அதிகம் உண்டு. வீரம் மிகுந்தவர். நல்ல புகழ் உண்டு. சாதுர்யமானவர். கண்கள் அழகாக அமைந்திருக்கும். யாசிப்பவர்களை வெறுங்கையோடு அனுப்ப மாட்டார். செல்வத்தோடு வாழ்வார். பழி



பாவங்களுக்கு பயப்படக் கூடியவர். அந்தணர்களிடம் அன்பு கொள்வார். மிகுந்த நற்குணம் உள்ளவர். இவரது வாழ்க்கை சிறந்து விளங்கும்.

முதல் பாதம்:- புலமை உண்டு. கூடவே கிலேசமும் இருக்கும். வார்த்தையில் இனிமை உண்டு. நல்ல குணம் இருந்தாலும் சமயத்தில் கலகம் விளைவித்து வேடிக்கை பார்ப்பார். மிகுந்த வல்லமை உண்டு.

இரண்டாம் பாதம்:- இவருக்குத் திருட்டுப் பட்டம் கிடைக்கும். மன உறுதி உண்டு. அதனால் மனக் கவலையை வெளிக்குக் காட்டிக் கொள்ள மாட்டார். எதிலும் அவசரம் உண்டு. மிகுந்த ஆசையும் உண்டு. எப்படியும் சுகம் கிடைக்கும்.

மூன்றாம் பாதம்:- எல்லாக் காரியத்திலும் முயற்சி எடுப்பார். எதையும் வெளிப்படையாகப் பேசுவார். வறுமையும் குணக் கேடும் உண்டு. தெரிந்தும் பாவம் செய்ய அஞ்ச மாட்டார். ஈகைக் குணம் உண்டு.

நான்காம் பாதம்:- உறுதியான சொல் படைத்தவர். எதிரியை எந்த வகையிலும் ஒழித்துக் கட்டி விடுவார். மிக்க சுய நலமுள்ளவர். பிறந்த குலத்துக்கு கேடு விளைவிப்பார். தற்புகழ்ச்சி உண்டு. தான்தான் மிகுந்த தைரியசாலி என்று மார்தட்டிக் கொள்வார். ஆனால் உண்மையில், எதிராளி வலியன் என்று அறிந்ததும் பின்வாங்கி விடுவார்.

இப்பொழுது பிறந்த நட்சத்திரங்களைப் பற்றியும் அவற்றின் விளைவுகளைப் பற்றியும் விளக்கம் கண்டு கொண்டீர்கள்.

இத்தனையும் சாதாரண சொற்கள் அல்ல. பெரியோர் ஆழ்ந்து ஆய்ந்து பார்த்து எழுதி வைத்த சொற்கள்!



https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



முரண்களிடையே ஒற்றுமை காணும் மனப் பக்குவம் இருந்தால் எந்நாளும் துன்பமில்லை. குசேலரும் ஆதிசங்கரும் இந்த அத்வைத நிலைக்குச் சான்றானவர்கள்.

நம் முன்னோர் இயற்கைப் பெருஞ் சக்திகளின் போக்கைக் கூர்ந்து கவனித்து, ஆய்ந்து தெளிந்து, மனித குலம் உய்ய வழிகோலினார்கள். எந்த விஷயத்திலும் இறையருளைப் பெறுவதே எல்லாவற்றிலும் மேலானது. அதை அடைய வழி கோலும் வகையில் நுட்பமாகப் பல உண்மைகளை எடுத்துரைத்திருக்கிறார்கள்.

குரு பகவான் உயர்ந்த பண்புகளைக் கொண்டவர் என்றும், சனி பகவான் தாழ்ந்த பண்புகளைக் கொண்டவர் என்றும், இந்த இருவரிடையே சேர்க்கையோ பார்வையோ, ஜாதகத்தில் அமையும் போது, அந்த ஜாதகன் சம நிலை பெற்ற அத்வைத நிலையில் சிறப்பெய்தி ஒரு சிறந்த வேதாந்தியாகிறான் என்றும் குறிப்பிட்டுள்ளார்கள்.

முறையே இல்லறத்திலும் துறவறத்திலும் இப்படிச் சம நிலை கண்ட இருவரை இங்கே குறிப்பிடலாம். ஒருவர் குசேலர், மற்றொருவர் ஆதி சங்கரர்.

ஜோதிடக் கலைக்குத் தேவையான கணித நுணுக்கம், மனித அறிவின் திறனைத் திறை அடிப்பதாகும்.

சாமானிய மனிதன் அந்த நுணுக்கங்களை எளிதில் அறிதல் சற்று சிரமமாகும்.

தன்னடக்கம், தெய்வ நம்பிக்கை, ஆன்மிக சக்தி டையவரே ஜோதிடக் கலையின் கணித



நுணுக்கங்களை ஆராய்ந்து மனித குலத்துக்கும், தனி மனிதனுக்குமான பலாபலன்களை – அந்தக் கோள்களின் விந்தைச் சேர்க்கையாலும், சஞ்சார கதிகளாலும் மனிதன் பெறும் மாற்ற விசேஷங்களை எடுத்துச் சொல்லத் தகுதி பெற்றவராவர்.

இத்தகைய மகான்களைப் பாரத நாட்டு மாமன்னர்கள் பலர் தம் அவையில பெரும் மதிப்புடன் போற்றி வந்துள்ளார்கள்.

எதனையும் வருமுன் அறிந்து உரைத்து, நீதியும் நேர்மையும் தழைத்தோங்க துணை நின்றவர்கள் இந்த மெய்ஞ்ஞானிகள்.

மன்னர் ஒருவரின் மனப் போராட்டத்தைக் கூட ஜோதிடக் கணிதம் வாயிலாக அறிந்துரைத்த அவை ஜோதிடர் ஒருவரது சுவையான கதை ஒன்று உண்டு.

மன்னர் ஒரு நாள் தியானத்தில் லயித்து இருந்தார். அந்த அரசப் பேரவையின் ஜோதிடர் – லிங்க பண்டாரத்தார் – மன்னரின் வெகு நேரத் தியான நிலையைக் கண்டு ஜோதிட வாயிலாக அரசரின் மன நிலையை உணர எண்ணினார்.

அந்த நேரத்தில் கோள்களின் நிலைகளைப் பலவாறாக ஆராய்ந்து, முடிவாக அரசரின் மன வழிபாட்டைப்பற்றி உணர்ந்தார்.

அவர் கணக்குப்படி மன்னர் மன வழிபாட்டில் லயித்திருப்பதையும், ஆனால் அந்த மன வழிபாட்டில் இறைவனுக்கு வைக்கப்பட வேண்டிய கிரீடம் சரியாய்ப் பொருத்தப்பட முடியாமை குறித்து அரசர் தவிப்பதையும், அதற்குக் காரணம் அந்த மகுடத்துக்கு முன் பொருத்த வேண்டிய அணிகலன் சரிவர அமைக்கப்படவில்லை என்பதையும் அறிந்தார் ஜோதிட நிபுணர்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



இதனை அரசா செவியில் படும்படி எடுத்து
உரைத்தார். உடனே மன வழிபாடு கலைந்து உணர்வு
பெற்றார் மன்னர். அச்சோதிட மணியின் அதிசயிக்கத்
தக்க திறனை வியந்து அன்பு மேலிட்டால்
அரவணைத்துப் பெரு மகிழ்வு கொண்டார்.

ஒருவரது மன நிலையைக் கூட அறிந்து கூற
உதவும் ஜோதிடக் கலையின் மேன்மையையும் அதன்
கணித நுணுக்கங்களில் நுட்பங்களில் - அந்த
அளவுக்குத் தேர்ச்சி பெற்றிருந்த பண்பில் சிறந்த
பல பெரியோர்களையும் நம் நாடு பெற்றிருந்தது
என்பதற்கு இந்திய வரலாற்றில் இதுபோல் இன்னும்
பல சான்றுகள் உள்ளன.

இன்று பெரிதும் விரிவடைந்துள்ள விண்வெளி
ஆராய்ச்சிச் சாதனங்களைக் கொண்டு அறிந்து
தெரிவிக்கும் கிரஹண விவரங்களை, ஒரு
சிரமுமின்றி, வீட்டின் திண்ணையில் உட்கார்ந்த
வாறே, பல மாதங்களுக்கு முன்பே தம் பஞ்சாங்கத்தில்
பிரசுரிக்கும் அந்தத் திருக் கணித அறிஞரைப் பற்றி
நம்மில் எவ்வளவு பேர் சிந்திக்கிறோம்?

பிரிட்டிஷ் டெலிவிஷன் நிறுவனத்தைச் சேர்ந்த
'மார்ஜோரி ஆர்' என்ற பெண்மணி ஜோதிடத்தில்
தமக்கு நம்பிக்கை ஏற்பட்ட காரணத்தையும்
இக்கலையின் புதிய உபயோகங்களைப் பற்றியும்
விவரித்திருக்கிறார். அவருடைய கருத்துதான் என்ன?
கேளுங்கள்.

இயற்கைக்கு அதீதமான மனித சக்திகள் பற்றி
டெலிவிஷன் நிகழ்ச்சிகள் தயாரிப்பதற்காக நான்
ஆராய்ச்சி நடத்திய பொழுது ஒரு ஜோதிடர்
என்னுடைய ஜாதகத்தைக் கணித்தார். பல சிக்கல்கள்



நிறைந்த என்னுடைய கடந்த கால வாழ்வைத்
துல்லியமாக விவரித்தார். சிக்கலான என்னுடைய
ஆளுமையின் விளைவுகளே கடந்த கால வாழ்க்கைச்
சிக்கலின் நிகழ்ச்சிகள் என்பதை அவர் விளக்கினார்.

இந்த ஜோதிட மதிப்பீட்டை ஆதாரமாகக்
கொண்டு என் வருங்கால வாழ்வை முறைப்படுத்திக்
கொள்ள வாய்ப்புக் இடைத்தது.

வேறு 'மனத் திறன்களை'க் கற்பது போலவே
ஜோதிடத்தையும் புத்தகங்களிலிருந்து கற்கலாம்.
சுருக்கெழுத்தில் பயிற்சி பெறுவது போலத்தான்
இதுவும்.

பிறந்த தேதி, நேரம், இடம் ஆகியவற்றைச்
சொன்னால் கம்ப்யூட்டர் - ஒரே நிமிஷத்தில் நம்
ஜாதகத்தைக் கணித்துக் கொடுக்கிறது. இந்த ஜாதகம்
நம்முடைய உள் மனதின் 'படம்' ஆகும். வைத்தியப்
பரிசோதனை போல இதுவும் நம் முன்
அடங்கியிருக்கும் ஆற்றல்கள், குணங்கள் ஆகியவற்றை
விளக்குகிறது.

இக்காரணத்தினால் பிரிட்டனிலும் அமெரிக்கா
விலும் மேலும் மேலும் அதிகமான மன வைத்தியர்கள்
ஜாதகங்களைப் பயன்படுத்தி வருகின்றனர்.
நோயாளிகளைப் பல வருஷங்கள் சோதித்து
விசாரித்துத் தகவல்கள் சேகரிப்பதை விட இது
எளிதாக இருக்கிறது.

மற்றவர்களை வைத்து வேலை வாங்கக் கூடிய
நிர்வாக அதிகாரிகளைத் தேர்ந்தெடுப்பதற்காகப்
பெரிய தொழில், வர்த்தக ஸ்தாபனங்களும்
ஜாதகங்களைப் பார்க்கின்றன. துரிதமாகவும் குறைந்த
செலவிலும் தேர்வை நடத்த இது உதவுகிறது.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



சந்திரனின் பிறையைப் பொறுத்து கடல் அலைகளின் எழுச்சி மாறுபடுவதுடன், நத்தைகளின் உணவுப் பழக்கமும் மாறுவதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

பௌர்ணமியில் அறுவைச் சிகிச்சைகள் நடத்தினால் ரத்தப் பெருக்கு அதிகமாகிறது. மேலும் கிரக சஞ்சாரங்கள் ரேடியோ அலைகளைப் பாதிக்கின்றன. அதே போல் மனித வாழ்வையும் கிரகங்கள் பாதிக்கலாமல்லவா!

அரசியல், மற்றும் பொது விவரங்களைக் கவனிப்பதற்கான புதிய சாதனமாகவும் உலக நிகழ்ச்சிகளை அனுமானிக்க அது உதவுகிறது.

பண்டைய விவேகத்தின் வெளியீடாகிய ஜோதிடம், நவீன கம்ப்யூட்டருக்கு ஈடான முக்கிய கண்டுபிடிப்பாகும் என்கிறார் அந்த அம்மையார்.

இருளடைந்து இருக்கும் நமது எதிர்கால வாழ்க்கையில் ஜோதிடம் ஒரு விளக்காக இருக்கிறது. தனி மனிதனின் எதிர் கால வாழ்க்கையில் இன்னதுதான் நடக்குமென்பதைத் திட்டமிட்டுக் கூறுவதிலும், நாடு, மன்னர்கள், அரசாட்சி, போர், புரட்சி, அதிசய நிகழ்ச்சிகள் ஆகியவற்றை நிர்ணயிப்பதிலும் இது முதலிடம் வகிக்கிறது.

இவற்றைக் கற்பனையாகவோ, உண்மைக்குப் புறம்பாகவோ சொல்லாது ஆணித்தரமான கணக்கியல் மூலம் உறுதியாகச் சொல்கிறது.

நமது பரிணாம வளர்ச்சிகளைப் பற்றி எடுத்துரைக்கும் நவீன கோட்பாடுகள் அனைத்தும் நடந்தவற்றைப் பற்றியதாகவே இருக்கிறதே தவிர, எதிர்காலத்தில் நடக்கவிருப்பவற்றிற்கு எவ்வித முறைகளையும் வகுக்கவில்லை.



மேலும் ஆன்மாவைப் பற்றியும் இக்கோட்பாடுகளில் எதுவும் சொல்லப்படவில்லை. கிரகங்கள் மனித வாழ்க்கையைப் பெரிதும் பாதிக்கிறதா என்றால் இல்லையென்று யாராலும் சொல்ல முடியாது.

காலத்தின் சுழற்சியை மையமாகக் கொண்டே ஜோதிடம் என்ற விஞ்ஞானக் கலையின் தத்துவங்கள் ஆக்கப்பட்டிருக்கின்றன.

## 13. பிறந்த ராசியின் பலன்கள்

பிறந்த நேரம், தேதி, மாதம், நட்சத்திரம் ஆகியவற்றிற்கான பலன்களை ஒருவாறு தெரிந்து கொண்டீர்கள். இப்போது ராசியைப் பற்றிப் பார்ப்போம். இந்த நட்சத்திரம் இத்தனையாவது பாதம் என்பதை ஜாதகத்தின் மூலமோ அல்லது பஞ்சாங்கத்தின் மூலமோ தெரிந்து கொண்டு விட்டால், இன்ன ராசி என்று தெரிந்து கொண்டு விடலாம்.

ஜாதகத்தில் சந்திரன் இருக்குமிடம் வீடு -ராசியாகும். நீங்கள் எந்த ராசியில் பிறந்துள்ளீர்களோ அதற்கான பலன்களைத் தெரிந்து கொள்ளுங்கள். ஆனால் இது பொதுப்பலன்.

**மேஷம்:-** இவருக்கு நீரில் பயம் உண்டாகும். எதிரிகளை எளிதில் வென்று விடுவார். சேர்க்கையில் வல்லவர். செல்வத்தைத் தேடுவார். செலவும் செய்து விடுவார். காம இச்சை சற்று அதிகமாக இருக்கும். இவரது தலையில் மரு இருக்கும். எப்பொழுதும் மகிழ்ச்சியுடன் காணப்படுவார். இவரது விழிகள் சற்று உருண்டையாக இருக்கும். எவ்வளவு

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



தூரமானாலும் நடந்து செல்லத் தயாராயிருப்பார்.
இவருக்கு அடிக்கடி முழங்காலில் வலி ஏற்படும்.
எதிலும் சபலம் உள்ளவர். தோள் வலிமை உண்டு.

**ரிஷபம்:-** இவருக்கு வயது மத்திமம்தான். பார்க்க
அழகாக இருப்பார். பெண்களுக்கு இவரை நிரம்பப்
பிடிக்கும். அன்பர்களுக்கு அன்பராகவே நடந்து
கொள்வார். முகத்திலும் மூக்கிலும் மரு இருக்கும்.
இவர் பேச்சில் சிலேடை மிகுந்து இருக்கும். நல்ல
குணம் படைத்தவர். தயையும் உண்டு. ஆரம்பத்தில்
எப்படி இருந்தாலும் பிற்காலத்தில் மகிழ்ச்சியோடு
இருப்பார். புத்திரப் பேறு உண்டு. பசி மிகுந்தவர்.
இவரது முகமும் தொடையும் சற்று பருமனாக
இருக்கும். அவ்வப்பொழுது இருமல் நோய் காணும்.

**மிதுனம்:-** இவருக்குச் சூதாட்டத்தில் பிரியம்
உண்டு. அதனால் குதிரைப் பந்தயத்திற்குப்
போகலாம்! பெண்களின் புகழ்ச்சியில் அசாத்திய
விருப்பம். அதனால் பெண்கள் மகிழும்படி நடந்து
கொள்வார். இவரது மூக்குப் பருத்தும் நீண்டும்
இருக்கும். முகத்தில் மரு உண்டு. அனைவரும்
ரசிக்கும்படி அழகாகப் பேசுவார். அழகாயிருப்பார்.
கண் சிவந்திருக்கும். தேகம் கருண்டிருக்கும்.
சத்தியவந்தர். சுவையான உணவில் அதிக விருப்பம்
உண்டு. உடுப்பதிலும் பட்டாடைப் பிரியர். தூது
செல்பவர்.

**கடகம்:-** இவர் உள்ளத்தில் கள்ளம் உண்டு.
இவரது கழுத்து சற்று பருமனாக இருக்கும். சற்று
குள்ளமாகத் தான் இருப்பார். இவர் சொந்தமாக
வீடு கட்டுவார். அனைவரிடமும் அன்பாகவும்
பிரியமாகவும் நடந்து கொள்வார். செல்வந்தராக
வாழ்வார். இவர் நடத்தையால் பெண்களை எளிதில்



வெற்றி பெறக் கூடியவர். சமயோசிதமான புத்தி
உண்டு. இவர் நடக்கும் பொழுது உடல் சற்று
வளைந்து காணப்படும். நல்ல பலசாலி. இவருக்கு
நல்ல நண்பர்கள் அமைவார்கள்.

**சிம்மம்:-** இவருக்குச் சுவையான உணவில்
நாட்டம் அதிகம். மனதில் ஆழ்ந்த கவலை இருக்கும்.
வலிமை மிகுந்தவர். புத்தியும் உறுதியுடையதாகும்.
இவரது முகம் சற்று படர்ந்திருக்கும். அற்ப
விஷயத்துக்குக் கூட அதிகக் கோபம் கொள்வார்.
பசி, தாகம் பொறுக்கமாட்டார். இவரது நடையில்
கர்வமிருக்கும். இவர் பெண்களுக்குப் பகைவர். காடு,
மலைகளைச் சுற்றித் திரிந்து பார்க்க விரும்புவார்.
இவரைக் கொடியவர் என்றுதான் சொல்லவேண்டும்.
பிறர்பால் நேசம் இருக்காது.

**கன்னி:-** சொன்ன சொல் தவறமாட்டார். கல்வி,
சாஸ்திர ஆராய்ச்சியில் நிபுணர். காம இச்சை அதிகம்
உண்டு. வெட்கத்தோடு முயற்சி செய்வார்.
எப்பொழுதும் சுகமாக இருப்பார். எதையும் வெற்றி
கொள்ளக் கூடிய ஆற்றல் படைத்தவர். பிறரிடம்
இனிமையாகப் பேசுவார். வெளிநாடுகளுக்குச்
சென்று திரும்பக்கூடியவர். இவரைப் பலரும் மதித்து
நடத்துவார்கள். இவரது உடல் சற்று இளைத்துதான்
இருக்கும்.

**துலாம்:-** மாடு கன்றுகளை வாங்கி விற்கக்
கூடிய திறமைசாலி. கல்வியில் வெற்றி காண்பார்.
இவர் குலப் பெண்களை நாடுவார். கல்வியில் மிகுந்த
புலமை உண்டு. பிணி எப்பொழுதாவது வந்து
போகும். செல்வ வசதி மிக்கவர். இவருக்கு ஏதேனும்
அங்கக் குறைவு இருக்கலாம். இவரிடத்தில் மர்மம்
உண்டு. உறவினர்களோடு நல்ல நேசம் காட்ட

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



மாட்டார். இணைந்த உடல் கொண்டவர். அந்தணர்களைப் போற்றி வணங்குவார். சாந்த குணம் உண்டு.

**விருச்சிகம்:-** பட்சி, மிருகங்களை மறைந்திருந்து பிடிப்பார். இவரது மாரபு பரந்து காட்டும். கண்களும் அகன்றிருக்கும். முழங்கால்கள் இரண்டு உருண்டு இருக்கும். பிறருக்குப் பாதகம் விளைவிக்கக் கூடியவர். இள வயதிலேயே தந்தையை இழந்துவிடுவார். பொல்லாத வம்புக்காரர். இவருக்கு அரசாங்க ஆதரவு இருக்கும். சற்று நோயாளியாகத்தான இருப்பார். பயம் உள்ளவர்.

**தனுசு:-** இவரது முதுகு கூன் விழுந்திருக்கும். முகமும் கழுத்தும் சற்று நீண்டிருக்கும். எப்பொழுதும் உற்சாகமுண்டு. செல்வமும் சேரும். கவிஞராகவோ எழுத்தாளராகவோ இருப்பார். சிற்ப சாஸ்திரத்தில் வல்லவர். எதிலும் அதிக ஆசை கொள்வார். இவர் உறவினர்களை ஏசுவார். தோள்கள் திரண்டிருக்கும். பிறர் மனதை எளிதில் புரிந்து கொண்டு விடுவார்.

**மகரம்:-** இவர் ஒரு சிந்தனையாளர். பெண்கள் இவரைப் புகழ்வார்கள். இவருக்குச் சுயமான சம்பாத்தியம் உண்டு. மக்களிடமும் மனைவியிடமும் மிகுந்த பற்றுக் கொண்டவர். சோம்பல் அதிகமிருக்கும். இவரது தோள்கள் சற்று பெருத்து இருக்கும். தகாத வார்த்தைகளைச் சாதாரணமாகப் பேசுவார். செல்வத்தைச் செலவிட மிகவும் அஞ்சுவார். இவரிடத்தில் கருணை அதிகம் இராது. புராண இதிஹாசங்களை நன்கு அறிந்தவர். இங்கிதம் அறிந்தவர்.



**கும்பம்:-** இவர் நறுமணப் பிரியர். இவரது முதுகு அகன்று இருக்கும். உடல் அமைப்பு நீளமாயிருக்கும். கால் தொடை சற்று பருமனாகத் தோன்றும். இவரது இடுப்பில் மரு இருக்கும். எவ்வளவு தூரமாயினும் நடந்து செல்லவே பிரியப்படுவார். பிறர் மனைவி மக்களிடம் ஆசை வைப்பார். சில காரியங்களை உண்டாக்குவார். சிலவற்றை அழிப்பார். இவரது நரம்புகள் புடைத்திருக்கும். இவரது கழுத்து சற்று நீளமாக இருக்கும்.

**மீனம்:** உலகப் பற்று இவருக்கு அதிகம் உண்டு. அழகாயிருப்பார். மீன் வகையறாக்களைத் தேர்ந்தெடுத்துச் சாப்பிடுவார். மனைவியின்பால் மிக்க நேசம் உள்ளவர். பிற பெண்களிடமும் இவரது இச்சை செல்லும். போக போக்கியப் பொருள்களிலும் வீடு வாசல்களிடத்தும் மிகுந்த பிரியம் உள்ளவர். இவரைப் பிறர் விரும்புவார்கள்.

பிறந்த ராசிகளுக்குப் பலன் இருப்பது போலவே, பிறந்த லக்னத்திற்கும் பலன் உண்டு. ஜாதகத்தில் ஒரு கட்டத்தில் ல என்று போட்டிருப்பர். அது எந்த இடமோ அதுவே லக்னமாகும். பன்னிரண்டு லக்னங்கள் உண்டு.

**மேஷ லக்னத்தில் பிறந்தவர்:-** இவர் குறைவாக உண்பார். ஆறு, குளங்களைக் கண்டு அஞ்சுவார். சகோதரர்களிடம் ஒற்றுமையாக இருக்க மாட்டார். சுபக்கிரக பார்வை இருந்தால் இவருக்கு ஆயுள் நீண்டிருக்கும். இன்றேல் மத்திம ஆயுள்தான். இவருக்கு இள வயதிலும் 20,28 வயதுகளிலும் சில நோய்களும் கண்டங்களும் உண்டு. இவரது கண் சிவந்து உருண்டையாக இருக்கும். இவர் நிறம் சிவப்பு. முழங்கால் வலிமை கிடையாது. தலையில்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



[illegible] கண்டிருக்கும். இவருக்கு [illegible] செல்வம் இருக்காது. இவர் பெண்களுக்கு அடங்கிப் போவார். எந்தக் காரியத்திலும் உறுதி இராது. சமய புத்தி உள்ளவர்.

**ரிஷப லக்னம்:-** சுபக்கிரகப் பார்வை இருந்தால் இவர் 82 வயது வரை வாழ்வார். இளம் வயதில் இவருக்கு அடிக்கடி சுரம், கண்டமாலை, அக்கினி முதலியவற்றால் கண்டம் ஏற்படலாம். முகம் பரந்து காட்டும். மார்பும் அகன்று இருக்கும். சற்று சதைப் பிடித்துள்ள உடல். இவருடைய உறவினர்கள் இவரை வெறுப்பார்கள். மனைவியும் அப்படியே. நிறையச் சாப்பிடுவார். நடு வயதில் நல்ல சுகபோகம் கிட்டும். பிறர் பொருளின் மீது ஒரு கண் வைப்பார். அதை அபகரிக்கவும் பார்ப்பார். பொறுமை உண்டு. நண்பர்களும் நிறைய இருப்பார்கள். பெண்கள் இவரை விரும்புவார்கள். மேனி இலேசாக வெளுத்திருக்கும்.

**மிதுன லக்னம்:-** இவருக்கு சுபக்கிரக பார்வை இருந்தால் 85 வயது வாழ்வார். இவருக்கு இள வயதில் ஆயுத பயம், சத்ரு பயம், பிணி அபாயம் எல்லாம் உண்டு. வாத நோய் வரும். தன் காரியம் நிறைவேற பிறரிடம் நெருங்கிப் பழகுவார். காம இச்சை அதிகம் என்றாலும், பெண்மையற்ற பெண்களையே தேடிச்செல்வார். சிவந்த கண்கள். சுருண்ட கேசம். இங்கிதம், நகை, பரிகாசம் யாவும் அறிந்தவர். பேச்சில் இனிமை உண்டு. அழகாகவும் இருப்பார். புலமை மிக்கவர். புத்திசாலி. அனைவரும் இவருக்கு நன்கு மதிப்புக் கொடுப்பார்கள்.



**கடக லக்னம்:-** சனிக்கிரகப் பார்வை இருந்தால் இவர் 80 வயதுவரை வாழலாம். இன்றேல் அகால மரணம் நிகழக்கூடும். சோதிடப்புலமை உண்டு. இயற்கைக் காட்சிகளை மிகவும் ரசிப்பார். நடையில் வேகம் உண்டு. செல்வம் உண்டு என்றாலும் சிறிது சிறிதாகக் குறைந்து கொண்டே போகும். பெண்கள் பேச்சுக்கு அடங்கி நடப்பார். நல்ல நண்பர்கள் உண்டு. அன்புக்கு இணங்கி விடுவார். உடல் சற்று கொழுகொழு என்று இருக்கும். பின் பகுதி சற்று பருமனாகக் காட்டும். எவரிடத்திலும் மிகவும் சாதுர்யமாகப் பேசிக் காரியத்தை முடித்துக் கொள்வார்.

**சிம்ம லக்னம்:-** சுபக்கிரகப் பார்வை இருந்தால் 80 வயது வரை வாழ்வார். இள வயதில் பெரிய நோய்கள் கண்டு குணமாகும். படர்ந்த முகம். கருமை நிறக் கண்கள். நிறம் சற்று வெளுப்பாயிருக்கும். இவருக்கு வயிற்றுக் கோளாறு உண்டு. தியாக சீலர். தாயிடம் மிகுந்த பக்தி உள்ளவர். பெண்களுக்குப் பகைவர். காரணமின்றி கோபம் கொள்ளக் கூடியவர். சற்று கர்வம் உண்டு. இயற்கைக் காட்சிகளை மிகவும் ரசிப்பார். பராக்கிரமசாலி. புலால் உணவில் மிகவும் விருப்பம் கொள்பவர்.

**கன்னி லக்னம்:-** சுபர் பார்வை இருந்தால் 77 வயதுவரை வாழ்வார். இள வயதில் இவருக்கு அம்மை நோயும் சுரமும், நெருப்புக்காயமும் ஏற்படும். மிகவும் ஆசாரக்காரர். உடல் அமைப்பு சற்று மென்மையாயிருக்கும். மற்றவர்கள் சொத்தை அனுபவிப்பார். பேச்சில் இனிமை உண்டு. தரும குணமும் உண்டு. வெளிநாட்டில் வசிக்கக் கூடியவர். புத்தகப் பிரியர். மற்றும் இசை, நாட்டியம்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



முதலியவற்றையும் மிகவும் ரசிப்பார். சுக போக ஆசை உள்ளவர். புத்தி சாதுர்யம் உண்டு. இவரது வாழ்க்கை சுகமாகவே அமையும்.

**துலா லக்னம்:-** சுபர் பார்வையிருந்தால் 85 வயது உண்டு. இன்றேல் சிறு வயதில் கண்டம் ஏற்படும். சுத்தமாயிருப்பார். ஆனால் உடல் வலிமை இருக்காது. இரண்டு மனைவிகளுக்கு வாய்ப்புண்டு. நண்பர்களுக்கு - உறவினர்களுக்கு மிகவும் உதவியாக இருப்பார். இளவயதிலேயே மகான்களைக் கண்டு அளவளாவும் யோகம் உண்டு. ஆசார சீலர்களையும் பெரியவர்களையும் போற்றி வணங்குவார். இவர் எப்பொழுதும் பெண்களால் சூழப்பட்டிருப்பார். பிறர் பொருளை விரும்பமாட்டார்.

**விருச்சிக லக்னம்:-** சுபர் பார்வை இருந்தால் 80 வயது. இன்றேல் இள வயதில் சுரம், ஜன்னி, வாதசுரம் நெருப்பு ஆகியவற்றால் கண்டம் உண்டாகலாம். இரகசியமாக தகாத காரியங்களில் ஈடுபடுவார். தாயார் இவரை மதிக்க மாட்டார். உறவினர்களும் அப்படியே. இவருக்கு விஷமம் செய்யும் சுபாவம் உண்டு. எடுத்த காரியத்தை எப்படியும் முடித்து விடுவார். கண்கள், மார்பு, தொடை பருமனாக அமைந்திருக்கும். பொன்னிறமுள்ளவர். பறவைகளைப் போல சுகம் உள்ளவர். நீண்ட காலம் வாழ்வதாயிருந்தாலும் அவ்வப்பொழுது பிணிகள் வரும்.

**தனுசு லக்னம்:-** சுபர் பார்வையிருந்தால் 77 வயது உண்டு. இன்றேல் இள வயதில் இவருக்குக் கண்டம் ஏற்படும். இவர் கவி பாடும் ஆற்றல் படைத்தவர். கழுத்தும் முகமும் சற்று நீண்டிருக்கும்.



பேச்சில் சாமர்த்தியமிருக்கும். மத்திய வயதில் வறுமை ஏற்படலாம். உறவினர்களை வெறுப்பார். சிற்பங்கள் சித்திரங்கள் தயாரிப்பவர். வீரமுண்டு. காதுகள், பற்கள், நாக்கு சற்று பருமனாக இருக்கும். ஆனால் தோள்கள் குறுகலாக இருக்கும். தோற்றத்தில் கம்பீரம் இருக்கும். இவருக்குப் பூர்வீக செல்வம் உண்டு. மோகத்தில் அதிக ஆசை வைப்பவர். விரோதிகளை எளிதில் வெற்றி பெற்று விடுவார்.

**மகர லக்னம்:-** சுபர் பார்வை இருந்தால் 67 வயது உண்டு. இன்றேல் பாம்புக் கடி முதலியவற்றால் கண்டம் ஏற்படும். இளம் வயதில் பிணிகள் ஏற்படலாம். அந்நிய நாட்டுப் பயணம் உண்டு. மனைவி மக்களை மிகவும் நேசிப்பவர். தரும காரியங்களில் ஈடுபடக் கூடியவர். சற்று டாம்பீக வாழ்க்கைக்குப் பிரியப்படுவார். இடுப்பில் பலமிருக்காது. இவர் நறுமணப் பிரியர். கவர்ச்சியான கண்கள் உண்டு. ஒரே சிந்தனை உள்ளவர். அனைவரிடத்திலும் அன்பாக நடந்து கொள்வார். ஆனால் காரியங்களில் சிரத்தை காட்ட மாட்டார்.

**கும்ப லக்னம்:-** சுபர் பார்வை இருந்தால் 80 வயது உண்டு. இன்றேல் இள வயதில் கண்டம் ஏற்படும் வாய்ப்பு உண்டு. பிறர் செல்வத்தையும், பிற பெண்களையும் அடையத் திட்டமிடுவார். தற்புகழ்ச்சி உண்டு. பிறரை நிந்தித்துப் பேசுவார். உயரமாக இருப்பார். கழுத்து நீண்டிருக்கும். இவரது வாழ்வில் வெற்றியும் தோல்வியும் மாறி மாறி வரும். பித்த சரீரம் படைத்தவர். பாதங்கள் நீண்டிருக்கும். வெகு தூரமானாலும் நடந்து செல்வார். உடலின் பின்பகுதி, தொடைகள் பருத்திருக்கும். நறுமணப் பிரியர். நண்பர்களிடத்தில் மிக்க அன்பு காட்டுவார்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



மீன லக்னம்: சுபர் பார்வை இருந்தால் 95 வயது உண்டு. இன்றேல் இளவயதில் கண்டம் உண்டு. முர்க்கக்குணம் உண்டு. எதுவானாலும் சாப்பிட்டு விடுவார். அழகாயிருப்பார். நன்றாக உடுத்துவார். பகைவர்களை எளிதில் வென்றுவிடுவார். புலமை மிக்கவர். இவரைப் பெண்கள் அதிகமாக விரும்பு வார்கள். நீண்ட மூக்கு உண்டு. கருமை நிறம்தான். கண்களில் அழகுண்டு. தன் காரியத்தை எப்படியும் சாதித்துக் கொள்வார். இவருக்குச் செல்வம் சேரும். கடலில் உற்பத்தியாகும் பொருள்களை விற்பனை செய்வதில் ஈடுபடுவார். மனைவியிடம் அன்பாக நடந்து கொள்வார்.

ராசி பலன்களும் லக்ன பலன்களும் வேறுபடும். சிலருக்கு ராசியும் லக்னமும் ஒன்றாகவே இருப்பதுண்டு. அவர்களுக்கு இவ்விரண்டு பலன் களும் இணைந்தாற் போலும் நடக்கும்.

ஒரு கருத்தைப் பற்றிய பல்வேறு தகவல்களையும் ஆராய்ந்து அந்தத் தகவல்களைப் பொதுமைப்படுத்தி சில விதிகளைச் சோதனைகளுக்கு உட்படுத்தி எந்த நிலையிலும் அந்தக் கருத்து மாறாது இருப்பது கண்டு அதை ஏற்றுக் கொள்வது அறிவியல்.

ஒரு அறிவியல் கருத்து அதன் அடிப்படையாக உள்ள வேறு கருத்துகளை விளக்குவதாகும்.

அறிவு பூர்வமாகச் சிந்திப்பவர்கள் அனைவரும் இதை ஒரு படிப்பினையாக எடுத்துக் கொள்ள வேண்டும். ஒரு கூற்றுக்கு விளக்கம் காண முயற்சிக்கு முன்னர் அது உண்மையானதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.



ஜோதிடத்தைப் பொறுத்தவரை, ஆன்றோர் வாக்கே சான்றாக இருந்தாலும், கணிதம் பேசுகிறதே! இது கணித அடிப்படையில் ஏற்பட்டுள்ளதால்தான் இப்போதுள்ள விஞ்ஞானிகள் இதைப் புறக்கணிக்க முடியாமல் இருக்கிறார்கள்.

இப்பொழுது பல கல்லூரிகளில்கூட ஜோதிடத் தைப் பாடமாக வைக்கத் தொடங்கிவிட்டார்கள். வைத்துள்ளார்கள். எதிலும் புகுந்து பார்க்க வேண்டும். அப்பொழுதுதான் உண்மை தெரியவரும்.

## 14. தசா பலன்கள்

ஒவ்வொரு கிரகத்துக்கும் ஒரு தசை உண்டு. பிறக்கும் பொழுது இந்த தசையில் இவ்வளவு இருப்பு என்று காட்டியிருப்பார்கள். அதிலிருந்து தசைகளைக் கணக்கிட்டு பலன்களை அறியவேண்டும்.

ஒவ்வொரு தசைக்கு இத்தனை ஆண்டுகள் உண்டு என்றும் கணக்கிட்டுள்ளார்கள். சூரிய தசை, சந்திர தசை என்று ஒரு ஒழுங்கு உண்டு. அதன்படிதான் கணக்கிட வேண்டும்.

ஒவ்வொரு தசைக்கும் ஒன்பது புத்திகள் உள்ளன. அதன்படி பலன்கள் நடைபெறும்.

இந்த தசா புத்தி பலன்களுடன் பிறக்கும் பொழுது எந்தெந்த ராசி எந்த வீட்டில் உள்ளது என்பதை அதற்கான பலன்களோடு சேர்த்துப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இங்கு பொதுப் பலன்களே சொல்லப்பட்டுள்ளன.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



## சூரிய தசை 6 ஆண்டுகள்

அலைச்சல், திரிச்சல், பிணிகள், பிதுர் கண்டம், பகைவர்களால் துன்பம், மரண பயம், அபாயங்கள் நஷ்டம், மனதில் பயம், அக்கினியால் நஷ்டம் போன்ற பல துன்பங்கள் நேரலாம். இருந்தாலும் சூரியன் - ஜாதகத்தில் - சுபர் வீட்டிலிருந்து, சுபர் தொடர்பு உண்டானால், அனைத்தும் நீங்கிவிடும். நல்ல பலன்களைப் பெறலாம்.

**சூரிய புத்தி:-** உடல் உஷ்ணம், பலவிதப் பிணிகள் உண்டாகி உடல் இளைக்கும். வியாபாரத்தில் நஷ்டம் ஏற்படும். கண் நோய் வரும். உத்தியோகத்தில் கஷ்டம் ஏறபடும். ஆனால் சுபர் வீட்டிலிருந்து சுபர் பார்வை உண்டானால் அனைத்தும் மாறி நல்ல பலன்கள் ஏற்படும்.

**சந்திர புத்தி:-** வறுமை ஒழிந்து செல்வம் பெருகும். தனதான்ய சம்பத்து ஏறபடும். புகழ் உண்டாகும். உறவினா வருகை உண்டு. பூமியால் லாபம். உற்சாகம் ஏற்படும்.

**செவ்வாய் புத்தி:-** பலரும் பாராட்டுவார்கள். மேன்மையான புகழ் உண்டாகும். சுபக்கிரகத்தின் பார்வை இருந்தால் உத்தியோகத்தில் சிறப்பு. வியாபாரத்தில் லாபம், சகல சம்பத்துகளும் ஏற்படும்.

**ராகு புத்தி:-** துன்பம் மிகவே செய்யும். உத்தியோகத்தில் சங்கடம் ஏற்படும். ஆனால் புதன், குரு, சுக்கிரன் பார்வை உண்டானால் கஷ்டமெல்லாம் பறந்தோடி விடும்.

**குரு புத்தி:-** பலவித நன்மைகள் ஏற்படும். தன தான்ய சம்பத்துகள் உண்டாகும். கௌரவமும் பெருமையும் அமைந்த வாழ்க்கை உண்டாகும்.



**சனி புத்தி:-** உற்றார் உறவினர் பகைவர்களாகி விடுவர். அலைச்சலும், துன்பமும் ஏற்படும். வறுமை தாண்டவமாடும். ஆனால் குரு பார்வை இருந்தால் அத்தனையும் மாறிப் போய் நன்மைகள் ஏற்படும்.

**புதன் புத்தி:-** எப்பொழுதும் சுபகிரகங்களான குரு, சுக்கிரன், வளர்பிறைச் சந்திரன் பார்வை இருந்தால் பொறுமை, சாந்தம், இரக்கம் இவற்றுடன் சுகமாக வாழ்வார்கள் தான். அப்படியில்லாவிட்டால் துன்பம் மிகும். பிணி ஏற்படும், வழக்கு வம்புகள் ஏற்பட்டு மனக்கவலை மிகும்.

**கேது புத்தி:-** அவ்வளவு சுகமில்லை. துன்பமும் கஷ்டமும் ஏற்படும். இருப்பிடம் மாற வேண்டியிருக்கும். அலைச்சல் திரிச்சல் அதிகம் இருக்கும். பொருள் இழப்பும் ஏற்படும். கேதுப் பிரீதிச் செய்ய வேண்டும்.

**சுக்கிர புத்தி:-** பிணிகள் மிகும். உறவினர்கள் பழி சுமத்துவார்கள். பரிகாசிப்பார்கள். அதனால் கவலைதான் மிஞ்சும். ஆனால் குரு, புதன், வளர்பிறைச சந்திரன் பார்வை இருக்குமானால், துன்பங்கள் விலகி, பொருள் தேடி சுகமாக வாழ்வார்கள்.

## சந்திர தசை 10 வருடம்

சுகமாக வாழ்வார்கள். சந்திரன் நல்ல இடத்தில் இருந்து குரு, புதன் பார்வை இருந்தால் இன்னும் விசேஷம். உத்தியோகத்தால் பெருமையும் புகழும் கிட்டும். சுகபோகப் பாக்கியம் சேரும். மனைவி மக்களோடு இன்பமான வாழ்க்கை அமையும்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



**சந்திர புத்தி:-** பலரும் புகழ்வார்கள். மனமகிழ்ச்சியும் உற்சாகமும் அதிகரிக்கும். உத்தியோக உயர்வு, வியாபாரத்தில் லாபம் எல்லாம் ஏற்படும். பொருள் சேரும்.

**செவ்வாய் புத்தி:-** பிணிகள் பெருகும். பகைவர்களால் கொடுமை ஏற்படும். வறுமை ஏற்படும். ஆனால் குரு, புதன் பார்வை உண்டானால் பெருகி பொருள் சேரும். உத்தியோக வியாபாரம் உயர்வும் கிட்டும்.

**ராகு புத்தி:-** குடும்பத்தில கலகம் ஏற்படும். வறுமையால் வாட வேண்டியிருக்கும். ஆனால சுக்கிரன், புதன், குரு பார்வை பட்டால் அனைத்தும் சூரியனைக் கண்ட பனி போல் விலகி நல்ல வாழ்க்கை அமையும்.

**குரு புத்தி:-** பலரிடமிருந்தும் நல்ல உதவி கிடைக்கும். உத்தியோகத்தாலும், வியாபாரத்தாலும் செல்வம் சேரும். உறவினர்கள் மிகுந்த ஆதரவாயிருப்பார்கள். நல்ல வாழ்க்கை அமையும்.

**சனி புத்தி:-** வாழ்க்கையில் விரக்தி ஏற்படும். பிணிகளும் பெருகும். மரணகண்டத்துக்கு ஒப்பான காலம். ஆனால் சுக்கிரன், புதன், குரு பார்வையினால் வருமானம் பெருகி சுபிட்சமான வாழ்க்கை அமையும்.

**புதன் புத்தி:-** லட்சுமி கடாட்சம் ஏற்பட்டு செல்வம் குவியும். பொன் வெள்ளி சேகரிக்கும் காலம். அனைவரும் புகழும்படியான வாழ்க்கை அமையும். மக்களுடைய வாழ்த்தும் கிட்டும்.

**கேது புத்தி:-** கடன் தொந்தரவு ஏற்படும். பிணிகளும் பெருகும். வாழ்க்கையே தொல்லையாகத் தோன்றும். ஆனால் கடைசியில் அத்தனை



துன்பங்களும் சிறிது சிறிதாக விலகி உடல் நலமும், வியாபாரத்தில் லாபமும் ஏற்படும்.

**சுக்கிர புத்தி:-** உத்தியோக உயர்வு உண்டு. வியாபாரத்திலும் செல்வம் குவியும். அனைவரும் புகழ்ந்து போற்றும்படியான வாழ்க்கை அமையும். பெருமை ஏற்படும்.

**சூரிய புத்தி:-** சற்று துன்பம்தான். பகைவர்கள் கை ஓங்கியிருக்கும். வறுமை தலை காட்டும். நோயும் வந்து தொல்லை கொடுக்கும். ஆனால் புதன் பார்வை உண்டானால் தனலாபம் ஏற்பட்டு சுகமாக வாழ்வார்கள்.

### செவ்வாய் தசை 7 ஆண்டுகள்

பிணிகள் பெருகும். பலருடைய பகையும் உண்டாகும். கவலையுடன் திகிலும் உண்டு. ஆனால் செவ்வாய் கேந்திர ஸ்தானம் பெற்று நட்பு, ஆட்சி, உச்சம் பெற்றிருந்தால் சகல பாக்கியங்கள் உண்டாவதுடன் மன தைரியமும் உண்டாகும்.

**செவ்வாய் புத்தி:** குடும்பத்தில் கலகம், பலவித துன்பம், பொருள் இழப்பு, தியினால் சேதம் ஆகியவை ஏற்படும். ஆனால் செவ்வாய் கேந்திரம் பெற்று எங்கேனும் இருந்து குரு, சுக்கிரன், புதன் பார்வை பெற்றால், உத்தியோக உயர்வு, வியாபார விருத்தி ஆகியவை ஏற்படும்.

**ராகு புத்தி:-** இதுவும் துன்பத்தைதான் கொடுக்கும். திருடர் பயம் உண்டு. மாந்திரீகர் துன்பம் விளைவிப்பார். ஆனால் குரு, சுக்கிரன், புதன் பார்வை இருந்தால் அனைத்து துன்பங்களும் பறந்தோடி சுகமான வாழ்க்கை அமையும்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



குரு புத்தி:- பலவித சம்பத்தோடு சுகமாக வாழ்வார்கள். நல்ல புத்தியோடு ஞாபக சக்தியும் கல்விச் சிறப்பும் ஏற்படும். இசை ஞானம் மொழி ஆராய்ச்சி அமையும். பூமி லாபம் பெற்று சுகமாக வாழ்வார்கள்.

சனி புத்தி:- துன்பம் பெருகி பொருள் இழப்பும் ஏற்படும். பிணி பெருகும். பகைவர்கள் கொடுமை இருக்கும். துன்பம் தாளாமல் அங்குமிங்குமாக அலையும் நிலை ஏற்படும். ஆனால் குரு, சுக்கிரன், புதன் பார்வை இருந்தால் அத்தனையும் மாறி சுகம் உண்டாகும். பூமி லாபமும் ஏற்படும்.

புதன் புத்தி:- சுறுசுறுப்பு மிகும். செல்வம் சேர்ந்து சீமான் ஆவார். பொன் பொருள் சேர்ந்து புகழ் மிக்கவராவார். உற்றார் உறவினர் உதவி பெருகும். மனைவி மக்களும் அன்பாய் இருப்பார்கள்.

கேது புத்தி:- பிணி பெருகும். தொழிலில் நஷ்டம் ஏற்பட்டு திக்பிரமை அடைவார்கள். ஆனால் குரு, சுக்கிரன் பார்வை இருந்தால் புத்தியும் ஞானமும் சிறப்பாகி மனைவி மக்களோடு உல்லாசமாய் வாழ்வார்கள்.

சுக்கிர புத்தி:- பிணிகள் பெருகி துன்பம் அடைவார்கள். திருடர் பகைவர் பயம் உண்டு. விதவையின் சேர்க்கை ஏற்படும். அதனால் துயரம் தான் மிஞ்சும். ஆனால் குரு, புதன் பார்வையிருந்தால் துன்பம் குறைந்து நன்மை பெருகும்.

சூரிய புத்தி:- உற்சாகம் மிகும். தன தானிய சம்பத்து உண்டு. உற்றார் உறவினர் உதவி இருக்கும். பொன் பொருள் பூமியோடு சுகமாக வாழ்வார்கள்.



சந்திர புத்தி:- கல்விச் சிறப்பு உண்டு. பொன் பொருள் சேர்க்கையும் இருக்கும். பிறர் புகழ்ச்சி கிடைக்கும். திருமண வைபவம் ஏற்படும். மனைவி மக்களுடன் பிரபுவைப் போல் வாழ்வார்கள்.

## ராகு தசை 18 ஆண்டுகள்

மனவருத்தம், கவலை எல்லாம் ஏற்படும். உற்றார் உறவினர்கள் கூட வெறுப்பார்கள். எவரும் பொல்லாதவன் என்று இகழ்வார்கள். பொருள் இழப்பு ஏற்பட்டு வறுமையும் உண்டாகலாம். ஆனால் புதன், குரு, சுக்கிரன் பார்வை இருந்தால் எல்லா கஷ்டமும் நீங்கி சுகம் ஏற்படும்.

ராகு புத்தி:- பிணியால் உடல் மெலிவு ஏற்படும். அன்புள்ளவர்கள் கூட பகைமை பாராட்டுவார்கள். கவலையும் வறுமையும் ஏற்படலாம். ஆனால் குரு, சுக்கிரன், புதன் பார்வை இருந்தால் எல்லா துன்பங்களும் நீங்கப் பெற்று நன்மை அடைவார்கள்.

குரு புத்தி:- உறவினர்கள் பகையாவார்கள். பலவித துன்பமும் துயரமும் ஏற்படும். வறுமையும் உண்டு. ஆனால் புதன், சுக்கிரன், சந்திரன் பார்வை இருந்தால் எவ்வித துன்பமும் நேரிடாமல் சுகமாக வாழ்வார்கள்.

சனி புத்தி:- மனதில் சலனம் ஏற்பட்டு அலைச்சல் திரிச்சல் அதிகமாயிருக்கும். உடைக்கும் உணவுக்குமே திண்டாட்டம் ஏற்படும். ஆனால் குரு, சுக்கிரன், புதன் பார்வை இருந்தால் உற்சாகம் அதிகரித்து உத்தியோக மேன்மை ஏற்படும்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



**புதன் புத்தி:-** உற்றார் உறவினர் புகழ்ந்து பேசுவர். கல்வி வளர்ச்சி உண்டு. உத்தியோக மேன்மையும் உண்டு. வியாபாரத்தில் லாபம் வரும். பூமி சேர்க்கை இருக்கும். அழகான பெண்களுடன் ஆனந்த வாழ்க்கை ஏற்படும். சுகமாக வாழ்வார்கள்.

**கேது புத்தி:-** தீ விபத்தால் சேதம் ஏற்படும். அரசாங்க விரோதம் உண்டு. பிணிகள் பெருகும். ஆனால் குரு, சுக்கிரன், புதன் இவர்கள் பார்வை உண்டாகுமானால், பலவித சாமர்த்தியத்தால் வருமானம் உண்டாகும். பொன் பொருள் சேர்க்கையும் ஏற்படும். பிரபு என்று புகழும்படியான நிலை ஏற்படும்.

**சுக்கிர புத்தி:-** கல்வி அபிவிருத்தி உண்டு. பல விதத்திலும் புகழ் பரவும். சுகமான வாழ்க்கை அமையும். மனதில் உற்சாகம் இருக்கும். உத்தியோகச் சிறப்பு, வியாபாரத்தில் லாபம் ஆகியவை ஏற்படும். பெண் தொடர்பு ஏற்பட்டு சுகபோக வாழ்க்கை அமையும்.

**சூரியபுத்தி:-** பகைவரால் பயம், அரசாங்கத்தால் அச்சம், சண்டை சச்சரவுகள், துன்பங்கள், வம்பு வழக்குகள் எல்லாம் உண்டாகும். எப்பொழுதும் மனச் சஞ்சலம் இருக்கும். பிணியும் பெருகும்.

**சந்திர புத்தி:-** புதன், சுக்கிரன், குரு பார்வை உண்டானால் எல்லா நன்மைகளும் ஏற்படும். செல்வந்தர்கள் கவலையற்று வாழ்வார்கள். அப்படி இல்லாவிட்டால் துன்பம்தான் மிஞ்சும்.

**செவ்வாய் புத்தி:-** அலைச்சல் திரிசல், பெண்களினால் பகை, மன விகாரம் ஏற்படும்.



ஆனால் குரு, சுக்கிரன், புதன், வளர்பிறைச் சந்திரன் ஆகிய கிரகங்கள் தசா நாதனாகிய ராகுவையும், புத்தி நாதனாகிய செவ்வாயையும் பார்த்தால் உற்சாகமும் தைரியமும் உத்தியோக, வியாபார மேன்மையும் உண்டாகும். சகல சம்பத்தும் பெறுவார்.

**குரு தசை 16 ஆண்டுகள்**

தசா நாதனாகிய குரு-தனுசு அல்லது மீனத்தில் ஆட்சியாயிருந்தாலும், கோண திரிகோண ஸ்தானத்தில் இருந்தாலும் கல்வி வளர்சசி ஏற்படும். உத்தியோக மேன்மை உண்டு. வியாபாரத்தில் லாபமும் ஏற்படும். செல்வந்தர் என பிறர் புகழ்வார்கள். மனைவி மக்களுடன் சுகமான வாழ்வு அமையும்.

**குரு புத்தி:-** குரு, கோண திரிகோண அதிபதியாய் உச்ச ஆட்சி ஸ்தானத்தில் இருந்தால் கல்விச் சிறப்பு உத்தியோக மேன்மை வியாபார லாபம் எல்லாம் ஏற்படும். ஆனால் குரு, ஆறு, எட்டு, பன்னிரண்டாம் இடத்தில் இருந்தாலும் அந்த ஸ்தான ஆதிபத்யம் பெற்றிருந்தாலும், பகை நீச ஸ்தானத்தில் இருந்தாலும், பலவித கஷ்ட நஷ்டங்கள் ஏற்படவே செய்யும்.

**சனி புத்தி:-** துன்பம் தொடரும். கையில் பொருள் இல்லாமல் கஷ்டமும், பிணியும் உண்டு. ஆனால் புதன், சுக்கிரன், வளர்பிறைச் சந்திரன் பார்வையினால் எவ்வித கஷ்டமும் உண்டாகாமல் சுகத்தோடு பொருள் சேகரித்து இன்பமாக வாழ்வார்கள்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



புதன் புத்தி:- புகழ், திரவிய லாபம் எல்லாம் உண்டு. உத்தியோகத் திறம் ஏற்படும். வியாபாரத்தில் லாபம் வரும். செல்வம் சேரும். தனதான்ய சம்பத்தும் உண்டாகும்.

கேது புத்தி:- துஷ்டர்களால் துன்புற நேரிடும். மனைவிக்குத் துன்பமும் மரணமும் ஏற்படலாம். ஆனால் சுக்கிரன் புதன் பார்வை பட்டால் அனைத்து நன்மையும் உண்டாகும். பொருள் பூமி லாபமும் ஏற்படும்.

சுக்கிர புத்தி:- பொருள் இழப்பு ஏற்படும். பிணிகள் பெருகும். உறவினர் நண்பர் பகையாவார்கள். மனைவி மக்களைப் பிரிய நேரிடும். ஆனால் புதன் பார்வையினால் சுகமான வாழ்வு ஏற்படும்.

சூரிய புத்தி:- உறவுக்குப் பஞ்சம் இராது. தெய்வ பக்தி மிகும். நற்குண நற்செய்கையுடன் இருப்பார்கள். ஆனால் உறவினர் நண்பர் பகை ஏற்படும். கலகம் செய்வார்கள். பிணியும் ஏற்படலாம்.

சந்திர புத்தி:- கௌரவமாகவும் பெருமையாகவும் வாழ்வார்கள். உத்தியோகச் சிறப்பு, வியாபாரத்தில் லாபம் யாவும் ஏற்படும். செல்வந்தர்கள் ஆதரவு இருக்கும். நினைத்த காரியம் நிறைவேறும். உற்றார் உறவினர் பாராட்டும் கிடைக்கும்.

செவ்வாய் புத்தி:- பிணிகள் பெருகும். அதிகமாக சம்பாதித்து விலை மாதர்களிடம் விட்டு விடுவார்கள். ஆனால் செவ்வாய் ஆட்சி உச்சமாகி கேந்திரத்தில் இருந்தால் செல்வந்தராக வாழ்வார்கள்.



ராகு புத்தி:- திருடர் பயம் உண்டு. அக்கினி பயமும் உண்டு. கடன் கொடுத்தோர் பகையாவார்கள். வம்பு வழக்கும் உண்டாகும். அனைவரும் நிந்திக்கும் நிலை ஏற்படும். ஆனால் சுபகிரகங்கள் பார்வை பெற்றிருந்தால் அனைத்தும் மேன்மையுறும். லாபம் உண்டாகும். மனைவி மக்களுடன் சுகமாக வாழ்வார்கள்.

**சனி தசை 19 ஆண்டுகள்**

சனி, பகை நீச ஸ்தானத்தில் இருந்தால் சஞ்சலம், நோய், வறுமை எல்லாம் உண்டாகும். பிறரிடம் யாசித்து வயிறு கழுவ வேண்டிய நிலை ஏற்படலாம். ஆனால் கேந்திரத்தில் இருந்து ஆட்சி உச்சம் பெறும் சுபக்கிரகங்கள் - பார்வையும் - ஏற்பட்டு - லட்சுமி கடாட்சம் பெருகும். சுகமான வாழ்வு மலரும்.

சனி புத்தி:- பிணிகள் பெருகும். உறவினர் நண்பர் பகை. அலைச்சல் திரிச்சல், வறுமை ஏற்படும். ஆனால் சுபக் கிரகங்கள் பார்வை இருந்தால் துன்பங்கள் விலகி சுகம் ஏற்படும்.

புதன் புத்தி:- பொன், பொருள், பூமி சேர்க்கை ஏற்பட்டு மேன்மையான வாழ்வு அமையும். மொழிப்புலமை ஏற்படும். இசைக் கலைஞராகி லட்சுமி கடாட்சம் வீசும்.

கேது புத்தி:- கஷ்டம் நஷ்டம் எல்லாம் உண்டு. பேய் பிசாசுகள் தொந்தரவு ஏற்படும். மனைவியே பகையாவாள். வறுமையும் சஞ்சலமும் உண்டாகும். ஆனால் குரு, புதன், சுக்கிரன் பார்வை இருக்குமானால் தனதானிய சம்பத்துடன் மேன்மையான வாழ்வு ஏற்படும்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



சுக்கிர புத்தி:- கல்வி வளர்ச்சி உண்டு. பொன்
பொருள் பூமியுடன் உறவினர் நண்பர்கள் புகழ
செல்வந்தரைப் போல் வாழ்வார்கள். புகழ்ச்சியும்
கௌரவமும் ஏற்படும். உத்தியோக மேன்மை
வியாபார லாபம் உண்டாகும்.

சூரிய புத்தி:- துன்பமும் கவலையும் தொடரும்.
தந்தையையும் மனைவி மக்களையும் பிரிந்து
துயரப்படுவார்கள். பலவித கஷ்ட நஷ்டங்களும்
ஏற்படும். ஆனால் குரு, சுக்கிரன், புதன் பார்வை
பெற்றால் எல்லா கஷ்டங்களும் நிவர்த்தியாகி
செல்வந்தராக வாழ்வார்கள்.

சந்திர புத்தி:- வறுமை கலகம், நண்பர் பகை
உண்டாகும். கடன் கொடுத்தோர் தொந்தரவும்
இருக்கும். ஆனால் குரு, சுக்கிரன், புதன்
பார்வையினால் தனதான்ய சம்பத்தோடு
செல்வரைப் போல் சகலரும் புகழ்ந்து பேசும்
படியான நிலை ஏற்படும்.

செவ்வாய் புத்தி:- பிணி பெருகும். பெற்றோர்
மரணம் ஏற்படும். வறுமையும் உண்டாகும். ஆனால்
குரு, சுக்கிரன், புதன், சந்திரன் பார்வை இருந்தால்
பலவித நன்மைகள் உண்டாகும். செவ்வாய் மகர
ராசியில் உச்சம் பெற்றும் தனுசு, லக்னமாயுமிருந்தால்
மகா சமர்த்தனாகி, பொருள் சேர்த்து பெரும்
பணக்காரராகும் வாய்ப்பு உண்டு.

ராகு புத்தி:- பகைவர்களின் தொந்தரவு அதிகம்
இருக்கும். கஷ்டம் நஷ்டமும் உண்டு. பிணிகள்
பெருகும். ஆனால் சனி கேந்திரத்தில் இருந்து குரு,
சுக்கிரன், புதன், வளர்பிறைச்சந்திரன் பார்வை
ஏற்பட்டால் சுகமான வாழ்வு மலரும்.



குரு புத்தி:- நண்பர்கள் புகழும் படி இனிமை
யாக வாழ்வார்கள். புத்திசாலித்தனமும், கலையும்
நினைவாற்றலும் சிறப்புற்று உத்தியோக
மேன்மையாலும் வியாபார லாபத்தாலும் பொருள்
சேகரித்து தனதானிய சம்பத்துடன் வாழ்வார்கள்.

## 15. பிறந்த வருஷ பலன்கள்

இதுவரை சனி தசை, சனி தசைக்கான புத்திகளின்
பலன்களை கண்டறிந்தீர்கள்.

இனி புதன் தசையைப் பற்றிப் பார்ப்போம்.

**புதன் தசை 17 ஆண்டுகள்**

ஆனந்த வாழ்க்கை அமையும். தன தான்ய லாபம்
பெருகும். பலருடைய புகழ்ச்சி கிட்டும். செல்வம்
சேரும். ஆடை ஆபரணாதிகள் மிகும். கல்வி ஞானம்
ஏற்படும். சுபகாரியங்கள் நிகழும். கௌரவம்
அதிகரிக்கும். ஆகக்கூடி நல்ல வாழ்க்கை அமையும்.

புதன் புத்தி:- சுகமாக வாழ்வார்கள்.
இறைவழிபாடு ஆசார அனுஷ்டானம் எல்லாம்
இருக்கும். செல்வச் செழிப்பு, நண்பர்களின் புகழ்ச்சி
ஏற்படும். இதமான பேச்சு, எளிதில் பொருள்
சேகரிக்கக் கூடிய தந்திரம். அருள் மிகும் பக்தியுடன்
சுகமாக வாழ்வார்கள்.

கேது புத்தி:- துன்பம் துயரம் ஏற்படும்.
உறவினர் கலகம், வறுமை, பிணி, கவலையுடையச்
செய்யும். ஆனால் குரு, சுக்கிரன், வளர்பிறைச்
சந்திரன் பார்வையினாலும், புதன் நட்பு ஆட்சி
உச்சத்தில் இருந்து பார்த்தாலும், நன்மைகள் ஏற்படத்
தொடங்கிவிடும்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



**சுக்கிர புத்தி:-** சுகமான வாழ்வு அமையும். உற்சாகம் அதிகரிக்கும். உடல் ஆரோக்கியம் பெருகும். செல்வம் சேரும். சுகபோகத்துக்குக் குறைவில்லை. இனத்தாரின் புகழ் கிட்டும்.

**சூரிய புத்தி:-** உத்தியோகத்தில் உயர்வு. வியாபாரத்தில் லாபம் கிட்டும். செல்வந்தராக நிலம் வீட்டுடன் வாழ்வார்கள். சுகமான வாழ்வு அமையும். ஞானம், புத்தி, நுட்பம் பெருகும்.

**சந்திர புத்தி:-** குரு பார்வையினால் மஹானாக வாழ்வார்கள். ஞானவானாகவும் திகழ்வார்கள். மனைவி, சகோதரருக்குத் துன்பம் நேரிடலாம். வறுமையும் ஏற்படும். பிணி பெருகும். ஆனால் குரு, சுக்கிரன் பார்வையினால் அனைத்திலும் மேன்மையுறுவார்கள்.

**செவ்வாய் புத்தி:-** பொருள் இழப்பு ஏற்படும். களத்திர சேத துன்பம் காணும். வறுமையில் தவிப்பு உறவில் நண்பர் பகை எல்லாம் ஏற்படும். ஆனால் குரு சந்திரன் பார்வை இருந்தால் தனம் சேரும். சுகவாழ்வு அமையும்.

**ராகு புத்தி:-** மிருகங்களாலும் அரசாங்கத்தாலும் ஆபத்து ஏற்படலாம். பிணியும் பெருகும். ஆனால் குரு, சுக்கிரன், சந்திரன் பார்வை இருந்தால் சகலவித நன்மைகளும் ஏற்படும். செல்வம் சேரும். தன தான்ய சம்பத்துடன் வாழ்வார்கள்.

**குரு புத்தி:-** மனச் சஞ்சலம் ஏற்படும். வறுமை, பிணி பெருகும். அனைவரும் பகைவராவர். கலத்தில் சிக்கி துன்புறுவார்கள். ஆனால் குரு, கோண திரிகோணத்தில இருந்து. ஆட்சி உச்சம் நட்பானால் தன தான்யம் பெருகி சுகமான வாழ்க்கை அமையும்.



**சனி புத்தி:-** கஷ்ட நஷ்டங்கள் உண்டு. வறுமை, நோயும் பெருகும். ஆனால் குரு, சுக்கிரன, சந்திரன பார்வை இருந்தால் கல்வி வளர்ச்சி, உத்தியோக மேன்மை, வியாபார லாபம் ஏற்பட்டு உல்லாச வாழ்க்கை அமையும்.

## கேது தசை 7 ஆண்டுகள்

உடல் பலகீனம் உண்டு. பிணியினால் துன்பம். மனைவிக்குத் துன்பம் ஏற்பட்டு, மரணமடையலாம். ஆனால் குரு, சுக்கிரன், புதன் பார்வை பெற்றிருந்தால் கல்வியும் ஞானமும் பெற்று உத்தியோக மேன்மை அடைந்து வியாபார லாபம் உண்டாகி, செல்வம் சேர்ந்து சீமானாக வாழ்வார்கள்.

**கேது புத்தி:-** உறவினர்களுக்குத் துன்பம், மனைவி மரணம், கலவரம், கஷ்ட நஷ்டம் எல்லாம் தொடரும். ஆனால் கேது கேந்திர ஸ்தானத்தில இருந்து, குரு, சுக்கிரன், புதன் பார்வை பெற்றிருந்தால், பொருள் சேரும். ஞானியாய் வாழ்வார்கள்.

**சுக்கிர புத்தி:-** திகிலும் கலவரமும் உண்டாகும். மனைவிக்குத் துன்பம், மரணம் ஏற்படலாம். ஆனால் சுக்கிரன் உச்சம் அல்லது ஆட்சியிலிருந்து சுப கிரகங்கள் பார்வை பெற்றால் எல்லா சுகமும் ஏற்படும். மனைவி மக்களுடன் சுகமாக வாழ்வார்கள்.

**சூரிய புத்தி:-** பிணி பெருகி, வறுமை ஏற்பட்டு சிரமப்படுவார்கள். ஆனால் சூரியன் ஆட்சி உச்சத்தில் இருந்து குரு, சுக்கிரன், புதன் பார்வை பெற்றால் தனதான்ய சம்பத்து ஏற்படும்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



**சந்திர புத்தி:-** பொருள் இழப்பு, விஷம் சுக்கிரன், புதன் மனைவிக்கு தின்றுதல், வறுமை, பிணி உண்டாகும். மனைவிக்கு மரணம் ஏற்படலாம். ஆனால் குரு, சுக்கிரன், புதன் பார்வையினால் கல்வியில் மேன்மை, உத்தியோகச் சிறப்பு, வியாபார லாபம் பெற்று பிரபு வாழ்க்கை அமையும்.

**செவ்வாய் புத்தி:-** வஞ்சகராலும், துஷ்டராலும் பொருள் இழந்து, வறுமையோடு துன்பமும் பெருகும். ஆனால குரு, சுக்கிரன், புதன் பார்வை இருந்தால் பொருள் சேர்ந்து மனைவி மக்களுடன் சிறப்பாக வாழ்வார்கள். சாமர்த்தியசாலி என்று சகலரும் புகழ்வார்கள்.

**ராகு புத்தி:-** விரோதிகள் பெருகுவார்கள். கஷ்டநஷ்டம் ஏறபட்டு வறுமையில் உழல நேரிடும். விஷம் தின்றுதலும் ஏற்படலாம். ஆனால் குரு, சுக்கிரன், புதன், சந்திரன் பார்வை இருந்தால் பொருள் சேர்ந்து சிறப்பான வாழ்வு அமையும்.

**குரு புத்தி:-** ஞானமும், கல்வியும், கௌரவமும் அமைந்து ஆனந்தமாக வாழ்பவார்கள். புகழ் ஏற்படும். வியாபாரததால் பொருள் சேரும். உத்தியோகம் உயரும். செல்வம் சேரும். இருந்தும் நடனமாதருடைய சேர்க்கையால் சிறிது கெட்ட பெயர் ஏற்படும். பொருளும் கரையும்.

**சனி புத்தி:-** கஷ்ட நஷ்டம் ஏற்படும். வறுமை சூழ்ந்து கவலையில் உழல்வார்கள். ஆனால் குரு, சுக்கிரன், புதன், சந்திரன் ஆகிய 4 கிரகங்களும் மேற்படி தசா நாதனையும் புத்தி நாதனையும் பார்த்தால், உற்சாகமும், தைரியமும், உத்தியோக மேன்மையும் ஏற்பட்டு சுகமாக வாழ்வார்கள்.



**புதன் புத்தி:-** வியாபாரத்தில் லாபம், உத்தியோகத்தில் உயர்வு, கல்வியும், கலையும், ஞானமும் அதிகரித்து சுகமாக வாழ்வார்கள். பொன்னாபரணங்கள் சேர்க்கை உண்டு.

**சுக்கிர தசை 20 ஆண்டுகள்**

உடல் ஆரோக்கியத்தோடு பிற பெண்களின் சுக ஆனந்தத்தோடு, வாகன வசதியோடு வாழ்வார்கள். தன லாபம் ஏற்படும். கல்வி வளர்ச்சி ஏற்படும். பொன் பொருள், பூமி சேரும். சுக்கிரன் தனலாப சுகபாக்கிய ஸ்தானத்தில் நட்பு, ஆட்சி, உச்சமாயிருந்தால் இத்தனையும் ஏற்படும். இன்றேல் தொந்தரவுதான்.

**சுக்கிர புத்தி:-** புகழும் கவர்ச்சியும் மிகும். பொன் பொருள் பூமி லாபம் ஏற்படும். வாகன வசதி பெருகும், பரதைதயருடன் போக பாக்கியம் அனுபவிதது ஆனந்தமாக வாழ்வார்கள்.

**சூரிய புத்தி:-** பிணி பெருகும். வறுமை சூழும். துயரம் பெருகும். ஆனால் தசா நாதனையும் புத்தி நாதனையும் குரு, சந்திரன், புதன் பார்த்தால் தன தான்ய சம்பத்தோடு வாழ்வார்கள்.

**சந்திர புத்தி:-** சீதள நோய்கள், ஜன்னி ஏற்படலாம். வறுமை, கஷ்ட நஷ்டங்களும் உண்டு. ஆனால் லக்கினத்தை குரு, புதன் பார்த்தால் பலவித நன்மைகள் ஏற்படும். மிகவும் சிறப்பாக வாழ்வார்கள்.

**செவ்வாய் புத்தி:-** மனக்கவலை உண்டு. திகில் ஏற்படும். வறுமையினால் துடித்துப் போவார்கள். ஆனால் குரு, புதன் பார்வையிருந்தால் பல நன்மைகள் ஏற்பட்டு செல்வமும் பெருகும்.



https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



**ராகு புத்தி:-** உற்சாகம், உடல் நலம் எல்லாம் உண்டு. குரு, புதன் பார்வை இருந்தாலும் கேந்திரத்தில் ராகு இருந்தாலும் தன தான்ய சம்பத்து ஏற்படும்.

**குரு புத்தி:-** சுக்கிரன் நட்பு, ஆட்சியாக இருந்து குருவும் தனுசு, மீனம் கடக ராசியில் இருந்தால் பலவித நன்மைகள் ஏற்படும். தன தான்யங்கள் ஆபரண சேர்க்கை யாவும் ஏற்படும்.

**சனி புத்தி:-** பலருடைய பாராட்டுதல் ஏற்படும். செல்வம் உற்சாகமும், தனதான்யமும் உண்டாகும். செல்வம் சேர்ந்து புகழ் கூடும்.

**புதன் புத்தி:-** உலகோர் புகழும்படி செல்வத் தன்மையான வாழ்க்கை அமையும். பெருமை, தைரியம், உற்சாகம், இவற்றோடு கல்விச் சிறப்பும் ஏற்படும்.

**கேது புத்தி:-** துன்பம் பெருகும், பிணியும் கூடும், விரோதிகள் பெருகுவார்கள். வறுமையும் ஏற்படலாம். ஆனால் குரு, புதன், சந்திரன் ஆகியோர் லக்னத்தை யாகிலும், தசா புத்தி நாதனையாகிலும் பார்த்தால், பொருள் சேர்ந்து சகல சௌபாக்கியங்களுடன் வாழ்வார்கள்.

ஆங்கிலக்கணக்கில் ஒவ்வொரு ஆண்டுக்கும் ஒரு எண்ணிக்கை உண்டு. அது தொடர்ந்து முடிவில்லாமல் அதற்கடுத்த வருஷம் என்று ஓடிக் கொண்டிருக்கும்.

ஆனால் தமிழ் கணக்கில் அப்படியில்லை. ஒவ்வொரு ஆண்டிற்கும் ஒரு தனிப்பட்ட பெயர் உண்டு. அதாவது 60 வருஷங்கள். அது முடிந்ததும்



பழையபடி முதல் ஆண்டின் பெயரே திரும்பவும் வரும்.

நீங்கள் எந்த ஆண்டில் பிறந்தீர்களோ, அதற்கான பலனைப் பாருங்கள். ஜாதகத்தைப் பார்த்து பிறந்த ஆண்டைத் தெரிந்து கொள்ளலாம்.

**பிரபவ:-** பிறருக்குதவக் கூடிய வள்ளல். நல்ல குணம் நிறைந்தவர். புத்திசாலி, நல்ல வழியிலேயே நடப்பார்.

**விபவ:-** உற்சாகத்தோடு இருப்பார். வாழ்நாள் முழுவதும் புகழ் இருக்கும். சிற்றின்ப ஆசை மிகுந்தவர்.

**சுக்கில:-** பலவீனமான உடல். சுத்தமாயிருப்பார். தரும குணம் உண்டு. கணக்கில் வல்லவர். சொன்ன சொல் தவறமாட்டார்.

**பிரமோ தூத:-** மன்னனைப் போன்று வாழ்வார். நல்ல வீரர். ஆபரண அலங்காரத்தில் விருப்பம் உண்டு. சுபமான சொற்களையே பேசுவார்.

**பிரஜோற்பத்தி:-** நயமாகப் பேசுவார். செல்வமும் புகழும் ஓங்கும். நல்ல இல்லறம் அமையும். புண்ணிய புருஷர்.

**ஆங்கிரச:-** வாக்குத் தவறாதவர். தயை உண்டு. சிறந்த கல்விமான். இனிய சொற்கள் பேசுவார். தவத்திலும் பிரார்த்தனையிலும் விருப்பம் உண்டு.

**ஸ்ரீமுக:-** எடுத்த காரியத்தை இனிதே முடிப்பார். சுகபோகம் உண்டு. பிற பெண்களிடம் ஆசை வைப்பார். கீர்த்தி உண்டு.

**பவ:-** கோபம் உள்ளவர். உடல் வலிமை உண்டு. சொன்ன சொல்லை நிறைவேற்றுவார். புகழத்தக்க பிரசித்தமானவர்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



**யுவ:-** அவலட்சணமான உடல், சஞ்சல புத்தி, அக்கிரம நடவடிக்கை, பேராசை, யாவும் இருக்கும். கெட்ட சேர்க்கைகளுக்கு இடம் கொடுக்கக் கூடியவர்.

**தாது:-** வைத்தியம் அறிந்தவர். சம்பிரமானவர். ரசவாதத்தில் ஈடுபடக் கூடியவர். செல்வம், புகழ், நீங்காத நட்பு ஆகியவை இருக்கும்.

**ஈசுவர:-** யோகக்காரர். சூரியனை வணங்குவார். அழகான உடல் அமைப்பு, இனிமையான பேச்சு, செல்வச் சிறப்பு இருக்கும். குழந்தைகள் அதிகம் உண்டு.

**வெகுதன்யா:-** அளவோடு உண்பார். செல்வந்தர். குண மேன்மை, நன்மை தரும் காரியங்களைச் செய்வார். மிகுந்த புகழ்பெற்றவர்.

**பிரமாதி:-** பெருமை உண்டு. ஈயாதலோபி என்ற பெயரெடுப்பார். தீமையான செயல்களில் ஈடுபடக் கூடியவர். கோபம் உண்டு. விகாரமான தோற்றம்.

**விக்கிரம:-** மகிழ்ச்சி மிகுந்தவர். செல்வம் திரளும். பெரிய குடும்பம், கம்பீர பார்வை, கவலை சிறிதும் இல்லாதவர்.

**விசு:-** மது அருந்துபவர். திருட்டுத் தொழிலில் ஈடுபடுவார். புத்திரப் பேறு இருக்காது. கொடிய செயல்களைச் செய்யக் கூடியவர்.

**சித்திர பானு:-** தற்பெருமை இருக்கும். லலித கலைகளில் விருப்பம் உடையவர். சுக போகத்தில் ஆசை. நல்ல பொருள்களில் விருப்பம் காட்டுபவர்.

**சுபானு:-** தருமம் செய்பவர். எங்கும் வரவேற்பு இருக்கும். உற்சாகமாகப் பேசுவார். குல ஆசாரங்களை அனுசரிப்பார். நல்ல மனைவி மக்கள் அமையும்.



**தாரண:-** பக்தி சிரத்தை உடையவர். உறுதியான உடல். செல்வம் உடையவர். சாதுரியமாகப் பேசுவார். சாமர்த்தியசாலி.

**பார்த்திப:-** தலைமை தாங்கும் தகுதி உண்டு. பெரியோர்களை மதிப்பவர். நறுமணப் பொருள்களில் பிரியம். மங்கையரைக் காலத்தோடு கூடுபவர்.

**விய:-** செல்வம் மிகுந்தவர். நல்ல நட்பு உண்டு. கோபம் அதிகம். பெண்களிடம் அதிக மோகம். ஆனால் உறுதி இல்லாத கோழை மனம் படைத்தவர்.

**சர்வசித்து:-** சிறந்த நூல்களைத் தேடி வாசிப்பார். கள்ளம் கபடம் இல்லாதவர். செல்வம் மிகும். நேசித்தவரை ஆதரிப்பவர். இனிமையாகப் பேசுவார்.

**சர்வதாரி:-** சிற்ப சாஸ்திரம் அறிந்தவர். பிரபுக்கள் தொடர்பு இருக்கும். எல்லாவற்றிலும் சாமர்த்தியசாலி. நியாயத்தை எடுத்துச் கூறுபவர்.

**விரோதி:-** மருத்துவம் அறிந்தவர். ஞானத்தை உபதேசிக்கக் கூடியவர். தைரியம் மிகுந்தவர். காம நூல்கள் படித்தவர். ஒழுக்கம் உள்ளவர்.

**விக்ருதி:** மருத்துவம், ஜோதிடம், மாயமந்திரம் போன்ற சாஸ்திரங்களில் ஈடுபாடு கொண்டவர். சொல் தவறாதவர், நியாயத்திற்குக் கட்டுப்பட்டவர்.

**கர:-** அனைவரும் இவரை இழிவாகப் பேசுவார்கள். உடல் வலிமை உண்டு. வறுமையும் உண்டு. சாமர்த்தியம் இருக்காது. ஏதாவது கவலையில் ஆழ்ந்திருப்பார்.

**நந்தன:-** திறமை உண்டு. அனைவரையும் வசிகரத்தால் வசப்படுத்தி விடுவார். சாஸ்திரங்களைப் போதிப்பவர். நல்ல வம்சத்தைச் சேர்ந்தவர்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



**விஜய:-** நேர்மையானவர். தியானத்தில் ஈடுபடுபவர். லட்சுமியின் பூரண கடாட்சம் உண்டு. அழகாக இருப்பார். சாமர்த்தியசாலி.

**ஜய:-** தயை மிகுந்தவர். பெண்களிடம் அதிக ஆசை உண்டு. பொய் பேச மாட்டார். எதிலும் நடு நிலைமை உண்டு.

**மன்மத:-** பராக்கிரமம் உண்டு. எதிரிகள் இவருக்குப் பயப்படுவர். உண்மையே பேசுவார். காம நூல்களைப் படித்து அதன்படி சுகிப்பவர். மகிழ்ச்சியோடிருப்பார்.

**துன்முகி:-** பிணியால் வாடுபவர். ஒழுக்கக் குறைவும் உண்டு. அதிகமாக உண்பார். கோபம் அதிகம் உண்டு. குரோத எண்ணம் கொண்டவர்.

**ஏவிளம்பி:-** பாவ குணம் உண்டு. சூதாடுவதில் விருப்பம். உண்மை பேச மாட்டார். பிறருடைய குறைகளைப் பேசியே மகிழக் கூடியவர்.

**விளம்பி:-** பக்தியுடையவர். தயை உண்டு. சாந்தமும் உண்டு. மரியாதை உடையவர். ஞானவான். கண்ணியமாக நடந்து கொள்வார்.

**விகாரி:-** உற்றார் உறவினரின் ஒத்துழைப்பு இராது. செல்வம் இருந்தாலும் பயந்து கொண்டே வாழ்பவா. மக்கட் பேறு இருக்காது.

**சார்வாரி:-** போகத்தில் ஈடுபாடு அதிகம். நல்லொழுக்கம் உண்டு. உண்மை பேசுபவர். விரதங்களை அனுட்டிப்பார். அடியார்களுக்குத் தொண்டு புரிவார்.

**பிலவ:-** செல்வம் நிறைந்தவர். சாந்த குணம் உண்டு. பெண்களிடம் விருப்பம் அதிகம். மாந்திரீகம்



ஜாலவித்தை அறிந்தவர். முன் யோசனையோடு பேசுவார்.

**சுபகிருது:-** உறவினர்களை ஆதரிப்பார். பெண்களை ஏமாற்றிவிடுவார். தந்திரசாலி. வீரர். தரும சிந்தனை உண்டு.

**சோபகிருது:-** பல மொழிகள் அறிந்தவர். பேரின்ப ஈடுபாடு மிகுந்தவர். நல்ல தோற்றம் கொண்டவர். ஆற்றல் மிக்கவர். அமைச்சராக ஆகலாம்.

**குரோதி:-** அகட விகடம் பேசுபவர். தாசிகளிடம் நேசம் கொள்வார். சுவை மிகுந்தவர். வைராக்கியம் உண்டு. தாக்கம் செய்வார். பலர் வெறுப்புக்கு ஆளாவார்.

**விசுவாவசு:-** பெரிய குடும்பங்களை ஆதரிப்பார். தயாள குணம் உண்டு. ஒழுக்கம் உள்ளவர். செல்வம் நிறைந்தவர். களங்கமற்ற உள்ளம் உடையவர்.

**பராபவ:-** உடன் பிறப்பு இருக்காது. மூர்க்கர். உறவினர்களை அழிப்பவர். கலகம் உண்டாக்குவார். பாவ காரியங்களைப் பிரியமுடன் செய்வார்.

**பிலவங்க:-** அறிவு மட்டு. பரத்தையரின் ஆசைக்கு உட்படுபவர். தாழ்ந்தவர்களையே நேசிப்பார். யோக்கியதை குறைவு.

**கீலக:-** பக்தி சிரத்தை உள்ளவர். அழகானவர். அன்புடையவர். உடல் வலிமை இருக்கும். விவேகமானவர். சுக போகம் அனுபவிப்பார்.

**சௌமிய:-** புராண இதிகாசங்களை ஆழ்ந்து படிப்பவர். சாந்த குணம் உண்டு. அன்பாகப் பழகுவார். பிறர் கொண்டாடுவர். வீரரைப் போன்றவர்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



**சாதாரண:-** மிகுந்த பாண்டித்தியம் உள்ளவர். தாயைப் போற்றுபவர். வாய்மையே குறிக்கோளாக உடையவர். நிலையான மேம்பாட்டை உடையவர்.

**விரோதிகிருது:-** கோபம் மிக்கவர். எங்கும் நடந்தே செல்வார். வறுமையும் பிணியும் உண்டு. பிறர் பொருளை அபகரிக்க விரும்புவார்.

**பரிதாபி:-** உபயோகமற்ற வீணர். பிணி உண்டு. பிறரிடம் அன்பு காட்டாதவர். நற்குணம் கிடையாது.

**பிரமாதீச:-** உறவினர்களை விரோதித்துக் கொள்வார். பிறர் மனைவியை விரும்புபவர். நல்ல காரியங்களில் நாட்டமில்லாதவர். திமையானவர்.

**ஆனந்த:-** தான தருமம் செய்வார். சகல சாஸ்திரங்களையும் அறிந்தவர். பொறுமை மிக்கவர். உதவி செய்யக் கூடியவர்.

**ராட்சச:-** தீய செயல்களில் ஈடுபடுபவர். பெண்களைப் புகழ்ந்து பேசுபவர். சூதாடுபவர். போக்கிரித்தனம் உண்டு.

**நள:-** நல்லொழுக்கம் உண்டு. தருமங்களைச் செய்யக் கூடியவர். இனிய உணவுகளைத் தேடி உண்பவர். புத்திசாலி. காலம் அறிந்து நடந்து கொள்பவர்.

**பிங்கள:-** பழி பாவங்களுக்கு அஞ்சுபவர். செல்வம் நிறைந்தவர். நல்லதைப் பேசி நற்காரியங்களைச் செய்பவர். ஞான நெறி உள்ளவர். யோகம் அறிந்தவர்.

**காளயுக்தி:-** புகழ் ஓங்கும். மூன்று காலங்களையும் அறிந்த ஞானி. குருவை மதிப்பவர். பஞ்சலோகங்களின் தன்மையை அறியக்கூடிய நிபுணர்.



**சித்தார்த்தி:-** நற்குணமும் செல்வமும் உள்ளவர். குரு பக்தி உண்டு. இறைவனை வணங்கி ஆராதிப்பவர். சுக போகங்களை அனுபவிக்கக் கூடியவர்.

**ரௌத்திரி:-** பிறர் ஆலோசனையைக் கேட்க மாட்டார். பிறர் மனைவியைப் புகழ்ந்து பேசி மகிழ விரும்புவார். பெருமை இல்லாதவர். மூர்க்க குணம் உண்டு.

**துன்மதி:-** விளையாட்டுப் பிரியர். பொன் பொருள் சேகரிப்பு உண்டு. எடுத்த காரியத்தை முடிக்க மாட்டார். வெட்கம் மிகுந்தவர். பொருள்களைச் சேகரித்துக் காப்பாற்றி வாழ்பவர்.

**துந்துபி:-** அறிஞர்களிடத்தும் சுற்றத்தாரிடத்தும் பிரியம் கொண்டவர். அழகாயிருப்பார். கல்வி கேள்விகளில் சிறந்தவர். புகழ் சேர்ந்து இன்பமாக வாழ்பவர்.

**ருத்திரோத்காரி:-** உண்மை பேசுபவர். பிரபுவைப் போன்ற வாழ்க்கை உடையவர். ஆசிரியர்களிடம் மதிப்புடையவர். அறிஞர் சபையை அதிகமாக நாடுபவர்.

**ரத்தாட்சி:-** வீண் சண்டை சச்சரவில் ஈடுபடுபவர். சிவந்த நிறத்தவர். முகத்தில் அம்மை வடுக்கள் உண்டு. பேராசை உள்ளவர். கண் சிவப்பாக இருக்கும்.

**குரோதன:-** சற்று கஞ்சத்தனம் இருக்கும். பொய் பேசுபவர். குரோத குணம் உண்டு. பிறர் பொருளை அபகரிக்க விரும்புபவர். உடல் உழைப்பு உண்டு. திடமான உடல் உள்ளவர்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



அட்சய- எதையும் கண்டிப்பாகப் பேசுவார். எல்லாப் பொருள்களையும் நிறைவாகப் பெற்றிருப்பவர். வாக்குறுதி உண்டு. தீய வழிகளில் ஈடுபட மாட்டார்.

## 16. திருமணப் பொருத்தங்கள் பத்து

குருபலம் ஏற்பட்டதும் திருமணத்திற்குப் பொருத்தங்கள் பார்க்கப்படும்.

நமது முன்னோர்கள் - முக்கியமான பத்து விதமான பொருத்தங்களைக் கூறிச் சென்றுள்ளனர்.

விவாகம் என்பது ஆயிரங் காலத்துப் பயிர் என்பது ஆன்றோர் வாக்கு.

கணவனும் மனைவியும் கடைசிவரை ஒற்றுமையாயிருந்து வாழ்க்கையை நடத்திச் செல்லவும் இது உதவுகிறது.

வாழ்க்கை என்பது இரட்டை மாட்டு வண்டி மாதிரி. இரண்டு மாடுகளும் இடக்கு செய்யாமல் நேராக நடந்தால்தான் வண்டி நேராக ஓடும். இதில் ஒரு மாடு இடக்கு செய்துவிட்டால் வண்டி ஓடுவது எப்படி?

இந்தப் பத்துப் பொருத்தங்களில் ஐந்து சாதகமாக இருந்தாலும் தாராளமாக விவாகம் செய்து வைக்கலாம்.

முதலாவது தினப் பொருத்தம் - அதாவது சதிபதி இரண்டு பேரும் நோய் நொடி இல்லாமல் வாழ வேண்டுமென்பதற்காக தினப்பொருத்தம் பார்க்கப்படுகிறது.

இரண்டாவதாக கணப் பொருத்தம் - அதாவது அவள் சயன போக பாக்கியத்தையும் சோபனாகாரத்தையும் குறிக்கும். குடும்பத்தில் சந்ததியுண்டா, எத்தனை குழந்தைகளுக்குப் பாக்கியமுண்டு, கருமம் செய்ய ஆண் குழந்தை உண்டா என்பனவற்றை இது அறிவிக்கிறது.

மூன்றாவது ஏக நட்சத்திரப் பொருத்தம் - ரோகிணி, திருவாதிரை, பூசம், மகம், அஸ்தம், திருவோணம் இந்த ஆறு நட்சத்திரங்களும் ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒன்றாக அமைந்திருந்தால் தாராளமாகத் திருமணம் செய்து வைக்கலாம்.

அசுவனி, கிருத்திகை, மிருக சிரிசம், புனர்பூசம், உத்ரம், சித்திரை, அனுஷம், உத்திராடம் இந்த எட்டு நட்சத்திரங்களானால் மத்திமம்.

மற்ற பதின்மூன்று நட்சத்திரங்களும் பொருந்தாது.

நான்காவது ஸ்திரீ தீர்க்கப் பொருத்தம். அஷ்ட லட்சுமி யோகங்களில் எந்த யோகம் இருவருக்கும் உண்டு என்பதைத் தெரிந்து கொள்ள முடியும்.

ஐந்தாவது யோகப் பொருத்தம் புருஷன் மனைவிக்குள் அன்னியோன்னிய பாவம், நட்பு, காதல் எந்தமட்டில் உள்ளது என்பதைத் தெரிந்து கொள்ள இயலும்.

ஆறாவது - ராசிப் பொருத்தம் - குடும்ப சுக விருத்தி எந்த மட்டில் உள்ளது என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

ஏழாவது - ராசி அதிபதி நல்ல விதத்திலிருந்தால் எத்தனை பேர் குடும்பத்தைப் பிரிக்கப் பார்த்தாலும், மணமக்கள் செவிசாய்க்க மாட்டார்கள்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



எட்டாவது வசியப் பொருத்தம். ஆணை பிற மாதரையோ அல்லது பெண் பிற ஆணையோ ஏறெடுத்துப் பார்க்க மாட்டார்கள் என்பது விளங்கும்.

ஒன்பதாவது ரச்சுப் பொருத்தம். பொருத்தங்களில் இது அதி முக்கியமானது. அதாவது மாங்கல்ய பலத்தை இது குறிக்கும்.

பத்துப் பொருத்தங்களில் ஒன்பது பொருத்தங்கள் சரியாக அமைந்து ரச்சுப் பொருத்தம் சரியில்லை என்றால் விவாகம் செய்து வைப்பதற்கில்லை.

ஆனால் ஆணுக்கும் பெண்ணுக்கும் ஏழாமிடத்திலாவது அல்லது எட்டாமிடத்திலாவது ஜனன காலத்தில் கிரகங்களே இல்லாமலிருந்தால் தாராளமாக விவாகம் செய்து வைக்கலாம். இந்த மாதிரி ஜாதகங்களுக்கு ரச்சு அடிபட்டுப் போகிறது.

கடைசியாக வேதைப் பொருத்தம் பத்தாவது பொருத்தமாகும்.

இது சரியாக அமைந்து விட்டால் வாழ்க்கையில் ஏற்படும் கஷ்ட நஷ்டங்கள் எல்லாம் தவிடு பொடியாகி விடும்.

இவற்றையெல்லாம் சீர் தூக்கிப் பார்த்துதான் நம் முன்னோர்கள் பத்துப் பொருத்தங்களை நிர்ணயித்துள்ளனர்.

இதில் மொத்தம் 21 பொருத்தங்கள் உள்ளன என்று வேறு சில நூல்கள் கூறுகின்றன. அதாவது ஜாதிப் பொருத்தம், நாடிப் பொருத்தம், கணிதம், ஆயம், பூதம், பஞ்ச பட்சிலிங்கம் போன்ற பதினொரு பொருத்தங்களையும் சேர்த்துள்ளனர். இதையெல்லாம் பார்ப்பதென்றால், அது அனுமார் வால்



நீண்டு கொண்டு போவதைப் போல முடிவு இல்லாமல் நீண்டு கொண்டே போகும்.

எனவே நம் தென்னாட்டில் பத்துப் பொருத்தங்களுக்கே முக்கியத்துவம் அளித்துள்ளனர். இருபத்தொன்று பொருத்தங்களையும் பார்ப்பதென்றால் வைத்தியன் காய்கறி வாங்கப் போன கதையாக முடியும். கொத்தவரங்காய் பித்தம், உருளைக்கிழங்கு வாயு, கத்தரிக்காய் சூடு, பூசணிக்காய் குளிர்ச்சி, மாங்காய் உஷ்ணம் என்று எதையும் வாங்காமல் தனக்கு விருப்பமான சுண்டைக் காயை வாங்கி வருவார். இது அவருக்குப் பிடித்ததாக இருக்கலாம். குடும்பத்தில் மற்றவர்களுக்குப் பிடிக்க வேண்டுமே!

அது போலதான் 21 பொருத்தங்களையும் பார்க்க வேண்டுமென்பதில்லை.

நடைமுறையில் செவ்வாய் தோஷமுள்ள ஜாதகத்திற்குச் செவ்வாய் தோஷமுள்ள ஜாதகத்தை முடித்து வைத்தால் போதும்.

சூரியன் ஆணுக்கோ, பெண்ணுக்கோ இரண்டாமிடத்திலிருந்தால் அதுபோலவே அமைந்த ஜாதகங்களைச் சேர்த்து வைக்க வேண்டும்.

இப்படிப்பட்ட ஜாதகங்களுக்குப் பத்து பொருத்தங்களில் ஒன்பது சரியாக இருந்த போதிலும் தாம்பத்திய வாழ்க்கை சுகப்படுவதில்லை. இது, அனுபவம் கற்றுக் கொடுத்த பாடமாகும்.

இதேபோல் ஒரு பெண்ணுக்கு ஏழில் சந்திரன் உள்ளதாக வைத்துக் கொள்வோம். இந்தப் பெண்ணுக்கு ஏழில் சந்திரன் உள்ள மணமகனை தான் தேர்ந்தெடுக்க வேண்டும். இன்றேல் வண்டி தடம் மாறிவிடும்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



திருமணங்களில் பலவகை உண்டு. காந்தர்வத் திற்கு பொருத்தங்களே பார்க்க வேண்டிய அவசிய மில்லை.

காடு, வனங்களில் பெண்ணைச் சந்தித்து காதல் கொண்டு திருமணம் செய்து கொள்வதுதான் காந்தர்வமாகும். பஸ் ஸ்டாண்டிலும், திரையரங்கிலும் கண்டு காதல் கொள்வது காந்தர்வமாகாது.

அதே போல் அத்தை மகளையோ அல்லது அக்காள் மகளையோ விவாகம் செய்து கொள்வதாயிருப்பினும் எந்த விதப் பொருத்தங்களும் பார்க்க வேண்டிய அவசியமே இல்லை. மனப் பொருத்தம் இருந்தாலே போதும். திருமணத்திற்கு ஏற்பாடு செய்து விடலாம்.

சுபம்

https://lankathamilnews.blogspot.com